விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 30 வியாழக்கிழமை (14.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 208

# சர்வதேச நீதிபதிகளை வலியுறுத்த மாட்டோம்

## சம்பந்தன் தடாலடி




(கொழும்பு)
யுத்தகாலத்தில் இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தகுற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தால் ஏற்படுத்தவுள்ளதாக கூறப்படும் உள்நாட்டுப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை தொடர்புபடுத்தி வலியுறுத்த அவசியமில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தென்பகுதி ஊடகமான ரிவிரவிடம் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்கம் நிலைத்திருக்க பொறுப்புகூறல் அவசியம் - நிஷா



(கொழும்பு)
இலங்கையில் நிலையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த பொறுப்புக்கூறல் அவசியம். இலங்கை அரசாங்கத்தின் அர்த்த பூர்வமான நல்லிணக்க செயற்பாடுகளுக்கு அமெரிக்கா முழு ஆதரவை வழங்கும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய 24ஆம் பக்கம் பார்க்க....

## முழு உலகும் இலங்கையை அவதானிக்கின்றது - ரொம்



(நியூயோர்க்)
நல்லிணக்கத்தை இலக்காக கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதும், அதற்கேற்ற கொள்கையை உருவாக்குவதும் அவசியம்.
இலங்கையில் என்ன நடக்கிறது என்பது உலகம் முழுவதும் 23ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை உள் விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையீடு

### அரசாங்கத்தை சாடுகிறார் பீரிஸ்

(கொழும்பு)
இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையிடுவதற்கு தற்போதைய அரசாங்கம் கதவுகளைத் திறந்து கொடுத்துள்ளது என முன்னாள்வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிரணியினர் நேற்று புதன்கிழமை கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த 24ஆம் பக்கம் பார்க்க....

## காலநிலை மாற்றம்!

(கொழும்பு)
இன்று தொடக்கம் காலநிலையில் மாற்றம் ஏற்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
இன்றிலிருந்து எதிர்வரும் 18 ஆம் திகதி வரையில் நாட்டின் காலநிலையில் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஆற்றில் நீராடச் சென்ற குடும்பஸ்தர் உயிரிழப்பு




(முக்கொம்பன்)
ஆற்றில் நண்பர்களுடன் நீராடச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் நீரில மூழ்கி மரண மடைந்துள்ளார்.
இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2 மணியளவில் கிளிநொச்சி சேத்துக்கண்டி முரசுமோட்டை பகுதியிலுள்ள 23ஆம் பக்கம் பார்க்க....

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ் நகருக்கு கேரள கஞ்சாவுடன் வந்த நபர் ஒருவரை நேற்றைய தினம் அதிகாலை செம்மணிப்பகுதியில் வைத்து யாழ். குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர். 24ஆம் பக்கம் பார்க்க....

## தகவல் உரிமைச் சட்டத்திற்கு பாராட்டு



(கொழும்பு)
நாடாளுமன்றத்தில் தகவல் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கு, தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் பாராட்டுத் தெரிவித்தார்.
நேற்று இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், பிரதி 24ஆம் பக்கம் பார்க்க....

## மேற்குலகம் பழிவாங்குகிறது

(யாழ்ப்பாணம்)
மேற்குலக நாடுகள் தன்னை பழிவாங்குவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பத்தரமுல்லையில் அமைந் 23ஆம் பக்கம் பார்க்க....

தரம் - 5

புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இன்றைய வலம்புரியில்...

### வித்தியா படுகொலை வழக்கு

## 12 சந்தேக நபர்களுக்கு 26ஆம் திகதிவரை மறியல்

(யாழ்ப்பாணம்)
புங்குடுதீவு பாடசாலை மாணவி படுகொலை தொடர்பாக கைது செயப்பட்டுள்ள 12 சந்தேக நபர்களையும் எதிர்வரும் யூலை 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் எம்.எல்.றியால் 24ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர்கள் சமஷ்டி கோரிக்கையை கைவிட வேண்டும் - சம்பிக்க

(கொழும்பு)
நாட்டில் நல்லிணக்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டுமாயின் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்க வேண்டுமாயின் முதலில் தமிழ் அரசியல் கட்சிகளும், குழுக்களும் தமது பிரிவினைவாத இனவாத கொள்கைகளையும் சமஷ்டி கோரிக்கையையும் கைவிட வேண்டும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.
தமிழர் தரப்பு கிடைக்காத ஒரு சமஷ்டி முறை 23ஆம் பக்கம் பார்க்க....

# அலைபேசி விற்பனை நிலையம் தீயில் எரிந்து முற்றாக சேதம்

## ஒரு மில்லியன் ரூபாய் வரை நட்டம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி நகரப் பகுதியில் அமைந்துள்ள அலைபேசி விற்பனை நிலையத்தில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில், விற்பனை நிலையம் முற்றாக எரிந்து சேதமாகியுள்ளதுடன் அருகிலிருந்த இரண்டு பலசரக்குக் கடைகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதென அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

அலைபேசி விற்பனை நிலையத்தில் இருந்த ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான பொருட்களும், இரண்டு பலசரக்கு கடைகளில இருந்த 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களும் தீயில் எரிந்து நாசமாகியுள்ளன. மேற்பட்டி தொலைத்தொடர்பு நிலையத்தின் பின்பக்க கூரையில் தீ பரவத்தொடங்கியுள்ளது. இதனையடுத்து, கூரை ஓடுகள் கீழே விழும் சத்தத்தைக் கேட்ட அருகில் இருந்த தனியார் வங்கியின் காவலாளி, இது தொடர்பில் அச்சுவேலி பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். இதனையடுத்து, சம்பவ இடத்துக்குச் வந்த பொலிஸார், இராணுவத்தினர் பொது மக்களின் உதவியுடன் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். எனினும், அலைபேசி விற்பனை நிலையம் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது. தொடர்ந்து, பலசரக்குக் கடைகளுக்கு பரவிய தீயை யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், தனிப்பட்ட விரோதம் காரணமாக அலைபேசி நிலையத்துக்கு தீ வைக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவித்தனர். மேலும் தடய அறிவியல் பொலிஸார் மூலம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (செ-11)


### வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள அச்சகத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. (புத்தகம் கட்டுனர்) (Binding) பழக விரும்புவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:-
077 282 4321
(C-5181)


## சமையல் செய்த நிஷா பிஸ்வால்




(கொழும்பு)

மூன்று நாள் பயணமாக இலங்கைக்கு வந்துள்ள அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால், இலங்கையின் அரச தொலைக் காட்சியின் சமையல் நிகழ்ச்சி ஒன்றில் நேற்று பங்கேற்றார்.

ரூபவாஹினி தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும், "நுக செவன" என்ற சமையல் நிகழ்ச்சியில், நேற்றுக் காலை நிஷா பிஸ்வால் கலந்து கொண்டார்

இலங்கையின் பிரபல சமையற் கலை நிபுணரான பப்ளிஸ் சில்வாவின் வழிகாட்டலில், நிஷா பிஸ்வால், உள்ளூர் உணவு ஒன்றை சமைத்துக் காட்டினார். (செ-11)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்







திரு. அருமைத்துரை பிரேமதாஸ்
BA, PGDE, SLPS III

திரு. மகாதேவா யூஜின் கலிஸ்ரஸ்
B. Sc, PGDE (merit), MED (Hons)

திரு. சிதம்பரநாதன் ரமேஸ்
BA, DIP in Edu
MA (தமிழ்) M.phil (தமிழ்)

எமது கல்லூரியின் ஆசிரியர்களாக கடமையாற்றும்
திரு. **அ.பிரேமதாஸ்** அவர்கள் அதிபர் தரம் IIIற்கு பதவி
உயர்வு பெற்றமைக்காகவும், திரு. **சி.ரமேஸ்**
அவர்கள் முதுதத்துவமாணி (தமிழ்) பெற்றமைக்காகவும்,
திரு. **ம.யூஜின் கலிஸ்ரஸ்** அவர்கள் முதுகல்விமாணி
பட்டம் பெற்றமைக்காகவும் எமது
கல்லூரிச் சமூகம் பெருமகிழ்வு அடைவதுடன் இவர்கள்
மேன்மேலும் பதவி உயர்வுகள், பட்டங்கள் பல பெற்று
பாரெங்கும் புகழ் பெற்றிட அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(சி-5180)

## துயர் பகிர்கின்றோம்



எமது லயன்ஸ் கழகத்தின்
தற்போதைய தலைவர்
பேராசிரியர் கந்தையா தேவராசா
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி **கந்தையா அன்னம்மா**
காலமாகியமையிட்டு துயர்
உற்று இருக்கும்
குடும்பத்தினருடன் நாமும்
துயரினைப் பகிர்ந்து கொள்கிறோம்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கிறோம்

லயன்ஸ் கழகம்
இணுவில்

(5212)

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் சிவமலர் சிறிதரன்

எமது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர்
திருமதி **பகீரதன் சிவநிதி**
அவர்களின் சகோதரி **சிவமலர்**
**சிறிதரன்** அவர்களின்
மரணச் செய்தி அறிந்து
துயரடைகின்றோம். அன்னாரின்
இழப்பால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பாடசாலைச் சமூகம்,
யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதய
ஆரம்ப பாடசாலை.

(5212)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா அன்னம்மா



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா அன்னம்மா 13.07.2016 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லக்குட்டியர் கந்தையாவின் அன்பு மனைவியும் கமலேஸ்வரி,காலஞ்சென்ற இராசேஸ்வரி, மற்றும் பாலசுப்பிரமணியம் (இலங்கை மத்திய வங்கி), பேராசிரியர் தேவராசா (யாழ்.பல்கலைக்கழகம்), ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான பரஞ்சோதி , தேவராஜலிங்கம் மற்றும் சாந்தாதேவி , இலட்சுமிதேவி ஆகியோரின் அன்புமிக்க மாமியாரும், சர்மிலா (நியூசிலாந்து), சர்வேந்தன் (அவுஸ்திரேலியா), சுகன்யா(கனடா), உமையவள்(அவுஸ்திரேலியா), மலர்விழி (இங்கிலாந்து),சயந்தன்( பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி),சதீசன்(விவசாய பீடம்), சசிகரன்(இங்கிலாந்து), சாம்பவி, சங்கீதன், சஞ்சீவன்(கொக்குவில் இந்துக் கல்லூரி), லீலாவதி(நோர்வே), புவனேந்திரகுமார் (டென்மார்க்), ஞானேந்திரகுமார் ( நோர்வே),சாந்தி(டென்மார்க்),தர்மதா(ஜேர்மனி), வதனா(ஜேர்மனி), மயூரன் (இங்கிலாந்து), கோகிலா(இங்கிலாந்து), சங்கர்(கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.07.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு பகல் 11.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உழவர் வீதி, தாவடி வடக்கு,
தாவடி.

தகவல்: குடும்பத்தினர்
0777982688

(சி-5186)


வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# சுடுகாடாக மாறும் இலங்கை!

## பசில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை இன்று சுடுகாடாக மாறிவருவதாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் ஜெனிவா நகரில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பத்தரமுல்லயில் நேற்று இடம்பெற்ற அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகள் சம்மேளனத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஆட்சிக்கு வரும் போது பெரிய வாக்குறுதிகளை வழங்கியது. அரசியலமைப்பு திருத்தம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்தல் போன்ற வாக்குறுதிகளை வழங்கியது.

ஆனால், பாராளுமன்ற தேர்தல் முறையிலான அரசியலமைப்பை ஓரமாக வைத்து விட்டு கொடி, தேசிய கீதம், அரச மரம் என்பவற்றில் திருத்தங்களை மேற்கொள்ள தயாராவதாகவும் பசில் குற்றம் சாட்டினார்.

இதேவேளை, அரசியல் பழிவாங்கல் மற்றும் வெவ்வேறு வகையிலான அடக்குமுறைகளையும் அரசு ஏற்படுத்தி வருவதாக அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன் காரணமாகவே, நாடு இன்று சுடுகாடாக மாறிவருவதாக பசில் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)





# இலங்கை பொறுப்புக்கூறல் விடயத்தில் உடன்படிக்கைபடி செயற்பட வேண்டும்

## ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்து

(கொழும்பு)

**பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேசத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கைப்படி இலங்கை செயற்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் இதனை வலியுறுத்தியுள்ளார்.**



செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் இடையில் உடன்பாடுகள் இருக்கின்றன.

எனவே இந்த உடன்பாடுகளுடன் இலங்கை குறித்த உடன்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் விடயத்தில் இலங்கைக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இடையிலான உடன்படிக்கைகளில் சில பிரச்சினைகள் இருக்கின்றன.

எனினும் அவை உரிய முறையில் பின்பற்றப்படும் என்று தாம் நம்புவதாக டுஜாரிக் தெரிவித்தார்.

போர்க்குற்ற விசாரணைகளின்போது சர்வதேச நீதிபதிகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ள கருத்து தொடர்பிலேயே டுஜாரிக்கின் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. (இ-10)

# இலங்கையில் சர்வதேச இஸ்லாமிய மாநாடு

(கொழும்பு)

பிரதமரின் ஆலோசனைக்கு அமைய சர்வதேச இஸ்லாமிய மாநாடு ஒன்றை இலங்கையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருவதாக தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் அப்துல் ஹலீம் தெரிவித்துள்ளார்.

குறித்த மகாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவை பிரதிநிதித்துவப்படுத்தி 17 நாடுகள் இந்த இஸ்லாமிய மாநாட்டில் கலந்து கொள்வதற்கு இதுவரை விருப்பம் தெரிவித்துள்ளதாக தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், மாலைதீவு ஆகிய தெற்கு ஆசியா நாடுகளும், இந்தோனேஷியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், புரூனே, மியன்மார், வியட்நாம், சீனா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய தென்கிழக்கு ஆசிய நாடுகளும் பங்கேற்கவுள் என.

"International Conference on the Role of Religion in Pluralistic and Democratic Society in South and Southeast Asia Perspectives of Islam" எனும் தொனிப்பொருளில் இந்த மாநாட்டை நடத்துவதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் தபால் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சின் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்தது. (இ-10)

# தேசிய கணக்காய்வு சட்டமூலத்தை நிறைவேற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தேசிய கணக்காய்வு சட்டமூலத்தை நிறைவேற்றக் கோரி இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களத்தின் கூட்டு தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், மக்களின் பணத்தை பாதுகாப்பது உட்பட பல நன்மைகள் கிடைக்கும் எனவும் இதனால் சட்டமூலத்தை நிறைவேற்றுவது கட்டாய நடவடிக்கை எனவும் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் அம்பன்வல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட நாட்டு மக்கள் இந்த சட்டமூலத்தை நிறைவேற்ற ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# 75 நாட்கள் அல்ல 75 மணித்தியாலங்கள் கூட மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது

## இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவிப்பு

(கொழும்பு)

**இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பரப்பில் 75 நாட்கள் அல்ல 75 மணித்தியாலங்கள் கூட மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. எனவே வடக்கு மீனவர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என அமைச்சர் மகிந்த அமரவீர திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.**

அத்துமீறும் இந்திய மீனவர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் வருடமொன்றிற்கு 75 நாட்கள் மீன்பிடிப்பதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவித்து வடபகுதி மீனவர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பாக கேட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர அரசின் நிலைப்பாடு தொடர்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்,

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கு ஒரு வருடத்தில் 75 நாட்களுக்கு மீன்பிடிப்பதற்கு அனுமதியை அரசு வழங்கியிருப்பதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை. அரசாங்கம் இது தொடர்பில் எந்தவிதமான தீர்மானத்தையும் எடுக்கவில்லை. பலர் பலவிதமான கருத்துக்களையும் யோசனைகளையும் முன்வைக்கின்றனர். ஆனால் இறுதி முடிவை அரசுதான் எடுக்கும்.

அதேவேளை அத்துமீறும் மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் தொடரும். அதில் எந்தவிதமான தளர்வுப் போக்கும் கடைப்பிடிக்கமாட்டாது.




கைதுசெய்யப்படும் இந்திய மீனவர்களை விடுவிப்போம். ஆனால் கைப்பற்றப்பட்ட அவர்களின் படகுகள், வலைகள் மற்றும் உபகரணங்களை மீளக் கையளிக்கப்படமாட்டோம் என்ற தீர்மானத்தில் நாம் திடமாக இருக்கின்றோம்.

எனவே வடபகுதி மீனவர்கள் எவ்விதமான அச்சம் கொள்ளத் தேவையில்லை. எந்தவொரு முடிவெடுத்தாலும் மீனவ சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தியே தீர்மானம் எடுப்போம் என்றும் அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-10)

# வீரர்கள் ஒழுங்கை கடைப்பிடிக்க வேண்டும் இல்லையெனில் அபராதம் விதிக்கப்படும்

## கும்ளே புதிய கட்டுப்பாடு



அணியின் பேருந்துக்கு தாமதமாக வருபவர்களுக்கு 50 டொலர்கள் அபராதம் விதிக்கப்படும் என்று இந்திய அணி வீரர்களுக்கு பயிற்சியாளர் அனில் கும்ளே

புதிய விதியை அறிமுகப்படுத்தியுள்ளார்.

பேருந்துக்கு தாமதமாக வந்தால் 50 டாலர் அபராதம்: வீரர்களுக்கு அனில் கும்ளே புதிய கட்டுப்பாடு

வீராட்கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக மேற்கிந்தியதீவுகள் சென்றுள்ளது.

இந்தியா-மேற்கிந்தியதீவுகள் அணிகள் மோதும் முதல் டெஸ்ட் வருகின்ற 21-ந் திகதி அண்டிகுவாவில் தொடங்குகிறது. இந்த டெஸ்ட் தொடர் ஒகஸ்ட் 22-ந் திததியுடன் முடிவடைகிறது. டெஸ்ட் தொடருக்கு முன்பு இந்திய அணி இரண்டு பயிற்சி ஆட்டத்தில் விளையாட முடிவு செய்தது. அதன்படி மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் சபை தலைவர் லெவனுடன் மோதிய 2 நாள் பயிற்சி ஆட்டம் 'சமநிலை' ஆனது. 3 நாட்கள் நடைபெறும் 2-வது பயிற்சி ஆட்டம் 14-ந் திகதி (இன்று) தொடங்குகிறது. இந்நிலையில், இந்திய அணி வீரர்களுக்கு பயிறசியாளர் அனில் கும்ப்ளே புதிய கட்டுப்பாடுகளை வி தித்துள்ளார். அணியின் பேருந்துக்கு தாமதமாக வருபவர்களுக்கு 50 டொலர்கள் அபராதம் விதிக்கப்படும் என்று இந்திய அணி வீரர்களுக்கு அவர் புதிய விதியை அறிமுகப்படுத்தியுள்ளார். வீரர்களிடம் கும்ப்ளே கூறியுள்ளதாவது:-

வீரர்கள் ஒழுங்கை கடைபிடிக்க வேணடும். வீரர்கள் எப்பொழுது விரும்பினாலும் கலந்து பேச நான் தயாராக இருக்கிறேன். வேலை, ஒழுக்கம், நகைச்சுவை, ஓய்வு எல்லாம் ஒன்றை ஒன்று பாதிக்காத வகையில் இருக்க வேண்டும்.

நீண்ட நாட்கள் நடைபெற உள்ள மேற்கிந்தியதீவுகள் சுற்றுப் பயணத்தில் உதவி பணியாளர்களை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். மசாஜ் செய் வதற்கு வீரர்கள் விரும்பியபடி நேரத்தை செலவிட முடியாது. மசாஜ் செய்வதற்கு குறிப்பிட்ட நேரம் தான் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நேரத்திற்குள் அந்த பணியாளர்களை வீரர்கள் பயன்படு த்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் வலியுறுத்தியுள்ளார். (க)

## மே. தீவுகள் அணி அறிவிப்பு


இந்திய அணிக்கு எதிராக டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் 12 வீரர்களை கொண்ட மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய அணி மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.இதற்காக மேற்கிந்திய தீவுகளுக்கு பயணமாகியுள்ள இந்திய அணி தற்போது பயிற்சிப் போட்டியில் விளையாடி வருகிறது.இந்த நிலையில் இந்த தொடரில் பங்கேற்கும் மேற்கிந்திய தீவுகளை அந்நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இந்த தொடருக்கு வேகப்பந்து வீச்சாளர் ஜேசன் ஹோல்டர் தலைவராகவும், கிராக் பிராத்வெய்ட் துணைத்தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கிந்திய தீவுகள் அணி விபரம் ஜேசன் ஹோல்டர் (அணித்தலைவர்), கிராக் பிராத்வெய்ட் (துணைத்தலைவர்), தேவேந்திர பிஷூ, பிளாக்வுட், பிராத்வைட், டேரன் பிராவோ, சந்திரிகா, ரோஸ்டன் சேஸ், ஷேன் டவ்ரிச் (விக்கெட் காப்பாளர்), கே பிரியல், லியான் ஜோன்சன், சாமுவேல்ஸ்.(க)

## ஜெரோம் டெய்லர் ஓய்வு




மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜெரோம் டெய்லர், டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ளதாக, மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைஅறிவித்துள்ளது. எனினும், ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளிலும் தொடர்ந்துவிளையாடுவதற்கு அவர் விருப்பம் தெரிவிததுள்ளார். 32 வயதான ஜெரோம் டெய்லர், 2003ஆம் ஆண்டு தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்டதோடு, 13 ஆண்டு காலப்பகுதியில், 46 டெஸ்ட் போட்டிகளில் மாத்திரமே பங்குபற்றி, 34.46 என்ற சராசரியில் 59.6 என்ற "ஸ்ட்ரைக் ரேட்"இல், 130 விக்கெட்டுகளைக் கைப்பற்றியிருந்தார். 18 வயதில் அறி முகத்தை மேற்கொண்ட போதிலும், காயங்கள் காரணமாக அதிகளவில் பாதிக்கப்பட்ட ஜெரோம் டெய்லர், 2009 தொடக்கம் 2014 வரை, டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றியிருக்கவில்லை. 2014ஆம் ஆண்டு மீள இணைந்த டெய்லர், ஓரளவு சிறப்பாக விளையாடியிருந்த போதிலும், அண்மையில் நிறைவடைந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், 2 விக்கெட்டுகளை மாத்திரமே கைப்பற்றியிருந்த நிலையில், மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொ்ண்ட போட்டிகளில் மாத்திரம் கவனஞ்செலுத்த முடிவு செய்துள்ளார். (க)

# புதிய முகாமையாளருடன் செயற்பட அதிக ஊக்கத்துடன் உள்ளேன்

## ரூனி தெரிவிப்பு

மன்செஸ்டர் யுனைட்டெட் அணியின் நட்சத்திர வீரரான வெய்ன் ரூனி, தனது அணியின் புதிய முகாமையாளரான ஜொஸ் மொரின்ஹோவின் கீழ் விளையாடுவதற்கு, அதிக ஊக்கத்துடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளதோடு, இடம்பெறவுள்ள பிறீமியர் லீக் பருவகாலம் தொடர்பாக எதிர்பார்பபுடன் காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். இதற்கு முன்னர் பணியாற்றிய லூயிஸ் வான் காலின் காலத்தில், மத்தியகள வீரராக விளையாடிய வெய்ன் ரூனி, கடந்த பருவகாலத்தில் கோல்களைப் பெறுவதற்குத் தடுமாறியிருந்தார். ஆனால், இம்முறை அவரை முன்கள வீரராகக் களமிறக்கும் சமிக்ஞைகளை, மொரின்ஹோ வெளியிட்டுள்ளார். அத்தோடு, புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள ஸல்ட்டான் இப்ராஹிமோவிக்குடன் இணைந்து, மிகச்சிறப்பான இணைப்பை உருவாக்குவதற்கு, ரூனி முயல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் கருத்துத் தெரிவித்த ரூனி, "ஜொஸ்ஸூடன் இப்பருவகாலத்தில் இணைந்து செயற்ப டுவதற்கு, நான் மிகவும் ஆர்வத்துடன் காணப்படுகிறேன் உலகின் மிகச்சிறந்த முகாமையாளர்களில் அவரும் ஒருவர். மன்செஸ்டர் யுனைட்டெடடுக்கு, இது மிகவும் சுவாரசியமான காலமாகும். அவரை நான் எப்போதும் ஒரு மனிதராகவும் முகாமையாளராகவும் மதித்திருக்கிறேன்" என்றார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ரூனி, எப்போதுமே தான் மிகவும் ஊக்கத்துடன் காணப்படும் ஒருவர் என்றே நினைப்பதாகவும், ஆனால் புதிய முகாமையாளரின் கீழ் விளையாடுவதற்கு, அதிகமான ஊக்கத்துடன் காணப் படவில்லை என்று சொன்னால், அது பொய் சொல்வது போன்றதாகும் எனவும் தெரிவித்தார். (க)





இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி இன்று இங்கிலாந்தில் லோட்ஸ் மைதானத்தில் பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளது.

## எனது பலம் என்ன என்பது எனக்கு நன்றாகவே தெரியும்

### இஷாந்த் ஷர்மா

டெஸ்ட் போட்டிகளில் எனது பலம் என்ன என்பது எனக்கு தெரியும் என இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் ஷர்மா கூறியுள்ளார்.

விராட் ஹோலி தலைமையிலான இந்திய அணி மேற்கிந்திய தீவுகள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 டெஸ்ட் போடடிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இந்த போட்டியில் விளையாடவிருக்கும் இஷாந்த் ஷர்மா தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்துள்ள பேட்டியில், நம்மிடம் உள்ள சில விடயங்களை நேர்மறையாக ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்ள வேண்டும்.

எனது ஆட்டத்தில் அவ்வப்போது சிறு சிறு ஏற்ற இறக்கங்கள் இருக்கின்றன, நாம் விளையாடுகையில் ஒரு குறிப்பிட்ட வடிவததில்தான் விளையாட வேண்டும் என்பது அவசியமில்லை.வெவ்வேறு வடிவங்களில் நமது ஆட்டத்தினை வெளிப்படுத்தினால், எது சரி, எது தவறு என்பதை அறிந்து கொளள முடியும், மேலும் நான் டெஸ்ட் போட்டிகளில நன்றாக ஆடவில்லை என்பது எனக்கு தெரியும்

இருப்பினும் நல்ல முறையில் பயிற்சி எடுத்துள்ளேன், எல்லோருக்கும் ஒவ்வொரு பலம் இருக்கும். அதுபோல எனது பலம் என்ன என்பது எனக்கு தெரயும் என கூறியுள்ளார்.

இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு மேற்கந்திய தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் இஷாந்த் ஷர்மா 22 விக்கட்டுகளை வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# காதலியை மறக்க முடியாமல் தவிக்கும் மகேந்திரசிங் டோனி

இந்திய அணியின் ஒருநாள் மற்றும் இருபது-20 தலைவரான மகேந்திரசிங் டோனி தன்னுடைய பழைய காதலியை இன்னும் மறக்கவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது

இந்திய அணிக்கு பல முறை வெற்றி தேடித்தந்தவர் டோனி, அவரைப் பற்றிய சில சுவாரஸிய தகவல்கல் வெளியாகியுள்ளன.

அதன் விவரம் பின்வருமாறு, கடந்த 2002 ம் ஆண்டுகளில் பிரியங்கா ஜா என்ற பெண்ணை டோனி காதலித்ததாகவும், இவர் தான் தன் மனைவி என்ற நம்பிக்கையில் இருந்ததாகவும் தெரிகிறது.

2003-2004 ம் ஆண்டுகளில் இந்திய அணியில் இடம் பெற்றவருக்கு, தேசிய அணியிலும் இடம் கிடைத்தது, அத்தொடர் முழுவதும் டோனி சிறப்பாக செயல்பட்டார்.

ஆனால் தொடர் முடிந்து வீடு திரும்பியதும் அதிர்ச்சி காத்திருந்தது, இவர் காதலித்த பெண் விபத்தில் உயிரிழந்தார் என்ற தகவல் அவருக்கு தெரியவந்தது. இதனால் மனமுடைந்த டோனி பல மாதங்களாக தனனுடைய காதலியின் நினைப்பில் இருந்துள்ளார்.

அதன் பின் 2004 ம் ஆண்டு பங்களாதேஸ் தொடருக்கான இந்திய அணியில் இடம் பிடித்தார, கிரிக்கெட்டில் கவனம் செலுத்திய டோனி 2010 ம் ஆண்டு சாக்ஷியை திருமணம் செய்தார்.

டோனியின் வாழ்க்கையை மையமாக கொண்டு 'எம்.எஸ்.டோனி-தி அன் டோல்டு ஸ்டோரி' என்ற படம் பாலிவுட்டில் தயாராகி வருகிறது,இப்படத்தில் தன்னுடைய காதலியின் நினைவுகளை படமாக்க அனுமதி தந்துள்ளார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. (க)



# பணுவில்-2 மலருக்கான ஆக்கங்கள் கோரல்

வலி.மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட எழுத்தாளர்களிடமிருந்து, பணுவில்-2 மலருக்கான ஆக்கங்கள் மற்றும் கலைவாரிதி விருதுக்கான விண்ணப்பம் என்பனவற்றை வலி.மேற்கு கலாசாரப் பேரவை கோரியுள்ளது.

வலி.மேற்கு பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து, கடந்த வருடம் முதல் "பணுவில்" எனும் மலரினை வெளியிட்டு வருகின்றன. அந்தவகையில், இவ்வாண்டு இடம்பெறவு ள்ள பிரதேச கலாசார விழாவில் "பணுவில்-2" மலரினை வெளியீடு செய்யவுள்ளனர். ஆதலால், இம்மலருக்கான ஆக்கங்களை வலி. மேற்கு பிரதேசத்திற்குட்பட்ட கல்விப்புலம் சார்ந்தவர்கள், எழுத் தாளர்கள், கலைஞர்கள் மற்றும் இலக்கிய ஆர்வலர்களி டமிருந்து கலாசாரப் பேரவை கோரியுள்ளது. பிரதேசம் சார்ந்த கலை, இலக்கியம், பண்பாடு, தொல்லியல், ஆவணவாக்கல், சுற்றுச்சூழல், பொது விடயங்கள், கவிதை, கட்டுரைகள், பத்தி எழுத்துக்கள் முதலான தரமான ஆக்கங் களை ஆர்வலர்கள் எழுதி, "மலர்க் குழு, பிரதேச கலாசாரப் பேரவை, பிரதேச செயலகம், வலி. மேற்கு- சங்கானை" எனும் முகவரிக்கு இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர் அ.சோதிநாதன் கேட்டுள்ளார். அதேபோன்று, பிரதேச கலாசார விழாவில் வழங்கப்படும் "கலைவாரிதி" விருதுக்குத் தகுதியான கலைஞர்கள் குறித்த திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பப் படிவங்களை அந்த முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என்றும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ-5)

# கமநல அபிவிருத்தி திணைக்களம், முல்லைத்தீவு கேள்வி அறிவித்தல்

தவிசாளர் மாவட்ட பெறுகைக்குழு கமநல அபிவிருத்தி திணைக்களம் முல்லைத்தீவு சார்பாக உதவி ஆணையாளரால் புதுக்குடியிருப்பு கமநல சேவைகள் நிலைய கட்டட நிர்மாண வேலைக்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

1.விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடத்தப்படும்.

2.தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

3.ஆர்வமுள்ள தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் கமநல அபிவிருத்தி திணைக்களம், முல்லைத்தீவு எனும் முகவரியில் 13.07.2016 தொடக்கம் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 வரை விலைக்கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம் என்பதுடன் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4.ஆங்கில மொழி மூலமான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியினை முல்லைத்தீவு கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 13.07.2016 முதல் 25.07.2016 வரை வேலை நாட்களில் காலை 9.00 மணியில் இருந்து மாலை 3.00 மணி வரையான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000.00 கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

5.மூடி சீல் வைக்கப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் தவிசாளர், மாவட்ட பெறுகைக்குழு, கமநல அபிவிருத்தி திணைக்களம், முல்லைத்தீவு என்ற முகவரிக்கு 26.07.2016 ஆம் திகதி யன்று பி.ப 1.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடுதல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலையின் பெயர் மற்றும் கேள்வி இலக்கத்தை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் யாவும் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரடியாக வருகை தர விரும்பும் விலைக்கேள்வியாளர்கள் அல்லது பிரதிநிதிகளின் முன்னிலையில் 26,07.2016 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு திறக்கப்படும். கேள்விகளின் மூலப்பிரதி தனியாகவும் நகல் தனியாகவும் இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

6.கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

7.கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்வியானது (Bid) கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதியில் இருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் விதத்திலும் கேள்விப்பிணை பொறுப்பு (Bid Security) 120 நாட்கள் செல்லுபடியானதாகவும் இருத்தல் வேண்டும்.

| கேள்வி இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் (மாதம்) | தேவையான தரம் | கேள்விப் பிணைத் தொகை | மீளளிக்கப் படாத தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| MU/DAD/H.O/2/42-10 | புதுக்குடியிருப்பு கமநல சேவைகள் நிலை நிலைய நிர்மாணம் | 3.53 | 03 | C8 or above building | 35,000.00 | 1000.00 |

**உதவி ஆணையாளர்,**
**கமநல அபிவிருத்தி திணைக்களம்,**
**முல்லைத்தீவு,**
**தொ.பே :- 021- 229 0048**

(சி-5184)





ஊரெழு கலைவாணி முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டிருந்தார்.


## அதிபர் சேவைக்குத் தெரிவானமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திருமதி கவிதா லலீசன்**
Sp.Trd. (Sc), B.A., P.G.D.E., M.Ed. (Reading)

*யா/ வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய* ஆசிரியராகக் கடமையாற்றும் *திருமதி கவிதா லலீசன்* அதிபர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இற்கு தெரிவானமையையிட்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவர் மேலும் உயர்வுகள் காண எல்லாம் வல்ல இறையருள் கைகூட வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.





**சு.முத்துக்குமாரசுவாமி குடும்பம் (பெற்றோர்)**
**ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலி.**

(சி-5182)


# இராசி பலன்

**14.07.2016**
**(ஆனி 30, வியாழக்கிழமை)**
**சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு**
**தசமி பின்னிரவு 12.31 மணிவரை**
**சுவாதி காலை 7.52 மணிவரை**
**சுபநேரம் 7.30-9.00 மணிவரை**
**இராகுகாலம் 1.30-3.00மணிவரை**
**அமிர்தசித்தம்**

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சூரி |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி இரவு 4.00மணிக்கு விரு-சந் | | புத சுக் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | சந் | |

**மீனம்:** குடும்பத்தில் சிறுசிறு வாக்குவாதம் ஏற்படலாம், பிறரது வேலைகளை நீங்கள் எடுத்துச் செய்யும் சூழ்நிலை உருவாகும், செலவுகள் அதிகமாகும்.

**மேடம்:** வாழ்க்கைத்துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்தியொன்று வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், உடல் நலன் சீராகும்.

**இடபம்:** தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மிதுனம்:** உறவினர்கள் வழியில் இனிய செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்:** விருந்தினர் வருகையுண்டு, நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல் நலன் சீராகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு

**கடகம்:** மனதில் புதிய சிந்தனைகள் உதயமாகும், தொல்லை கொடுத்த சிலரே உதவ முன்வரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**மகரம்:** செலவுக்கு ஏற்ப பணம் வந்து சேரலாம், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், குடும்பத்தினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும்.


**தனுசு:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** மனச்சஞ்சலங்கள் கூடும் நாள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், சயனசுகக் குறைவான நாள், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** தேகநலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் சூழ்நிலை உருவாகும்.

**கன்னி:** தொழில் முன்னேற்றத்திற்கு திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

# நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் தசாப்த நிறைவு நிகழ்வு






நூலக விழிப்புணர்வு நிர்வாகத்தின் தசாப்த நிறைவின் முதலாம் நாள் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் தலைவர் சு.நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிரேஷ்ட நூலக சேவையாளர்கள் 5பேர் கௌரவிக்கப்பட்டதுடன் கருத்தூண் சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெற்றது. அத்துடன் பாதிக்கப்பட்ட நூலகங்களுக்கான நூற்தொகுதி வழங்கப்பட்டதுடன் வாசிப்பு மேம்பாட்டுப் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன்,கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், சிறப்பு விருந்தினராக கொழும்பு மாநகர சபை பொது நூலக நூலகர் திருமதி வருணி சங்கபதாராச்சி,கல்விக் காருண்யன் தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் உட்பட நூலகர்கள்,மாணவர்கள்,வாசகர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:-பொ.சோபிகா)



# யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் நூலகத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தியது

## யாழ். அரச அதிபர் வேதநாயகன் தெரிவிப்பு

(கொழும்பு)

**ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் நூலகம் எந்தளவு முக்கியம் வாய்ந்ததென்பதற்கு யாழ்.பொதுநூலகம் எரிக் கப்பட்ட சம்பவம் சான்றாக உள்ளது என யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் தசாப்த நிறைவு சிறப்பு நிகழ்வு நேற்றைய தினம் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

வாசிப்பதால் தான் மனிதன் பூரண அறிவை பெற முடியும்.அறிவை மேம்படுத்துவதற்கு வாசிப்பு பழக்கம் இன்றியமையாதது.

வாசிப்பு பழக்கத்தில் இன்றைய இளம் தலைமுறையினர் மிகவும் குறைவான அளவிலேயே ஈடுபடுவதனை அவதானிக்கமுடிகிறது.

இன்றைய கால கட்டத்தில் நூலகங்களுக்கு செல்லாமலேயே அறிவை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் தொழில்நுட்பம் வளர்ந்துள்ளது. ஆனால் அத்துறையை கூட இளம் சமூகத்தினர் பயன்படுத்துகின்றார்களா? என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

எமது நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் நூலகம் எந்தளவுக்கு முக்கியமானது என்பதற்குசான்றாகஉள்ளது. நூலகத்தை எரிப்பதன் மூலமாக குறித்த சமூகத்தை மோசமான முறையில் பாதிக்கலாம் என்ற வகையிலே எமது நூலகம் எரிக்கப்பட்டது.

ஒரு சமூகத்துக்கு நூலகம் எந்தளவு முக்கியம் வாய்ந்தது?அதன் பெறுமதி என்ன? என்பதை குறித்த சம்பவம் எடுத்துக்காட்டியுள்ளது. அதாவது வருங்கால சந்ததியினரின் அறிவுப் பொக்கிஷத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்காகவே குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஒரு மனிதனுக்கு மிக முக்கியமானவை அறிவை மேம்படுத்துவதும் பல விடயங்களை கற்றுக்கொள்வதும்.

ஆகவேஅறிவைமேம்படுத்தும் வழியில் இளைஞர்களை பழக்குவதற்கு வாசிப்புத்துறையில் அவர்களின் நாட்டத்தை அதிகரிக்க வேண்டும்.

சமூகத்தில் மற்றவர்களால் மதிக்கக்கூடிய உயர்ந்த நிலைக்கு வருவதற்கு எமது அறிவை மேம்படுத்துவது மிக முக்கியமானது. அந்தப் பழக்கத்தை இளைஞர் மத்தியில் கொண்டு வர வேண்டும்.

அதிகளவானவர்களை வாசிப்பில் ஈடுபடுவதற்கு ஒவ்வொருவரும் தமது கடமையாக கொண்டு செயற்பட வேண்டும். அதன் மூலம் சமூகப் பறழ்வு ஏற்படாமல் தடுக்கமுடியும்எனவே இளைஞர் மட்டத்தில் வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்தால் தான் சமூகத்தை நல்லநிலைக்குகொண்டு வர முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மஹோற்சவம்

யாழ்.அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் (நாச்சிமார் கோவில்) ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

04.08.2016 வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (இ

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம் மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் வருடாந்த பொதுச் சபைக்கூட்டம் கடந்த 02 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் நிர்வாக சபை உறுப்பினர்களின் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக சக்தி வி.சுதாகர், உபதலைவராக கே.சத்தியசீலன், செயலாளராக சக்தி எஸ்.அருள்நாதன், உப செயலாளராக சக்தி எஸ். சதீஸ், பொருளாளராக சக்தி எஸ். அண்ணாத்துரை ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ

# ஆக்கபூர்வமான திட்டங்கள் இந்த அரசிடமும் இல்லை

## சோசலிஸ கட்சி விசனம்




(யாழ்ப்பாணம்)

இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான ஆக்கபூர்வமான திட்டங்கள் எவையும் இந்த அரசாங்கத்திடம் இல்லை என சோசலிஸ இளைஞர் சங்கத்தின் தேசிய இணைப்பாளர் எரங்க குணசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சோசலிஸ இளைஞர் சங்கமானது கடந்த 2008 ஆம் ஆண்டில் இருந்து சகோதர தினத்தை கொண்டாடி வருகிறது. எமது சங்கம் உலக ஜனநாயக இளைஞர் அமைப்பில் அங்கத்துவம் வகிப்பதுடன் சர்வதேச மட்டத்தில் பல்வேறுபங்களிப்பை செய்து வருகிறோம்.

அந்த வகையில் அரசியலுக்கு அப்பால் சூழல் பாதுகாப்பு போதைப்பொருள் எதிர்ப்பு, விளையாட்டுத்துறை போன்றவற்றில் எமது செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறோம். அந்த வகையில் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை கொண்டு வருவதற்காக எமது சங்கத்தின் ஊடாக சகோதரத்துவ தினத்தை கொண்டாடுகிறோம்.

இவ்வாறாக நாட்டில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்பினால் மாத்திரமே பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும். அந்த வகையில் எதிர்வரும் 21 ஆம் திகதியில் இருந்து 28 ஆம் திகதி வரை சகோதரத்துவ வாரமாக பிரகடனப்படுத்தவுள்ளோம். அதில் எதிர்வரும் 23 ஆம் திகதி யாழ்.ரிம்மர் மண்டபத்தில் சகோதரத்துவ இலக்கிய விழா நடைபெறவுள்ளது. அத்துடன் சகோதரத்துவ உறவுகளை தேடிச்செல்வோம் எனும் தொனிப்பொருளில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளோம்.

தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கு முதலில் தேசிய ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அரசாங்கத்தை மாற்ற முடிந்த எமக்கு இந்த ஆட்சி முறையை மாற்ற முடியாமல் போயுள்ளது.

இன்று இளைஞர்கள் மத்தியில் தொழில் வாய்ப்பு பிரச்சினை அதிகளவில் காணப்படுகிறது. தற்போது 30 இலட்சம் இளைஞர்கள் வேலை வாய்ப்பற்று உள்ளார்கள். அதில் ஒவ்வொரு வருடமும் தலா 3 இலட்சம் என்ற அடிப்படையில் வேலைவாய்ப்பற்ற வரகளாக சேருகின்றனர். அதே போன்று ஒவ்வொரு வருடமும் ஒரு லட்சத்து 56 ஆயிரத்து 98 பேர் இலங் கையில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கின்றார்கள். அத்துடன் வருடாவருடம் யாழ் மாவட்டத்தில 8 ஆயிரத்து 604 பேர் புதிதாக வேலை வாய்ப்பை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கிறார்கள். (இ-9)




## விருது வழங்கல்

சுன்னாகம் கொமர்ஷல் வங்கிக் கிளையினால் வருடாவருடம் நடத்தப்படும் தரம்-5 புலமைப் பரிசில் பரீட் சையில் சித்தியடைந்த அருணலு கணக்கினை வைத்திருக்கும் முதல் மூன்று இடங்களுக்குள் வரும் பாடசாலை மாணவர்களுக்கு விருது வழங்கும் விழா இவ் வருடமும் நடத்தப்படவுள்ளது.

இவ் விழா இன்று 14 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 4.30 மணிக்கு கொமர்ஷல் வங்கியின் சுன்னாகக் கிளையில் இடம் பெறும். (இ

## மணவாளக்கோல 108 சங்காபிஷேகம்

காரைநகர்-வியாவில் திருவருள் மிகு ஹரிஹரபுத்ர ஐயப்ப சுவாமி ஆலய மணவாளக் கோல 108 சங்காபிஷேகம் நாளை 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு இடம் பெற வுள்ளது. மாலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசைகள் இடம் பெற்று சுவாமி வீதி வலம் வருதலும் விசேட மேளக் கச்சேரியும் இடம் பெறும். (இ-5)

# நாமல் குற்றத்தை ஒப்புக்கொண்டார்

(கொழும்பு)

**நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும் அதன் பின்னரே அவர் கைது செய்யப்பட்டதாகவும் பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்**

கொழும்பில் நேற்று இடம பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நிதி மோசடி விசாரணைப்பிரிவின் விசாரணைகளின் போது 70 மில்லியன் பணத்தை தான் எடுத்துள்ளதை நாமல் ஒப்புக் கொண்டுள்ளார். இதன்பின்னரே அவரை கைது செய்து நீதமன்றத்தில் முன்னிலைப படுத்தியதாக அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

இது பற்றிய விசாரணைகள் கடந்த ஆறு மாத காலங்களாக முன்னெடுக்கப்படுவதாகவும் அதன் பின்னரே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

எனினும் நாமல் ராஜபக்ஷ Super 7 ரக்பி குழுவுக்கே குறித்த பணத்தை செலவு செய்துள்ளதாக கூறினாலும், “Super 7 னுக்காக ஒரு சதம் கூட நாமல் செலவு செய்யவில்லை” என ரக்பி விளையாட்டுக்குழுவின் அங்கத்தவர்கள் தெரிவித்தார்கள்.

வங்கி கணக்கிலேயே குறித்த 70 மில்லியன் பணத்தை கிறிஸ் நிறுவனம் வைப்பிலிட்டதாகவும், ஆனால் அந்த பணத்தை நாமல் எடுத்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் குற்றம் சுமத்தினார்.

இந்தக் குற்றச்சாட்டை நிமல் பெரேரா உறுதிசெய்துள்ளதாகவும் அறிவித்தார்.

மேலும், நாமல் கைது செய்யப்பட்டவுடன் மகிந்த ராஜபக்ஷ “இப்பொழுது அனைவருக்கும் மகிழ்ச்சியா?” என்ற கேள்வியை முன்வைத்தார். இதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர் “இதில் யாருக்கும் மகிழ்ச்சியில்லை. உரிய விசாரணைகள், தகுந்த ஆதாரங்கள் இருப்பதாலேயே நாமல் கைது செய் யப்பட்டார்”. நாடு தற்போது சரியான பாதையில் பயணிப்பதாகவும் இப்பொழுதுதான் சட்டம் நிலை நாட்டப்படுவதாகவும் பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா மேலும் தெரிவித்தார்.(இ-10)




# ஊழல்வாதிகளாகவே மாறிவரும் பிக்குகள்

## சமீர பெரேரா குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்போது நாட்டில் பிக்குகளே அதிகமான ஊழல்களை செய்து வருவதாக நியாய மான சமுதாயத்திற்கான மக்கள் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சமீர பெரேரா தெரிவித்தார்.

மேலும் நாட்டினை படு பாதாளத்தில் தள்ளீ ஊழல் ஆட்சியினை புரிந்து வந்த மகிந்த ராஜபக்ஷ தன்னைச் சுற்றிலும் திருடர்களையும், ஊழல் செய்பவர்களையுமே வைத்திருந்தார் என சுட்டிக் காட்டினார்.

அதேசமயம் மகிந்தவினால் பாதுகாக்கப்பட்டவர்களாக கூறப்படும் பிக்குகளும் ஊழல் செய்பவர்களாகவே காணப்படுகின்றனர். பிக்குகளின் நடத்தைகளை பார்க்கும் போது பிக்குகளா? எனும் சந்தேகம் எழுகின்றது எனவும் சமீர பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை நாட்டில் பில்லியன் கணக்கான ஊழல்களில் ஈடுபட்டவர்களும் தொடர்ந்தும்காப்பாற்றப்பட்டு கொண்டு வருகின்றமை கண்டனத்திற்குரியது.

இவ்வாறான ஊழல்களில் ஈடுபடுகின்றவர்களின் பதவிகள் பறிக்கப்பட வேண்டும் எனவும் சமீர பெரேரா அரசிடம் வேண்டுகோள் விடுத்தார். (இ-10)

# நீதிமன்றம் சுயாதீனமாக இயங்கவில்லை

## மகிந்தானந்த அளுத்கமகே குற்றச்சாட்டு

நீதிமன்றம் சுயாதீனமாக இயங்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார. அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனவரி மாதம் 8ம் திகதி நாட்டு மக்கள், நல்லாட்சியை ஏற்படுத்தியிருந்தனர். நல்லாட்சி அரசாங்கத்தில் அனைவருக்கும் நீதி சமமானதாக இருக்க வேண்டும், நீதிமன்றம் சுயாதீனமாக இருக்க வேண்டும். நாட்டின் ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டும். எனினும் நல்லாட்சி அரசாங்கத்தில் இவ்வாறான நிலைமையை அவதானிக்க முடிகின்றதா?

நல்லாட்சிஅரசாங்க அமைச்சர்களுக்கு எதிராக மக்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திரக கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மத்திய வங்கிபிணை முறி குறித்து முறைப்பாடு செய்தார். இன்று வரையில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநருக்கு எதிராக நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதா?

அமைச்சர் ராஜிதவிற்கு எதிரான அவன் கார்ட் நிறுவனத் தலைவர் நிசங்க சேனாதிபதி முறைப்பாடு செய்திருந்தார். 16 தடவைகள் ராஜிதவிற்கு இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்புப் பிரிவு அழைப்பு விடுத்திருந்தது. எனினும் அவர் ஒரு தடவை கூட விசாரணைகளில் பங்கேற்கவில்லை.

சம்பிக்க ரணவக்கவிற்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரையில் வாக்கு மூலம் கூட பதிவு செய்யப்படவில்லை, இதுவா நல்லாட்சி?

நிதி மோசடி விசாரணைப் பிரிவு அரசியல் பழிவாங்கல் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் கூட்டு எதிர்க்கட்சியினரை அடக்குமுறைக்குட்படுத்தி, போராட்டங்களை தடுக்க நினைத்தால அது வெற்றியளிக்காது என மகிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# 46 புதிய முதலீட்டு ஒப்பந்தங்கள்

(கொழும்பு)

46 புதிய முதலீட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக இலங்கை முதலீட்டு ச்சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் ஜூன் மாதத்திற்குள் மாத்திரம் புதிய 46 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக அந்த சபை சுட்டிக்காட்டியுள்ளது.

ஒரு மாதத்திற்குள் அதிகமாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட வருடமாக இது அறிக்கையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த முதலீட்டு ஒப்பந்தங்களுக்கு மதீப்பீடு செய்யப்பட்ட முதலீட்டு தொகை 982 மில்லியன் எனவும் இலங்கை முதலீட்டு சபை தெரிவித்துள்ளது.

குறித்த முதலீட்டு ஒப்பந்தங்களானது உற்பத்தி, கட்டுமானம், ஹோட்டல், சிறிய நீர் மின் உற்பத்தி, சூரிய மின்சக்தி, கலப்பு அபிவிருத்தி, ஆடை மற்றும் கல்வி ஆராய்ச்சி ஆகியவற்றிலே முதலீட்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ள முதலீட்டு திட்டங்கள் என இலங்கை முதலீடுச் சபை மேலும தெரிவித்துள்ளது. (இ-10)

தரம்-5 மாணவர்களுக்கான

## புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-20

(13.07.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 01) 1 | 11) 2 | 21) 2 | 31) 1 |
| 02) 3 | 12) 1 | 22) 3 | 32) 1 |
| 03) 1 | 13) 1 | 23) 3 | 33) 3 |
| 04) 2 | 14) 3 | 24) 1 | 34) 1 |
| 05) 3 | 15) 3 | 25) 1 | 35) 2 |
| 06) 1 | 16) 3 | 26) 2 | 36) 1 |
| 07) 3 | 17) 1 | 27) 1 | 37) 1 |
| 08) 1 | 18) 2 | 28) 3 | 38) 1 |
| 09) 1 | 19) 3 | 29) 2 | 39) 2 |
| 10) 1 | 20) 1 | 30) 3 | 40) 2 |

## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி.பா:33 சூரி செவ் 11 இல்
உயரம்: 5’7"
தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ்PR
தொ.இ: B/6074

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 0
உயரம்: 5’7"
தகைமை/தொழில் BSc சொந்த தொழில்
தொ.இ: B/6075

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 27
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:O/L/தனியார தொழில்
தொ.இ: B/6076

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 18
உயரம்: 5’2"தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/6078

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1991 RC
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: G/5729

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 37
தகைமை/தொழில்:பொறியியலாளர (கனடா)
தொ.இ: G/5736

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 36 செவ் 1 இல்
உயரம்: 5’3"
தகைமை/தொழில்:பட்டதாரி/அரச தொழில்
எதிர்பார்ப்பு:சைவபோனம் முக்கியம்
தொ.இ: G/5740

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 25 செவ் 4 இல்
உயரம்: 4’9"
த்தகைமை/தொழில்:B.COM/அரச தொழில்
தொ.இ: G/5741

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்021 720 1005,021 221 5434
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



கிளிநொச்சி விவசாயக்கல்லூரி மாணவர்கள் கடந்த 11 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு இரத்ததானம் வழங்கும் நிகழ்வொன்றை தமது கல்லூரியில் நடத்தினர். கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நீண்ட நாட்களாக நிலவிவரும் இரத்தப் பற்றாக்குறையை அடுத்து வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு உயிர்காக்கும் உன்னதப் பணியை சுமார் 20 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மேற்கொண்டனர். (படம்:- சோலைநகர் செய்தியாளர்)

# உள்ளூர் வீதிகள் அனைத்தும் பற்றைகளால் மூடி போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ளன

## நெடுங்கேணி பிரதேச சபை விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை

(மல்லாவி)

நெடுங்கேணி ஒலுமடு கிராம சேவகர் பிரிவிற்குப்பட்ட உள்ளூர் வீதிகள் அனைத்தும் பற்றைகள் மூடி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் இருப்பதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் வாகனங்கள் வரும் வேளையில் இடம்கொடுக்க வீதியோரத்தை நாடிச் செல்லும்போது முறிவடைந்த கொப்புகள் கீறுவதனால் காயம் ஏற்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விச ஜந்துகளின் நடமாட்டம் அதிகமாக காணப்படுவதால் அச்சத்துடன் பயணிக்கும் அவலநிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஒலுமடு, வேலடி, முதிரம்பிட்டி, ஓடைவெளி, பாலமோட்டை, தீவுகாடு ஆகிய கிராமங்களிலுள்ள உள்ளூர் வீதிகள் அனைத்தும் இரண்டு பக்கங்களும் பற்றை மூடி வாகனங்கள் போக்குவரத்திற்கு இடையூறாகவுள்ளன.

இதனால் பாடசாலை மாணவர்கள் பாடசாலை நேரங்களில் செல்லும் போது வீதி விபத்துக்கள் அதிகளவு நடைபெற்று வருகின்றன.

அந்தவகையில் அண்மையில் ஒலுமடு பாடசாலை மாணவன் வீதிவிபத்தினால் வவுனியா மாவட்ட அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.



அனைத்துவீதிகளும் நெடுங்கேணி பிரதேசச் சபைக்கு சொந்தமான போதிலும் இவ் வீதிகள் பராமரிப்பின்றிக் காணப்படுவதால் பாடசாலை மாணவர்கள், முதியோர் ஆகியோர் அதிக விபத்துக்களைச் சந்திக்க நேரிடுகின்றது.

பிரதேச சபையிடம் வீதி துப்புரவு செய்வதற்கான இயந்திரங்களான ஜே.சி.பீ.மோட்டர் கிரண்டர், உழவு இயந்திரங்கள், ஆளணிகள் இருந்த போதிலும் வீதிகள் அனைத்தும் மக்கள் பாவனைக்கும் வாகனப் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளது என பொதுமக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இதனைச் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரி கவனத்திற்கொண்டு இவ் வீதியிலுள்ள பற்றைகளை அகற்றி மக்கள் பாவனைக்கு தரும்படி கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (2-15)

மன்னார் பொது வைத்தியசாலை

# குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படும் என்று கூறப்பட்ட போதிலும் நடவடிக்கை மந்தகதியில்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சருக்கு கடிதம்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள பல்வேறு குறைபாடுகள் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல், மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த மே மாதம் 23ஆம் திகதி மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலையில் இடம்பெற்றபோது முன் வைக்கப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாகக் கூறிய போதும் இது வரை எவ்வித நடவடிக்கைகளையும் வடக்குமாகாண சுகாதார அமைச்சர் மேற்கொள்ளவில்லை என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

மன்னார் மாவட்ட பொதுவைத்தியசாலையில் உள்ள பல்வேறு பிரச்சினைகள் குறித்து மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன், வடக்குமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கு கடந்த 11 ஆம் திகதி திங்கட்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ளக ரீதியில் பல்வேறு விதமான குறைபாடுகள் குறித்து மே மாதம் 23 ஆம் திகதி மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னார் பொது வைத்தியசாலையில் விசேட கலந்துரையாடலின் போது பல்வேறு குறைபாடுகள் முன் வைக்கப்பட்டன.

குறித்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக வடக்குமாகாண சுகாதார அமைச்சர் என்ற வகையில் கூறப்பட்டது. ஆனால் இது வரை எவ்வித குறைபாடுகளும் நிவர்த்தி செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. ஒரு வாரத்தில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்திக்குழு அமைக்கப்படும் என உத்தரவாதம் வழங்கப்பட்டது. ஆனால் ஆறு வாரம் கடந்தும் அணுவும் நகரவும் இல்லை.

எனவே உயிர்காக்கும் உத்தம சேவையினை ஸ்திரப்படுத்த வேணடியது உங்களின் தார்மீக கடமையாகும். அதனை விரைவாக நிறைவேற்ற வேண்டுமென கேட்டுக கொள்கின்றோம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் வி.எஸ். சிவகரன் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (2)




# ஈச்சங்குளத்தை ஆழப்படுத்தி விவசாய நடவடிக்கைகளுக்கு வழியேற்படுத்துங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, அக்கராயன் பகுதியில் அமைந்துள்ள ஈச்சங்குளத்தினை ஆழப்படுத்தி, விவசாய நடவடிக்கைகளுக்கு வழியேற்படுத்துமாறு அக்கிராம விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சிறிய குளமாகிய இக்குளம், கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர், அக்கராயன் கமநல சேவை நிலையத்தினால் புனரமைக்கப் பட்டது. இதன் பின்னர், இக்குளத்தில் கூடுதலான நீர் காணப்படுகின்றது. இக்குளத்தின் நீர் கால்நடைகளின் பயன்பாட்டிற்கு மட்டும் பயன்படுகின்றது. இதனை விட, கடல் மட்டத்திலிருந்து 115 அடி உயரத்திலுள்ள பகுதியில், இக்குளம் அமைந்திருப்பதன் காரணமாக, இப்பகுதியிலுள்ள கிணறுகளின் நீர்மட்டத்தினை தீர்மானிக்கின்றதாக இந்தக் குளம் காணப்படுகின்றது. இந்நிலையில், அக்கராயன் குளத்திலிருந்து ஸ்கந்தபுரம் கிராமத்துக்கு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நிலையில், ஏற்று நீர்ப்பாசனத்தினூடாக இக்குளத்துக்கு நீர் நிரப்புவதன் மூலம் இக்குளத்தைச் சூழவுள்ள விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியும். அத்துடன், அக்கராயன் மத்திய பிரதேசத்தில் நிலத்தடி நீரையும் பேண முடியும். ஆகவே, இதற்காக குளத்தை ஆழப்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை முன்வைக்கின்றனர். (2)

# கலந்துரையாடல்

(சிவநகர்)

கரைச்சி பிரதேசசபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் இயங்கும் தனியார் கல்விநிலைய உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலொன்று எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரைச்சி பிரதேசசபை மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது .இக்கலந்துரையாடலுக்கு அனைத்து தனியார் கல்வி நிலைய நிர்வாகிகள் அல்லது உரிமையாளர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு கரைச்சி பிரதேசசபை செயலாளர் க.கம்ஸநாதன் அறிவித்துள்ளார்.

ஏறக்குறைய 30 கல்வி நிலையங்களுக்கு கடிதம் மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் கலந்துரையாடலுக்குச் சமுகமளிக்கும் போது மாணவர்கள் தொகை, ஆசிரியர்களின் விபரங்கள், கட்டடங்களின் விபரங்கள், ஏற்படுத்தப் பட்டுள்ள அத்தியாவசியமான வசதிகள் தொடர்பான விபரங்களுடன் தவறாதுகலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-254)

# ஆ.சு.நி.பாதுகாப்பற்று காணப்படுவதால் மதுப்பிரியர்களின் கொண்டாட்டம் அதிகம்

கர்ப்பிணித் தாய்மார் மற்றும் குழந்தைகள் நலன் பேணும் வகையில் இயங்கும் சிவநகர் ஆரம்ப சுகாதார நிலையம் உரிய பாதுகாப்பு இல்லாமாலும் மதுப்பிரியர்களின் அடாவடித்தனங்களுக்குட்பட்டதாகவும் இருப்பதால் இங்கு சிகிச்சை பெறுவதற்கு வருகின்ற கர்ப்பிணித் தாய்மார் ,குழந்தைகள் பல்வேறு இடர்பாடுகளை சந்திப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கர்ப்பிணித்தாய்மார் மற்றும் குழந்தைகள் நலன்பேணும் வகையில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையம் உரிய பாதுகாப்பு இல்லாமலும் மதுப்பிரியர்களின் அடாவடித்தனங்களுக்கு உட்பட்டதாகவும் இருப்பதால் இங்கு சிகிச்சைபெற வருகின்ற கர்ப்பிணித்தாய்மார், குழந்தைகள் மிகவும் இடர்பாடுகளைச் சந்திப்பதாக கவலை தெரிவிக்கின்றனர். உருத்திரபுரம் கமநல சேவை நிலையத்திற்கு அருகாமையிலும் பாலையடி அருட்செல்வ விநாயகர் ஆலயத்திற்குப் பின்புறமாகவும் அமைந்துள்ளதுமான சிவநகர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் முன்பகுதிக்கு பாதுகாப்பு வலை பொருத்தப்படவில்லை. அத்துடன் கட்டப்பட்டுள்ள கிணறு முழுமையாகப் பூர்த்தி செய்யபபடவில்லை.


சிவநகர் கிராமத்தில் காணி உள்ள போதிலும் உருத்திரபுரம் வடக்கில் மேற்படி ஆரம்ப சுகாதார நிலையம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது.

இந்நிலையத்தின் பின்புறப்பகுதி முழுவதும் பற்றைக் காடுகளால் சூழப்பட்டுள்ளமையால் மதுப்பிரியர்களின் கொண்டாட்டத்திற்கு இது வாய்ப்பாக அமைந்து தமது சுக நலனுக்கு கெடுதலாக அமைந்துள்ளதாக கர்ப்பிணித் தாய்மார்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இங்கு பயன்பெற வருகின்ற குழந்தைகளின் நலனிலாவது அக்கறை கொண்டு இந்த ஆரம்ப சுகாதார நிலையச் சுற்றாடலை சிறந்த முறையில் துப்புரவு செய்வதுடன் நிலையத்திற்கான பாதுகாப்பு வலைகளை அடித்தும் கிணறு மற் றும் மலசலகூடத்தை பாவிக்கக் கூடியவகையிலும் அமைத்துத் தருமாறும் இந்தவிடயத்தில் வட க்கு மாகாண சுகாதார அமைச்சர் கவனம் செலுத்த வேண்டும் என வும் பாதிப்பிற்கு உள்ளான கர்ப் பிணித்தாய் மார்க ளால கோரிக்கை விடப்படுகிறது.(2-254)



விசுவமடு புன்னை நீராவியில் அமைந்துள்ள திருமகள் மழலைகள் முன்பள்ளிக்கு அண்மையில் திருமதி இந்திராதேவி வரதராஜாவின் பிறந்த நாளை முன்னிட்டு 20 பிளாஸ்ரிக் கதிரைகள், 08மேசைகள் என்பன அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இரண்டு வருட காலமாக மழலைகள் தளபாடவசதிகள் இன்றி கல்வியைத் தொடர்ந்த நிலையில் இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்விற்கு பெற்றோர்கள், முன்பள்ளி நிர்வாகத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படம்:-சோலைநகர் செய்தியாளர்)


கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் நீதவான் ஏ .ஏ .ஆனந்தராஜாவின் ஆலோசனைக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கிளிநொச்சி மாவட்ட கிராம சேவையாளர்கள் கிராம மட்டத்தில் உள்ள மக்கள் ஆகியோருக்கு கிராம சேவையாளர்கள் ஊடாக சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்கள் பாதுகாப்பு சம்பந்தமான தெளிவூட்டல் எனும் தொனிப்பொருளில் கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் காலை 9.45 மணியளவில் நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் ஆரம்பமான இக் கருத்தரங்கில் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் நீதவான் ஏ .ஏ.ஆனந்தராஜா, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சத்தியசீலன், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-மல்லாவி, பரந்தன் செய்தியாளர்கள்)

# ஏவுகணைத் தடுப்புக் கேடயத்தை நிறுவும் இடத்தை தென்கொரியா தெரிவு செய்தது

## அழித்து நிர்மூலமாக்குவோம் – மிரட்டுகின்றது வடகொரியா



வடகொரியாவின் ஏவுகணைகளை தாக்கி அழிக்க அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் அமைக்கப்படவுள்ள ஏவுகணை தடுப்பு கேடயத்தை நிறுவும் இடத்தை தென்கொரியா நேற்று தேர்வு செய்துள்ளது.

வடகொரியா அண்மையில் கடலுக்கு அடியில் நீர்மூழ்கி கப்பலில் இருந்து சக்தி வாய்ந்த ஏவுகணையை பரிசோதித்ததாக தென்கொரியா குற்றம்சாட்டியுள்ளது.

வடகொரியாவின் தொடர் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் ஏவுகணைகளை தாக்கி அழிக்கும் கவன்களை (பொறி) நிலை நிறுத்த அமெரிக்காவும் தென்கொரியாவும் அண்மையில் தீர்மானித்தன.

வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தலை எதிர்கொள்ள, அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து, தென் கொரியாவில் ஏவுகணை தடுப்பு கேடய அமைப்பை ஏற்படுத்தும் ஒப்பந்தத்தை செய்து கொண்டுள்ளன. இந்த ஏவுகணை தடுப்பு அமைப்பு எப்போது அங்கு நிறுவப்படும்? என்று இரு நாடுகளும் அறிவிக்காமல் இருந்தன.

இதற்கிடையில், தென்கொரியாவில் இந்த ஏவுகணை எதிர்ப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ள இடம் தெரியவந்த பின், அதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்போம் என்று வடகொரியா மிரட்டியது.

அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து கூட்டாக நிறுவவுள்ள ஏவுகணை தடுப்பு கேடயத்தை ஈவிரக்கமற்ற தாக்குதல் மூலம் அழித்து நிர்மூலம் ஆக்குவோம். இதை நிறுவ முயற்சிக்கும் தென்கொரியா மிகவும் பரிதாபத்துக்குரிய பேரழிவை சந்திக்க நேரிடும் எனவும் வடகொரியா அரசுக்கு சொந்தமான செய்தி நிறுவனம் எச்சரித்தது.

மேலும், வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தலை எதிர்கொள்ள, அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து நிறுவவுள்ள ஏவுகணை தடுப்பு கேடய அமைப்பை ஈவிரக்கமற்ற தாக்குதல் மூலம் அழித்து நிர்மூலம் ஆக்குவோம் என வடகொரியா இராணுவ அமைச்சகமும் மிரட்டியது.

இந்த நிலையில், தென்கொரியாவின் தென்கிழக்கு மாகாணங்களில் ஒன்றான சியோங்ஜூ பகுதியில் ஏவுகணை தடுப்பு கேடய அமைப்பை ஏற்படுத்த தென்கொரியா நேற்று தீர்மானித்துள்ளது.

இந்த கேடயத்தை இங்கு அமைப்பதன் மூலம் தென்கொரிய மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு மடங்கினரையும் அணுமின் நிலையங்கள், எண்ணெய் கிடங்குகள் போன்றவற்றையும் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்க முடியும் என தென்கொரிய பாதுகாப்புத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-10)


# அன்டிகனி நாடகம் 16ம் திகதி ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் நாடக அரங்கியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் க. ரதிதரனின் நெறியாள்கையில் உருவான அன்டிகனி நாடகம் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 4 மணியளவில் மறு மலர்ச்சி மன்ற தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கிலே ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

கிரேக்கத்தின் அவலச் சுவை நாடக ஆசிரியர் சோ.பாக்ளீஸால் ஆக்கப்பட்ட இந்நாடக எழுத்துருவைத் தமிழ் மொழிக்கு குழந்தை மா. சண்முகலிங்கம் மொழி பெயர்த்திருப்பதுடன், இந் நாடகமானது நாடக அரங்கக் கல்லூரியின் இன்னுமொரு தயாரிப்பாக அமைகின்றது. க.பொ.த. உயர் தர நாடகமும் அரங்கியலும் பாடத்திற்காக பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதான இந்நாடகம் இப்பிரதேச மாணவர்களின் கோரிக்கைக்கேற்ப ஆற்றுகை செய்யப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)






கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாணவர்களின் போசாக்கு இன்மையை நீக்கும் முகமாக சிவன் அறக்கட்டளை நிலையத்தினால் பால் வழங்கும் திட்டம் கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. கல்லூரி அதிபர் இராசதுரை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிவன் அறக்கட்டளை இயக்குநர் க.வேலாயுதம், ரெலோவின் மத்திய குழு உறுப்பினர் சதீஸ், பொதுக்குழு உறுப்பினர் க.சிந்துதாசன் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்: அராலி செய்தியாளர்)

*அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 8 ஆவது குருபூசை வைபவம் இன்று வியாழக்கிழமையாகும். இதனை முன்னிட்டு இவ்வாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.*

# தங்க அம்மா



ஆதரவில்லாத பிஞ்சுகளுக்கு
உலகையே
ஆதரவாக்கிய உத்தமி

பெற்றவளும் செய்வாளா?
உற்றவரும் உறவுகளும் செய்வாரா?
உற்றவராய் பெற்றவளாய்
உறுதுணை தந்து
பெற்றவருக்கும் பெருமை சேர்த்த
பெருந்தகை

பண்ணோடிசை பாடலையும்
பண்போடிசைந்து வாழ்தலையும்
பக்குவமாய்ப் பார்த்துத்தந்து
தக்கவராய்த் தரணி ஏற்க
வைத்தனையே
தங்க அம்மா

கோடி அள்ளிக் கொட்டி
கொடுத்தாலும் ஈடாயாமோ?
பாடுதான் பட்டுப்பட்டு
பக்குவமாய் வளர்த்ததாயே

தொட்டபணிப் பயணம் தொடர
தக்க 'மீகாமன்' தெரிவும்
தங்கத் திறனுக்கு
தக்கதோர் எடுத்துக்காட்டு

எத்தனையாண்டு சென்றும்
அத்தொனி கம்பீரத்தைக்–கேட்ட
அத்தனை செவியும் சொல்லும்
படிக்க நல்ல உரைகள் தந்தீர்
விடிவிற்காய் நடந்தபோது
'பந்த' மாய் ஒளியும் தந்தீர்
படி அரிசி தேடி வந்து
பசித்த வயிறாரச் செய்தீர்

பெற்றவரை இறுதிவரை
பேருடனே அழைத்து வந்தே
இற்றைவரை மட்டுமல்ல
இன்னுமெல்லோ
வாழவைத்தீர்
உண்மையிலே தங்க அம்மா
நீங்கள் தான் எம்மவர்க்கும்
எல்லோருக்கும் தக்க அம்மா.

**வரணியான்**
அதிபர்,
யா/புங்குடுதீவு இராஜராஜேஸ்வரி
தமிழ் கலவன் வித்தியாலயம்.

# தேவையற்ற விதத்தில் பரஞ்சோதி கேள்வி!



வடக்கு மாகாண முதலமைச்சரிடம் உறுப்பினர் பரஞ்சோதி தேவையற்ற விதத்தில் கேள்விகளை கேட்பதாக எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 56 ஆவது அமர்வு நேற்று முன்தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது.

இந்த அமர்வின் போது மாகாண சபை உறுப்பினர் பரஞ்சோதியினால் முதலமைச்சரிடம் கேட்பதற்காக 23 கேள்விகளும் 21 உப கேள்விகளும் இரண்டு பிரேரணைகளும் உள்ளதாக சபை நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்நிலையில் இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர்,

ஒரு உறுப்பினர் ஒருவர் எத்தனை கேள்விகளை கேட்க முடியும்? அவற்றை எந்த அடிப்படையில் கேட்க முடியும்? இவ்வாறு கேள்வி கேட்பதனை எவ்வாறு அனுமதிக்கலாம் எனப்பல கேள்விகளை எழுப்பினார். இது சபை ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு முரணானதாக உள்ளது எனவும் எதிர்க்கட்சி தலைவர் தெரிவித்தார்.

இந்த கேள்விகள் புதிதாக கேட்கப்படவில்லை எனவும், கிடப்பில் போடப்பட்டிருந்த கேள்விகளே இவை எனவும் அவைத்தலைவர் சிவஞானம் பதிலளிக்க, அதனை மறுத்த எதிர்க்கட்சி தலைவர், இந்த கேள்விகளில் அநேகமானவற்றுக்கு முதலமைச்சர் பதிலளித்து விட்டார். அவரது பதில் திருப்தி இல்லை என்பதற்காக அதே கேள்வியை மறுபடியும் மறுபடியும் கேட்க முடியாது.

பதிலில் திருப்தி இல்லை என்றால் அதனை பொது மக்களிடம் கொண்டு செல்ல முடியும். அதனை விடுத்து இங்கே மீண்டும் மீண்டும் கேள்வி கேட்டுக்கொண்டிருக்க முடியாது என தவராசா கோரினார்.

இதன் பின்னர் கருத்து தெரிவித்த உறுப்பினர் பரஞ்சோதி இதனை தாம் விவாதமாகக் கொண்டுவரப் போவதாக கூறினார்.


இதற்கு அவைத்தலைவரும் சம்மதம் தெரிவிக்க சபையில் எத்தனையோ விடயங்கள் அனைத்து உறுப்பினர்களுக்கும் பேசவேண்டிய விடயங்கள் உள்ளன. இந்த நிலையில் இந்த சந்தர்ப்பத்தை பரஞ்சோதிக்கு மாத்திரம் வழங்கினால் அது தவறான முன்னுதாரணமாக அமையும் ஆகவே மாகாண சபையின் மாதாந்த அமர்வுகளின் எண்ணிக்கையை அதிகரித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

இந்த பிரச்சனைகளுக்கு இடைக்கால மற்றும் மாதாந்த அறிக்கைகள் வெளியிடப்படாமையே காரணம். முதலமைச்சரது குழுக்கூட்டமும் கூட்டப்படவில்லை என்ற குற்றச்சாட்டினையும் தவராசா முன்வைத்தார். மேலும் சபை நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை வேண்டும் எனவும் அவர் இதன்போது வலியுறுத்தினார். (செ-4)

## உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க

# முதலமைச்சருக்கு அதிகாரமில்லை!

## அஸ்மின் கூறுகிறார்



(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண சபை முதலமைச்சர் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது எனவும் அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கு முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை எனவும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் அயூப் அஸ்மின் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண சபையின் 56 ஆவது அமர்வு நேற்று முன்தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது வடக்கு மாகாண முதலமைச்சரது பிரேரணை என குறிப்பிடப்பட்டு சபை ஒழுங்கு பத்திரத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது.

அந்த பிரேரணையில் வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள், உறுப்பினர்கள் தொடர்பில் பொதுமக்கள், அமைப்புக்கள் ஆகியவற்றிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்ற வண்ணம் உள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்து விசாரித்து அவற்றின் உண்மைத்தன்மையை கண்டறிவதற்கும் அது தொடர்பில் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள், மேல் நடவடிக்கைகளை பற்றி விதந்துரைப்பதற்கும் இரண்டு ஓய்வுபெற்ற நீதிபதிகளையும் ஒரு ஓய்வு பெற்ற இலங்கை நிர்வாக சபையை சேர்ந்த சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரையும் நியமித்து அவர்களின் விசாரணைகளின் படி கண்டறியப்பட்டு, அறிக்கையிடப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் மேல் நடவடிக்கை எடுப்பதற்கும் இந்த விசாரணைக்குழு சம்பந்தமான தேவையான நிதி நிர்வாக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இந்த விசாரணைக்குழு சம்பந்தமான தேவையான நிதி நிர்வாக நடவடிக்கைகளை தீர்மானிப்பதற்கும், முதலமைச்சருக்கு இந்த சபை அனுமதி வழங்குகின்றது என குறிப்பிடப்பட்டு காணப்பட்டது.

நேற்று முன்தினம் முதலமைச்சர் வடக்கு மாகாண



சபைக்கு சமுகமளிக்காத காரணத்தினாலும், இந்த விடயம் உறுப்பினர்களினது சிறப்புரிமை சம்பந்தப்பட்டு காணப்படுவதனால், முதலமைச்சர் வந்த பின்னர் இது தொடர்பில் தீர்மானிக்க முடியும் எனவும் கூறப்பட்டது. இதன்போது கருத்து தெரிவித்த உறுப்பினர் அஸ்மின், உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு முதலமைச்சருக்கு எந்த அதிகாரமும் இல்லை எனவும், ஒட்டுமொத்த மாகாண சபைக்கும் கட்சி தலைமைகளுமே உறுப்பினர்கள் தொட ர்பில் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-4)

# வடமாகாண சபையின் தீர்மானத்தை ஒரு கட்சி மாற்றியமைக்க முடியுமா?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஒரு கட்சி எவ்வாறு தமக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க முடியும் என கேள்வியெழுப்பியுள்ள வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா, இந்த செயற்பாடானது மாகாண சபையை அவமதிக்கும் செயற்பாடு எனவும் சாடியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 56 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது வவுனியா பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினால் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பு குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாட்டு கடிதத்தினையும் இதன்போது அவர் கவனத்திற்கு கொண்டு வந்தார். இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில், எமது சபையில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பில் ஏற்கனவே உறுப்பினர்களுடைய முன்மொழிவுகளுடன் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருந்தது.

எமது இந்த தீர்மானத்திற்கு மாறாக கட்சி ஒன்று புதிதாக ஒரு தீர்மானத்தை எடுத்து கருத்துக்கணிப்பு ஒன்றினையும் நடத்தியுள்ளது. இந்த வாக்கெடுப்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தவிர ஏனைய அனைவருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. மாகாண சபையில் இது தொடர்பில் தீர்மானம் எடுத்திருந்த நிலையில் கட்சி ஒன்று எவ்வாறு அது தொடர்பில் வாக்கெடுப்பினை நடத்த முடியும்?

அவ்வாறு நடத்தியிருக்க வேண்டுமானால் அதில் வாக்களிப்பதற்கு எமக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பில் குறித்த கட்சி மேற்கொண்ட நடவடிக்கை மாகாண சபையை அவமதிக்கும் செயலாகும் என சாடினார். தொடர்ந்து பேசிய அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், குறித்த தீர்மானம் தொடர்பில் கட்சியே நடவடிக்கை எடுத்தமையால் அது தொடர்பில் இங்கு விவாதிக்க முடியாது எனக் கூறினார்.

நான் கட்சி எடுத்த தீர்மானத்தை கூறவில்லை. நாம் எடுத்த தீர்மானத்தை கட்சி எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்றே கேட்கின்றேன். இந்த விடயத்தில் குறித்த கட்சி எம்மை மதித்து செயற்படவில்லை என்றார் எதிர்க்கட்சித் தலைவர் தவராசா. (இ-4)

# விசேட தேவையுடையவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நேர்முகத்தேர்வு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த(உ/த) மற்றும் புலமைப்பரிசில்பரீட்சைக்குத் தோற்றும் விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்குச் சலுகைகளை வழங்குவதற்கான நேர்முகத்தேர்வு பரீட்சைத் திணைக்கள அலுவலர்களால் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் இடம்பெறும். யாழ். மாவட்டத்தில் தோற்றும் குறித்த பரீட்சார்த்திகள் மேற்படி தேர்வில் பங்குபற்றினால் மட்டுமே சலுகைகள் பெற முடியும். ஆதலால் தவறாது பங்குபற்றவும் என யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

# யாழ்.,-வெள்ளவத்தை புதிய பேருந்து சேவை

இலங்கை போக்குவரத்துச்சபை யாழ்.சாலையும் ஹோமாகம சாலையும் இணைந்து வெள்ளவத்தையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கான புதிய பேருந்து சேவை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இச்சேவை தினமும் வெள்ளவத்தையில் இருந்து இரவு 7 மணிக்கும் யாழ்ப்பாணத்தில் இருந்து தினமும் இரவு 10 மணிக்கும் நடைபெறும். இப்பேருந்து யாழ்ப்பாணம், வவுனியா அநுராதபுரம், புத்தளம் ஊடாக சேவையில் ஈடுபடும்.

இச்சேவைக்கான ஆசன முற்பதிவுகளை யாழ்.மத்திய பேருந்து நிலையத்திலும் வெள்ளவத்தை புகையிரத நிலையத்திலும் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என இ.போ.ச யாழ்.சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார். (இ)

# தமிழ் மாணவர்களின் கல்வி நிலை பற்றிய ஆய்வு

கல்வி நிலை தொடர்பாக ஆராய்வதானால் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்நிலைக்கல்வி தொடர்பான விடயங்களை புள்ளி விபர ரீதியாகப் பகுப்பாய்வு செய்ய வேண்டும்.குறிப்பாக வடமாகாணத்தை எமது ஆய்வுக்களமாக எடுப்பின் முதலில் ஆரம்பக்கல்வி தரமாக இருந்தால்தான் ஏனைய இடைநிலை,உயர்நிலைக்கல்வி தரமாகவளரமுடியும்.இத்தகு கல்வி நிலைகளின் சுட்டிகளாக இருப்பவை தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த(சா/த),க.பொ.த.(உயர்தர) பரீட்சைகளின் அடைவுகளாகும். வடமாகாணம் 2015 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 68.88% இணை பெற்ற போதும் க.பொ.த (சா.தர) பரீட்சையில் 60.38% இனைப் பெற்றுள்ளது. இதன்படி தரம் 5 பரீட்சையில் 70 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களில் ஏறத்தாழ 9% ஆனவர்கள் க.பொ.த(சா.தர) பரீட்சையில் சித்தியடையத் தவறி விட்டார்கள் எனவும் இதனை இன்னும் 70% ஆக உயர்த்தியிருக்கலாம் என்பதும் எமது ஆதங்கம்.

இதனை மாகாண ரீதியாக ஒப்பீடு செய்து பார்க்கின்ற போது மேலும் பல விடயங்களைப் புரிந்து கொள்ளலாம்.கிழக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய அனைத்து மாகாணங்களிலும் தரம் 5 சித்தி வீதத்திற்கும் க.பொ.த(சா.தர) சித்தி வீதத்திற்கும் இடையேயான வித்தியாசம் 6 இலிருந்து 11 வரை குறைந்துள்ளது.கிழக்கு மாகாணம் மாத்திரம் 1% இனால் கூடியுள்ளது.

இவ்வித அட்டவணைகளி

**தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2015**

| மாகாணம் | தோற்றியோர் | 70இற்கு மேல் | வீதம் | 100 இற்கு மேல் | வீதம் |
|---|---|---|---|---|---|
| தெற்கு | 41638 | 33960 | 81.56 | 25227 | 60.59 |
| வடமேற்கு | 39464 | 32083 | 81.30 | 23655 | 59.94 |
| சப்ரகமுவ | 30691 | 24306 | 79.20 | 18041 | 58.78 |
| மேற்கு | 83678 | 65917 | 78.77 | 48131 | 57.52 |
| வடமத்தி | 22672 | 17592 | 77.59 | 12537 | 55.30 |
| ஊவா | 22353 | 16648 | 74.48 | 11409 | 51.04 |
| மத்திய | 43002 | 31462 | 73.16 | 21119 | 49.11 |
| வடக்கு | 18871 | 12999 | 68.88 | 8593 | 45.54 |
| கிழக்கு | 31303 | 19723 | 63.01 | 12773 | 40.80 |

**க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் 2015**

| மாகாணம் | தோற்றியோர் | சித்தி | வீதம் | ALLF | வீதம் |
|---|---|---|---|---|---|
| தெற்கு | 34801 | 26173 | 75.21 | 722 | 2.07 |
| மேல் | 73017 | 53062 | 72.67 | 2232 | 3.06 |
| சப்ரகமுவ | 24785 | 17342 | 69.97 | 869 | 3.01 |
| வடமேல் | 31733 | 22104 | 69.69 | 849 | 2.68 |
| மத்தி | 34652 | 23209 | 66.98 | 1133 | 3.27 |
| வடமத்தி | 16560 | 11030 | 66.61 | 706 | 4.26 |
| ஊவா | 18231 | 12005 | 65.85 | 741 | 4.06 |
| கிழக்கு | 21693 | 13784 | 63.54 | 641 | 2.95 |
| வடக்கு | 17752 | 10719 | 60.38 | 805 | 4.53 |
| அகிலம் | 273224 | 189428 | 69.33 | 8698 | 3.18 |

லிருந்து நாம் அறிந்து கொள்வது தரம் 5 புலமைப்பரீட்சைப் பெறுபேற்று சதவீதம் உயர்வாக இருக்கும் போது அதற்கேற்ப க.பொ.த (சா.தர) பரீட்சைப் பெறுபேற்று சதவீதமும் உயர்வாக இருப்பதை அவதானிக்கலாம்.எனவே வட மாகாணத்தின் ஆரம்பக்கல்வியின் இறுதி சுட்டியாகிய தரம் 5 அடைவை மேலும் உயர்த்துவதன் மூலமே க.பொ.த(சா/தர) அடைவை அதற்கேற்ப உயர்த்த முடியும் என்பதை உணர முடிகின்றது.

**தேசிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட விபரம்**

| ஆண்டு | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மாகாணம் | 70 புள்ளி % | நிலை | 70 புள்ளி % | நிலை | 70 புள்ளி % | நிலை | 70 புள்ளி % | நிலை |
| வடமேற்கு | 70.42 | 1 | 75.70 | 1 | 83.65 | 1 | 81.30 | 2 |
| தெற்கு | 68.98 | 2 | 74.64 | 2 | 83.10 | 2 | 81.56 | 1 |
| சப்ரகமுவ | 67.97 | 3 | 72.08 | 3 | 81.48 | 3 | 79.20 | 3 |
| மேற்கு | 66.71 | 4 | 71.74 | 4 | 80.80 | 4 | 78.77 | 4 |
| வடமத்தி | 63.36 | 5 | 67.11 | 5 | 80.87 | 5 | 77.59 | 5 |
| ஊவா | 60.77 | 6 | 66.95 | 6 | 76.96 | 6 | 74.48 | 6 |
| மத்திய | 59.70 | 7 | 65.30 | 7 | 76.45 | 7 | 73.16 | 7 |
| வடக்கு | 56.05 | 8 | 62.62 | 8 | 70.57 | 8 | 68.88 | 8 |
| கிழக்கு | 55.05 | 9 | 57.52 | 9 | 68.05 | 9 | 63.01 | 9 |
| இலங்கை | 64.39 | | 69.44 | | 78.96 | | 76.33 | |

இவ்வட்டவணையின் படி ஆரம்பக்கல்வியில் வடமேல் மாகாணம், தென்மாகாணம், சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாணங்களும் முதல் மூன்று நிலைகளிலும் இருக்க வடக்கு,கிழக்கு ஆகிய மாகாணங்கள் முறையே 8ம்,9ம் இடங்களில் தொடர்ந்து இருப்பதை அவதானிக்கலாம். வடமேல், தென், சப்ரகமுவ,மேல் மாகாணங்களில்70புள்ளிகளுக்குமேல் பெற்ற சத வீதம் படிப்படியாக அதிகரித்து 80 இற்கு மேல் உயர்ந்துள்ளன. 1997 பொதுக்கல்விச்சீர்திருத்தத்திற்கு அமைய 1998,1999 களில் ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்நிலைக்கல்வி மறுசீரமைப் புகள் ஏற்பட்டன.அதன்படி முதன்மை நிலை I,II,III என்பவற்றில் முறையே 40,52,55 தேர்ச்சிகளை மாணவர்கள் அடைய வேண்டும். மாணவர்கள் யாவரும் இத்தேர்ச்சிகளை கட்டாயம் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.

உண்மையில் குறித்த சில ஆண்டுகளில் மாணவர்கள் அனைவரும் தரம் 6 பரீட்சையில்70 புள்ளிகளுக்கு மேல் பெற்று தகைமை அடைவார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முதல் நான்கு மாகாணங்களில்80% மானவர்களே சித்தியடைய வடக்கு, கிழக்கு முறையே70%, 60% சித்தியடைந்துள்ளார்கள். இதற்கான காரணங்களாக ஆசிரியர் பற்றாக்குறை, பொருத்தமான பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்




கற்பிக்காமை என்பவற்றைக் குறிப்பிடலாம்.அத்தோடு வகுப்பறையில் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிக்கு அமைய எண்ணக்கருக்களை, தரமான உள்ளீடுகளை பயன்படுத்தி செயன்முறை ரீதியாக மகிழ்ச்சிகரமான சூழலில் புரிய வைக்க வேண்டும். மாணவர்கள் நிலைக்கேற்ப அலகு ரீதியான கணிப்பீடுகள்,மதிப்பீடுகள் வைத்துப் பின்னூட்டல் செய்ய வேண்டும். ஆனால் அதற்கு அப்பால் பல மட் டங்களில் ஏட்டிக்குப் போட்டியாக பரீட்சைகளும் தனியார் கல்வி நிலையங்களில் விரிவுரைகளை, செயற்பாடுகளை நிகழ்த்துவதும் பிள்ளை மையம்,தேர்ச்சி மையம் என்பவற்றை பரீட்சை மையம் நோக்கியே நகர்த்த உதவுகின்றது எனலாம். இருந்தும் பல கிராமங்களில் தரமான ஆரம்ப, பிள்ளைநேயப் பாடசாலைகள் உருவாகி அவை மாவட்ட, தேசியநிலைகளில் சாதனை படைத்து வருவதை யாமறிவோம்.

தரம் 5 அனைத்து மாணவர்களும் தரம் 6இற்கு வகுப்பேற்றம் செய்யப்படுகின்றார்கள்.தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் எடுத்த மாணவர்களும் 100,70 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களும் சரி தரம் 7,8 வகுப்புகளில் அவர்களின் தவணைப் பரீட்சைப் புள்ளிகள் குறைவடைவதை அவதானித்த மாகாண கல்வித் திணைக்களம் முன்னர் BESU என்னும் செயற்றிட்டத்தை அமுல்படுத்தி அவர்களை ஊக்கப்படுத்தினார்கள். இடைநிலைக்கல்வி 6 ஆண்டுகளைக் கொண்டது. மாணவர் கற்கும் பாடங்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரிக்கின்றது. பாட உள்ளடக்கம் விரிவானது, ஆழமானது. கணிதம், விஞ்ஞானம், ஆங் கிலம் போன்ற பிரதான பாடங்களுக்கு ஆசிரியர் இன்மை மற்றும் பாடச்சுமை,ஒழுங்கான கற்றல்-கற்பித்தல் இன்மை காரணமாக இன்றும் பல மாணவர்கள் இடைவிலகுகின்றார்கள். வரலாறு, புவியியல் ,குடியுரிமைக்கல்வி போன்ற பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் பொருத்தமான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்த வேண்டும். கணிதத்தில் கேத்திர கணிதப் பகுதியும் வரலாற்றில் உலகில் நடைபெற்ற புரட்சிகள் போன்ற பாடங்களும் விளக்கமாக கற்பிக்கப்படுவதில்லை என்ற குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுவதுண்டு.இதனால் கணிதம் போன்று வரலாறு பாடத்திலும் மாணவர் அடைவு குறைவாகவே உள்ளது.தரம் 9 இல் மாகாண மட்டப் பரீட்சை நடைபெற்று புள்ளிப் பகுப்பாய்வின் அடிப்படையில் தரம் 10,11 இல் மாணவர்கள் ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.இங்கு புள்ளி என்ற எண்ணை மாத்திரம் வைத்து மாணவர்களை மதிப்பிடக்கூடாது. ஏனெனில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 70 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்களை விட 70 புள்ளிகளுக்கு கீழ் எடுத்தவர்கள் சிலர் க.பொ.த(சா.தர),க.பொ.த(உயர்தர) பரீட்சைகளில் உயர்வான பெறுபேறுகளைப் பெற்றிருக்கின்றார்கள். எனவே உளவியலாளர் புளூம் (Bloom) இன் கருத்துப்படி பிள்ளைகளின் உடல் இயக்கம்,உள இயக்கம்,மன எழுச்சி இயக்கம் என்பவற்றை ஆசிரியர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இத்தகு காரணங்களினால் வடமாகாணத்தில் உள்ள பன்னிரண்டு வலயங்களும் இலங்கை பூராகவுள்ள 98 வலயங்களில் பின்னிலையில் நிற்பதை இவ்வட்டவணை காட்டுகின்றது.

**க.பொ.த (உயர்தரப்) பரீட்சையை பொறுத்தவரை அட்டவணையின்படி சித்தி வீதம்**

| ஆண்டு | தோற்றியோர் | 3 Pass | சித்தி % | 3A | 3A% | ALLF | % |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 | 10865 | 6828 | 62.84 | 199 | 1.83 | 852 | 7.84 |
| 2013 | 12052 | 7699 | 63.88 | 117 | 0.97 | 1281 | 10.63 |
| 2014 | 12330 | 7910 | 64.15 | 190 | 1.54 | 979 | 7.86 |
| 2015 | 12684 | 8274 | 65.23 | 214 | 1.69 | 1012 | 7.98 |

**க.பொ.த (சா/தர) பரீட்சை** — **க.பொ.த (சா/தர) பரீட்சை**

| 2014 | | 2015 | |
|---|---|---|---|
| வலயம் | நிலை | வலயம் | நிலை |
| யாழ்ப்பாணம் | 21 | யாழ்ப்பாணம் | 27 |
| மன்னார் | 6 | மன்னார் | 35 |
| வவுனியா தெற்கு | 13 | வவுனியா தெற்கு | 57 |
| வடமராட்சி | 46 | வடமராட்சி | 60 |
| மடு | 53 | மடு | 61 |
| வலிகாமம் | 83 | வலிகாமம் | 84 |
| தென்மராட்சி | 62 | தென்மராட்சி | 85 |
| வவுனியா வடக்கு | 92 | வவுனியா வடக்கு | 90 |
| முல்லைத்தீவு | 84 | முல்லைத்தீவு | 93 |
| துணுக்காய் | 94 | துணுக்காய் | 94 |
| கிளிநொச்சி | 93 | கிளிநொச்சி | 96 |
| தீவகம் | 97 | தீவகம் | 97 |

உயர்வடைந்துள்ளதோடு தேசிய ரீதியிலும் முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது.வடமாகாணத் தில் உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களில் ஏறக்குறைய 10% ஆனோர் கணிதப் பிரிவிலும் ஏறக்குறைய 10.1% மானோர் உயிரியல் பிரிவிலும் 10% ஆனோர் தொழில்நுட்பப்பிரிவிலும் ஆக மொத்தம் 30.1% ஆனோர் விஞ்ஞானத் துறையில் கற்கின்றார்கள் மற்றும் 19% ஆனோர் முகாமைத்துவ துறையிலும் 49.9% ஆனோர் கலைத்துறையிலும் கற்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இங்கு சித்தி வீதம் கலைத்துறை மாணவர்களினாலேயே அதிகரிப்பது குறிப்பிடத்தக்கது. 1972 ஆம் ஆண்டிலிருந்து பல்கலைக்கழக அனுமதியில் மாவட்ட பங்கீட்டு முறை அமுலில் உள்ளது.

45 வருடங்களின் பின்னராவது அனுமதி முறையை 100% உயர் புள்ளி மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்ற வாதம் வலுப்பெற்று வருகின்றது. அவ்வாறானால் யாழ். மாவட்டத்தில் கணிதப் பிரிவு மாணவர்கள் மாத்திரம் 100% உயர்புள்ளி மதிப்பீட்டு முறையில் நன்மை அடைவர். ஏனைய பிரிவு மாணவர்களும் ஏனைய மாவட்ட மாணவர்களும் மிகவும் பாதிப்புக்கு உள்ளாவர் என பேராசிரியர் வி.பி. சிவநாதன் அவர்களின் ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

முதலாளித்துவப் பொருளாதார முறையில் பண்ட உற்பத்தி மிகையாகவுள்ளது. ஆனால் அவை சரியாக பங்கீடு செய்யப்படுவதில்லை. அவ்வாறில்லாமல் மத்திய, மாகாண, வலய மட்டத்தில் பௌதிக, ஆசிரிய , ஏனைய வளங்கள் ,தர உள்ளீடுகள் போன்று கணிதப் புள்ளி விபரவியல் அடிப்படையில் பங்கீடு செய்யப்பட்டு , உரிய கண்காணிப்பு , மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே வடக்கு, கிழக்கு மாணவர்களின் கல்வி நிலை உயரும் என்பது திண்ணம்.

**பி.முத்துலிங்கம்**
ஓய்வுநிலை
பிரதிக்கல்விப்பணிப்பாளர்
தென்மராட்சி.

## அகதிகள் முகாம் மீது போர் விமானங்கள்

# குண்டுமழை

## 12 பேர் பரிதாபமாக பலி!

(டமாஸ்கஸ்)

**சிரியா - ஜோர்தான் எல்லைப்பகுதியில் உள்ள அகதிகள் முகாம்மீது ரஷ்ய போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் 12 பேர் பலியானதாக சிரியாவில் உள்ள போராளி இயக்கங்கள் குற்றம்சாட்டியுள்ளன.**

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் புரட்சிப்படையினர் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி அங்குள்ள மக்களை கொடுமைப்படுத்திவரும் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக விமானப்படை மூலம் தாக்குதல் நடத்த கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி ரஷ்யா முடிவு செய்தது.

இதையடுத்து, சிரியாவில் ஜனாதிபதியின் படைகளுக்கு ஆதரவாகவும், ஐ.எஸ். தீவிரவாதிகளின் முகாம்களை அழிக்கும் நோக்கத்திலும் பல்வேறு பகுதிகளின்மீது ரஷ்ய விமானப்படைகள் குண்டுமழை பொழிந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த தாக்குதல்கள் பெரும்பாலும் வீடுகள், வைத்திய சாலைகள், பாடசாலைகள் மற்றும் நிவாரண முகாம்களின் அருகாமையில் நடத்தப்படுவதால் ஏராளமான அப்பாவி மக்கள் பலியாகி வருவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில், ஜோர்தான் நாட்டின் எல்லையையொட்டியுள்ள தனிமையான பகுதியில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட நூற்றுக் கணக்கான மக்கள் தற்காலிக முகாம்களை அமைத்து அகதிகளாக தங்கியுள்ளனர்.

இந்த முகாமின்மீது பறந்த ரஷ்ய போர் விமானங்கள் நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் 12 பேர் பலியானதாகவும் பலர் காயமடைந்ததாகவும் மேற்கத்தேய நாடுகளின் ஆதரவு பெற்ற 'ப்ரீ சிரியன் ஆர்மி' குழுவின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (இ-10)




## பயணிகள் புகையிரதங்கள் நேருக்குநேர் மோதி விபத்து

### 20 பேர் பலி! 30 பேர் படுகாயம்


(மிலன்)

இத்தாலி நாட்டில் பயணிகள் புகையிரதங்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர்.

தெற்கு இத்தாலியின் புக்லியா பகுதியில் நேற்றுமுன்தினம் பயணிகள் புகையிரதங்கள் இரண்டு நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டது. கோரடா மற்றும் ஆண்டிரியா நகரங்களுக்கு இடையிலான ஒருவழிபுகையிரதப் பாதையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இரண்டு புகையிரதங்களும் நான்கு பெட்டிகளை கொண்டது. வேகமாக மோதியதால் இரண்டு புகையிரதங்களிலும் உள்ள முன் பெட்டிகள் சிதைந்தது.

முதலில் வந்த தகவல்படி இந்த விபத்தில் சுமார் 12 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். ஏராளமானோர் படுகாயமடைந்தனர். இதனைத்தொடர்ந்து இடிபாடுகளில் சிக்கிக் கொண்டவர்களை மீட்கும் பணிகளில் மீட்பு படைவீரர்கள் ஈடுபட்டனர்.



இந்நிலையில் இந்த கோர விபத்தில் பலியானவர்களின் எண்ண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளதாக இத்தாலி அரசு தெரிவித்துள்ளது. மேலும் 30 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதுவரை மீட்கப்பட்ட பயணிகள் அருகில் உள்ள கோரடா நகர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை காப்பாற்ற, பொது மக்கள் ரத்த தானம் செய்ய முன்வரும்படி, கோரடா நகர மேயர் அழைப்பு விடுத்துள்ளார். உயிரிழந்தோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (இ-10)

# 10ஆயிரம் சிரிய அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்கத் திட்டம்

## அமெரிக்கா அறிவிப்பு

உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்டுள்ள 10 ஆயிரம் சிரிய அகதிகளுக்கு அடைக்கலம் அளிக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக அந்நாட்டு வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

சிரியாவில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரினால் அங்கிருந்து ஏராளமான மக்கள் அகதிகளாக மேற்கு நாடுகளை நோக்கி தஞ்சமடைந்து வருகின்றனர். போரினால் பாதிக்கப்பட்ட பலர் பல்வேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



இதனிடையே, சிரியாவில் பாதிக்கப்பட்ட 10 ஆயிரம் அகதிகள் அமெரிக்காவிற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியிருந்தார்.

அகதிகளை நாட்டிற்குள் அனுமதித்தால் தீவிரவாதம் தொடர்பான சிக்கல்கள் எழும் என்று எதிர்க்கட்சியினர் தரப்பில் விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், ஒபாமா வாக்குறுதி அளித்தபடி 10 ஆயிரம் அகதிகளுக்கு அமெரிக்கா அடைக்கலம் கொடுக்கும் என்று அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெரி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதற்கு முன்பாக வோஷிங்டனில் நடைபெற்ற ரமழான் விருந்து ஒன்றில் இதனை ஜோன் கெரி தெரிவித்தார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

இந்த 10 ஆயிரம் அகதிகளும் ஐக்கிய நாடுகள் முகாம்களில் இருந்து எடுக்கப்படுவார்கள். அவர்கள் அனைவரும் அமெரிக்காவின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்புகளால் சோதனை செய்யப்பட்டு பின்னர் தான் தேர்வு செய்யப்படுவார்கள்.

அவசர கால உதவிகளை அமெரிக்கா அதிக அளவில் செய்து வருகிறது என்பதில் பெருமை கொள்கிறேன்.

ஐ.நா. முகாம்களில் அமெரிக்க அதிகாரிகளால் தேர்வு செய்யப்பட்டவர்கள் வருகின்ற செப்டெம்பர் 30ஆம் திகதிக்குள் அமெரிக்காவிற்கு கொண்டு வரப்படுவார்கள். அவர்களில் பெரும்பாலும் விதவைகள், முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தான் இருப்பார்கள். இவ்வாறு ஜோன் கெரி தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகள் பயணத்தின் முதற்கட்டமாக வரும் வெள்ளிக்கிழமை ரஷ்ய தலைநகர் மொஸ்கோவிற்கு சென்று அங்கு ஜனாதிபதி விளாடிமிர் புடினு டன் சிரிய விவகாரம் குறித்து ஆலோசனை செய்கி றார். (இ-10)

# 14 கோடி மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் பயங்கர பூகம்பம் ஏற்படும்

## இந்தியா, பங்களாதேஷிற்கு ஆய்வாளர்கள் எச்சரிக்கை




(டாக்கா)

**இந்தியா மற்றும் பங்களாதேஷத்தில் 14 கோடி மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் பயங்கர பூகம்ப அச்சுறுத்தல் உள்ளதாக ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

கிழக்கு இந்தியாவின் நகரப்பகுதிகளை அழிக்கும் அளவிலான சக்திவாய்ந்த பூகம்பம் ஒன்று பங்களா தேஷத்திற்கு அடியில் உருவாகி உள்ளதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. நேச்சர் ஜியோசயன்ஸ் ஆய்விதழில் இந்த ஆய்வு முடிவு வெளியிடப்பட்டு உள்ளது.

உலகின் மிகப்பெரிய ஆற்றுப்படுக்கையின் கீழ் உள்ள 2 கண்ட தட்டுக்களில் (டெக்டானிக் பிளேட்) அழுத்தம் அதிகரித்து வருவதற்கான ஆதாரங்கள் இருப்பதாக அறிவியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். கண்டத்தட்டு சிதைவு ஏற்பட்டால் பிராந்தியத்தில் உள்ள சுமார் 140 மில்லியன் மக்கள் (14 கோடி பேர்) பாதிக்கப்படுவர் என்றும் ஆய்வாளர்கள் மதிப்பிட்டு உள்ளனர்.

பூகம்பத்தினால் மட்டுமல்ல நதிகளின் போக்கிலும் மாற்றம் ஏற்படலாம், கடல் மட்டத்திற்கு மிகவும் அருகாமையில்ஏற்கனவே அபாயக் கட்டத்தில் உள்ள நிலப்பகுதிகளிலும் கடுமையான மாற்றங்கள் ஏற்படலாம் என்று ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சப்டக்ஷன் மண்டலமாக இந்த புதிய பூகம்ப பகுதி அறியப்பட்டுள்ளது. இதில் பூமியின் மேலோட்டின் ஒரு பகுதி அல்லது டெக்டானிக் பிளேட் மெதுவாக மற்றொரு பிளேட்டின் அடியில் செல்லும் என்று எச்சரிக்கப்பட்டு உள்ளது.

சப்டக்ஷன் மண்டலத்தில்தான் இதுவரையில் உலகின் மிகப்பெரிய பூகம்பங்கள் ஏற்பட்டுள்ளன. 2004 ஆம் ஆண்டு இந்திய பெருங்கடல் பகுதியில் ஏற்பட்ட நிலநடுக்கம், சுனாமி அலைகள் தாக்கியதில் 230,000 பேர் பலியாகினர். 2011ஆம் ஆண்டு ஜப்பானில் பூகம்பம் ஏற்பட்டு, சுனாமி அலைகள் தாக்கி 20 ஆயிரம் பேர் அடித்து செல்லப்பட்டனர். புகுஷிமா அணு உலை விபத்து நேரிட்டது.

இதுவரையில், இத்தகைய சப்டக்ஷன் மண்டலம் கடலுக்கு அடியில்தான் இருந்தது. ஆனால் இப்போது இந்தியா, பங்களாதேஷத்துக்கு கீழ் உள்ள சப்டக்ஷன் மண்டலம் முழுதும் நிலப் பகுதியில் உள்ளது. இதுவே பூகம்ப அச்சுறுத்தலை இரட்டிப்பு ஆக்கியுள்ளது. கண்டத் தட்டுகளுக்கு இடையே சுமார் 400 ஆண்டுகளாக அழுத்தம் சேர்ந்துள்ளது, இவ்விடத்தில் மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் கிடையாது.

ஆய்வின் முன்னிலை பெற்ற கொலம்பியா பல்கலைக்கழகத்தின் அறிவியலாளர் மைக்கேல் ஸ்டெக்லர், இப்பகுதியில் அழுத்தம் பலமடங்கு அபாயகரமாக சேர்ந்து அடைவு கொண்டிருக்கலாம் என்று கூறியுள்ளார்.

அழுத்தமானது வெளிப்படுகையில், பூகம்பம் ரிக்டர் அளவுகோலில் 8.2 அல்லது 9-ஐயும் கடந்து அதி பயங்கரமான நிலநடுக்கம் ஏற்படலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியப் பெருங்கடல் மற்றும் இந்தியாவின் பெரும் பகுதிகளைக் கொண்டுள்ள ராட்சத கண்டத் தட்டு, வடகிழக்கு நோக்கி முட்டி மோதி ஆசியாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. பல மில்லியன் ஆண்டுகளாக இந்தப் பெருமோதல்தான் இமய மலை வளர்வதற்கு காரணமாக இருந்தது. இதுபோன்ற நிகழ்வின் காரணமாக 2015 இல் நேபாளத்தில் 9000 உயிரிழப்பு மற்றும் பயங்கர சேதத்தை ஏற்படுத்தும் பூகம்பம் ஏற்பட்டது என்றும் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷமும், கிழக்கு இந்தியாவும் மிதமான நிலநடுக்கங்களுக்கே தாங்காத பூமிப்பகுதியின் மேல் உட்கார்ந்திருக்கிறது. பிரமபுத்திரா, கங்கை நதி படுகையின் மீது அமர்ந்துள்ளது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இது பூமிக்கு அடியில் 12 மைல்களுக்கு வெறும் சேறும் சகதியும் உள்ள பகுதியாகும். இதனடியில்தான் சப்டக்ஷன் மண்டலம் உள்ளது. ஆகவே இப்பகுதியில் பயங்கர பூகம்பம் ஏற்பட்டால் வீதிகள், நதி கள், கட்டடங்களை பூமி விழுங்கி விடும் அபாயம் உள்ளது என்று ஆய்வில் பங்கு கொண்டிருந்த டாக்கா பல்கலைக்கழக ஆய்வாளர் சையத் ஹுமாயுன் அக்தர் கூறியுள்ளார்.

நியூ மெக்சிகோ ஸ்டேட் பல்கலைக்கழக நிலநடுக்க ஆய்வாளர் ஜேம்ஸ் நி பேசுகையில், இந்த ஆய்வு சரியானதாக இருந்தால், அழுத்தம்கூடி வரும் பிளேட் பகுதியில் பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

அப்படி ஏற்பட்டால் கிழக்கு இந்தியா நிச்சயம் கடுமையான, எதிர்பாராத விளைவுகளை சந்திக்கும். இதன் விளைவுகள் மியன்மார் வரை பரவும் என்று எச்சரித்துள்ளார். (இ-10)

பாரதச் செய்தி

## சாந்தனின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்-சீமான்

(டில்லி)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்றுள்ள சாந்தனின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், ராஜீவ்காந்தி படுகொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ள சாந்தன் தன்னை இலங்கை சிறைக்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது கோரிக்கை அடங்கிய கடிதத்தை அவர், இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். அவரது உணர்வை மதிக்க வேண்டும்.

செய்யாத குற்றத்திற்காக தமிழகச் சிறையில் உள்ள போது தனது தந்தையை இழந்துள்ளார். இலங்கைச் சிறையில் இருந்தால் அவரது உறவினர்கள் அவரைச் சந்திக்க வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர் கடிதம் எழுதியுள்ளார்.

ஆனாலும் குற்றமற்றவர் என்று நிரூபிப்பதற்கே நாம் போராட வேண்டியுள்ளது. சட்டத்தரணிகள் இலங்கை பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு தமிழ் உணர்விற்காக போராட்டம் நடத்தியுள்ளனர்.

ஆனால் அவர்களின் போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தராதது வருத்தம் அளிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## காஷ்மீரின் அமைதியை அரசு தொலைத்துவிட்டது ராகுல்காந்தி குற்றச்சாட்டு

(டில்லி)

ஆபத்தான கொள்கைகள் மற்றும் மிகவும் சாதாரண அணுகுமுறைகள் போன்றவற்றால் காஷ்மீரின் அமைதியை மோடி அரசு தொலைத்துவிட்டது என்று காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

ஜம்மு-காஷ்மீர் மாநில அனந்தநாக் மாவட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்க தளபதி புர்கான் வானி உட்பட அவரது ஆதரவாளர்கள் சிலர் இந்திய பாதுகாப்பு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர் அதனைத் தொடர்ந்து அங்கு வன்முறைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில், காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி டில்லியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இஸ்லாமியர்களின் பெருநாள் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்பொழுதே இந்த விடயத்தைத் தெரிவித்திருந்தார்.

ராகுல் அங்கு மேலும் குறிப்பிடுகையில், 'காங்கிரஸ் கூட்டணி பல ஆண்டுகள் உழைத்து காஷ்மீரில் அமைதியை கொண்டுவந்திருந்தது. ஆனால் மோடி அரசு ஆபத்தான கொள்கைகள் மற்றும் மிகவும் சாதாரண அணுகுமுறையால் அதை வீணடித்து, காஷ்மீரின் அமைதியை தொலைத்துவிட்டது.

சில மாதங்களுக்கு முன் நிதி அமைச்சர் அருண் ஜெட்லியை சந்தித்த போது அவரிடம் காஷ்மீர் குறித்த எனது கவலையை வெளியிட்டேன். எனினும் அவர் அதை பொருட்படுத்தவில்லை. மோடியின் அரசே இவ்வாறு தான் உள்ளது' என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# பொருத்து வீட்டிலிருந்து பொருளாதார மையம்

# வட மாகாண அபிவிருத்தி எப்போதும் சர்ச்சைக்குள்



வடக்கு மாகாணத்திற்கான அபிவிருத்தித் திட்டங்கள் எப்போதும் சர்ச்சைக்குரியதாகவே இருந்து வருகின்றது. கடந்த அரசாங்கத்தில் மட்டுமன்றி புதிய நல்லாட்சி அரசாங்கத்திலும் இது தொடரவே செய்கின்றது. பொருத்து வீட்டுப் பிரச்சினை, பொருளாதார மத்திய நிலையம் என அவை நீண்டு கொண்டே செல்கின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கான அபிவிருத்தி என்பது தற்போதைய அப்பிரதேச வளங்களையும் தேவைகளையும் அடிப்படையாக கொண்டதாக அமைய வேண்டும். அதுவே மக்களுக்கு பயன்தரக் கூடியதாகவும் இருக்கும்.

ஆனால் அபிவிருத்தி எனற போர்வையில் மாகாண மக்களின் விருப்பங்களையும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் பெறாது திணிக்க முற்படக்கூடாது. அது நல்லாட்சிக்கு நல்லதும் அல்ல. ஆரம்பத்தில் வவுனியா பொருளாதார மத்திய நிலைய விவகாரம் கூட அவ்வாறே உருவானது.

மத்திய அரசாங்கம மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளால் தெரிவு செய்த ஓமந்தை என்ற இடத்தை புறக்கணித்து, நகரில் இருந்து 2 கிலோமீற்றர் தூரத்திற்குள் அமைந்துள்ள தாண்டிககுளம் விவசாய பண்ணை, விவசாயக் கல்லூரி, விவசாய விதை உற்பத்தி நிலையம் என்பவற்றுடன் இணைந்த காணி தான் பொருத்தமானது என கூறி அதில் விடாப்பிடியாக இருந்தது.

அந்தக் காணியில் இருந்து 3-5 ஏக்கர் காணியை கோரியும் இருந்தது. இந்த விவகாரமே இன்று பூதாகரமாக மாறி தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் இரு அணிகளை ஏற்படுத்தியுள்ளது.

வன்னியை பிரதிநிதித்துவப்படுத்தும் மத்திய அமைச்சரும் தாண்டிக்குளத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்பட வேண்டும் எனக்கூற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஒரு அணியும் அதனை வலுச்சேர்த்து மத்திய அரசாங்கத்துடன் கைகோர்த்து அபிவிருத்தியை தீர்மானிக்கும் பொறுப்பை மத்திய அரசின் அனுசரணையுடன் செய்ய முற்பட்டுள்ளது.

அந்த மத்திய அமைச்சர் அவ்வாறு கோருவதற்கு வேறு பல காரணங்களும் இருக்கிறது. இது உசிதமானது இல்லை. ஏனெனில் மாவட்டத்தில் உள்ள விவசாய அமைப்புக்கள் மட்டுமன்றி வடபகுதி விவசாய அமைப்புக்கள் கூட தாண்டிக்குளத்தை கடுமையாக எதிர்த்து வருகின்றன. முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்ட விவசாய அமைப்புக்கள் அனைத்தும் எதிர்க்கும் நிலையில் இந்த 200 கோடி ரூபா அபிவிருத்தி யாருக்காக...?

விவசாய மக்கள் விருப்பத்தை தமிழரசுக் கட்சி சார்ந்த அரசியல் வாதிகள் சிலர் குழப்ப முனைவது ஏன் என்ற பெரிய கேள்வி இந்த இடத்தில் எழுகிறது. இது பற்றி மக்களும் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தற்போது அபிவிருத்தி, மக்களின் தேவை என்பதற்கு அப்பால் கட்சி அரசியல் புரையோடிப்போயுள்ளது. வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சி.சிறிதரன், த.சித்தார்த்தன், சாள்ஸ் நிர்மலநாதன், வடமாகாண அமைச்சர்களான பொ.ஐங்கரநேசன், த.குருகுலராஜா மற்றும் பெரும்பான்மையான மாகாணசபை உறுப்பினர்களும் ஓமந்தையில் தான் பொருளாதார மத்திய நிலையம் அமைய வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

மக்களை முதன்மைப் படுத்தும் அணி வெல்லக் கூடாது. அவர்களை தோற்கடித்து மத்திய அமைச்சர் விரும்பும் தாண்டிக்குளத்தில் அமைக்க வேண்டும் என்ற தோரணையில் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

அதற்காக இவர்கள் மத்திய அமைச்சர் ஓமந்தையை ஏற்றுக்கொள்ள மாட்டார். ஓமந்தையில் 2010 ஆம் ஆண்டு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொருளாதார மத்திய நிலையத்திற்காக ஒதுக்கப்பட்ட 18 ஏக்கர் காணிக்கு புகையிரதக் கடவையை கடந்து போக வேண்டும் என்ற சாட்டுப் போக்குகளைக் கூறுகிறார்கள்.

இந்த புதிய நல்லாட்சி அரசாங்கத்தை கொண்டு வந்த கூட்டமைப்பு ஒரு பொருளாதார மத்திய நிலையத்தை விரும்பும் இடத்தில் கொண்டு வரமுடியவில்லை என கூறுவது வேடிக்கையானதும் கூட. ஆகவே, இங்கு தாண்டிக்குளம் என்ற முடிந்த முடிவில் அந்த அணி செயற்படுகிறது. அவர்கள் முதலமைச்சருக்கு எதிராக செயற்படுவதாக நினைத்து விவசாயிகள் வயிற்றில் அடிக்க முனைகிறது என்றே கருதத் தோன்றுகின்றது.

உரிமைக்காக போராடிய இனம் இன்று ஒரு பொருளாதார மத்திய நிலையத்திற்காக இரண்டு பட்டு நிற்பது எமது மக்களின் எதிர்காலம் குறித்து சற்று சிந்திக்கவே தூண்டுகின்றது. குழிபறிக்கும் செயற்பாடுகளை விடுத்து அவர்கள் ஒன்றுபட வேண்டும். ஆனால் அது நடப்பதாக தெரியவில்லை.

மாகாண சபை மற்றும் வன்னி மக்கள் பிரதிநிதிகள் மத்தியில் இதற்கு தீர்வை எட்ட முடியாத நிலையிலேயே இந்த விவகாரம் எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனின் கவனத்திற்கு சென்றது. ஆனால் அவர் கூட அதை உடனடியாக தீர்க்காது உட்கட்சி மோதலை மேலும் தூண்டி விடும் வகையில் செயற்பட்டிருப்பது வேதனையளிக்கிறது.

தாண்டிக்குளம் பகுதியில் விவசாயக் கல்லூரி அமைந்துள்ளது. வடமாகாணத்திற்கான ஒரே ஒரு கல்லூரி இதுவே. இன்று அதனை விஸ்தரிக்க வேண்டிய தேவை உள்ளது. இவ்வாறான சூழலில் அதன் முன்னால் அதற்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் பொருளாதார மத்திய நிலையம் அமைபபது எவ்வகையில் பொருத்தமானது.

கடந்த காலத்திலும் சரி, தற்போதும் சரி களனி போன்ற பல்கலைக்கழகங்களில் தமிழ மாணவர்களுக்கு நிகழும் சம்பவங்களும் அங்கு ஏற்பட்ட வன்முறைகளும் மீள நினைவுபடுத்தி பார்க்கப்பட வேண்டியவை. இந்த விவசாயக் கல்லூரி கூட கடந்த காலத்தில் பல போராட்டங்களுக்கு மத்தியிலேயே அமைக்கப்பட்டும் இருந்தது. இதற்கு பாதிப்பு வருவது என்பது விவசாயத்துறை சார்ந்த தமிழ மாணவர்களுக்கு நிச்சயமாக பாதிப்பை ஏற்படுத்தும்.

இதனாலேயே அந்த மாணவர்கள் தம்மை நிம்மதியாக படிக்க விடுமாறும் உருக்கமாக கூட்டமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் வரவேண்டும் என பலரும் கோரும் நிலையில் தமிழ் அரசியல் தலைமைகளே அதனை பாதிக்க செய்வது எந்த வகையில் நியாயம். அவர்களுக்கு ஏன் இது புரியவில்லை.

காட்டிக்கொடுப்புக்களும், உடைவுகளுமே தமிழர் வரலாற்றை முள்ளிவாய்க்கால் வரை கொண்டு சென்றது. இதை எவரும் மறந்து விடவில்லை. இந்த நிலையில் ஒரு பொருளாதார மத்திய நிலையத்திற்காக இந்த மோதல் என்பது சரியானதும் அல்ல. விவசாயிகள் நன்மை கருதி கொண்டு வரப்படும் ஒரு பொருளாதார மத்திய நிலையத்தைக் கூட விவசாயிகள் விருப்பப்படி தீர்மானிக்க சில அரசியல்வாதிகள் மத்திய அரசுடன் இணைந்து தடையாக இருக்கிறார்கள் என்றால், எவ்வாறு நாம் நிரந்த தீர்வைப் பற்றி பேசுவது. தனிப்பட்ட கட்சி மோதல்கள், கருத்து வேறுபாடுகள் அரசியல்வாதிகளுக்கு இருக்கலாம். அது அவர்கள் சார்ந்த பிரச்சினை. ஆனால் அதை மக்கள் மீது எவ்வகையிலும் திணிக்கக்கூடாது. அது ஆரோக்கியமானதும் அல்ல.

இன்று மத்திய அரசாங்கம் கூட இந்த திட்டம் வவுனியாவிற்கானது. பொருத்தமான இடத்தை நீங்களே தெரிவு செய்து தாருங்கள் எனக் கூறி விட்டது. அப்படியாயின் விவசாயிகளுக்காக இந்த திட்டத்தை அமைக்க ஏன் இவ்வளவு முரண்பாடுகள். மத்திய அரசாங்கம் விட்டுக் கொடுத்தாலும் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் விட்டுக் கொடுக்காத நிலை முதலமைச்சருக்கு எதிராக மேற்கொள்வதாக கருதி மேற்கொள்ளும் இந்த நகர்வுகளால் ஜெயிக்கப் போவது முதலமைச்சரே. அதற்கு காரணமும் உண்டு. பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையில் விவசாயிகள், நிபுணர்குழு ஆகியோரின் விருப்பம் போல் முதலமைச்சர் அமைத்தால் அவர் தூரநோக்கு அடிப்படையில் மேற்கொண்ட திட்டமிடலுக்கு கிடைத்த வெற்றியாகவே அது அமையும். விவசாயிகள் மத்தியில் அவருக்கான வரவேற்புக்கூட அதிகரிக்கும். ஆனால் அதை தடுத்து குழப்பி தாண்டிக்குளத்தில் அமைப்பதால் எதுவும் நடந்து விடப்போதிலலை.

அதிலும், முதலமைச்சர் விவசாயிகள், நிபுணர்குழு, மக்கள் விருப்பப்படி ஓமந்தையில் அமைக்க முற்பட்டேன். ஆனால் அதை மத்திய அரசுடன் இணைந்து சிலர் குழப்பியுள்ளார்கள். நான் என்ன செய்வது என தெரிவிக்க வாய்ப்புள்ளது. இது விவசாயிகள் மத்தியில் பாரிய குழப்பத்தை ஏற்படுத்தும்.

இந்த இடத்தில் கடந்த பாராளுமன்ற தேர்தலின் போது ஒதுங்கியிருந்த முதலமைச்சர் "மக்களுக்காக மக்களுடன் நிற்கக்கூடியவர்களை நீங்கள் தெரிவு செய்யுங்கள்" என்று மக்களுக்கு கூறியமை தான் ஞாபகத்திற்கு வருகிறது. யாழ்.மாவட்டத்தில் சிறிதரன் எம்.பி தற்போதும் மக்கள் நலன் சார்ந்து சிந்தித்து ஓமந்தைக்காக குரல் கொடுத்து வருகிறார். அதற்காகவே அவர் அன்று அதி கூடிய வாக்குகளையும் பெற்றிருந்தார்.


வடக்கின் பல பகுதிகளிலும் விவசாயிகளே அதிகமாக வாழ்கிறார்கள். இந்த நிலையில் அவர்களின் விருப்பம், கோரிக்கை எனபவற்றை புறக்கணிபபது வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கட்டாயம் தாக்கத்தை ஏற்படுத்தும். இதை தமிழ் தலைமைகள் புரிந்து கொள்ள வேண்டும். வடககில் தடம்பதித்து வரும ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பவற்றுக்கு கூட வாய்பபாகிவிடும்.

ஆகவே, முதலமைச்சருக்கு எதிரான போக்கில் பாதிக்கப்படப்போவது அப்பாவி விவசாயிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புமே என்பதே உண்மை. இதை புரிந்து உடனடியாக ஒன்றுபட்டு விவசாயிகளின் விருப்பப்படி பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க கூட்டமைப்பின் தலைவர் நடவடிக்கை எடுபபதே ஆரோக்கியமான சூழலை உருவாக்கும்.




நன்றி:-இணையம்

# நாமலுக்கு வீட்டிலிருந்து உணவு



(கொழும்பு)

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவிற்கு வீட்டிலிருந்து உணவு வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நிதி மோசடிச் சம்பவம் ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்ட நாமல் ராஜபக்ஷ, கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் வழங்கப்படும் உணவுகளுக்குப் பதிலாக வீட்டிலிருந்து உணவு தருவித்து உட்கொள்ள அனுமதியளிக்குமாறு நாமல் ராஜபக்ஷ, சிறைச்சாலை ஆணையாளரிடம் நேற்று முன்தினம் கோரியுள்ளார்.

நாமல் ராஜ பக்ஷவின் கோரிக்கையை சிறைச்சாலை ஆணையாளர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதன்படி நேற்று முன்தினம் முதல் வீட்டிலிருந்து உணவு தருவித்து உட்கொள்ள நாமலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.(இ-10)

# உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மகிந்த எட்டி உதைந்திருப்பார்

## ஐ.தே.க.சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் உயர் நீதிமன்றத்தினால் இவ்வாறானதொரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்குமாயின் தீர்ப்பை எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு தீர்ப்பளித்த உயர்நீதிமன்ற நீதியரசர்களையே வீட்டுக்கு அனுப்பி வைத்திருப்பார் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.**

கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ர்ாஜகருணா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்), தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஆகியவற்றின் அதிகரிப்புக்கு உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தடையுத்தரவுக்கு, அரசாங்கம் தலைவணங்குகின்றது.

அத்தியாவசியப் பொருட்களில் 15 பொருட்கள், நிவாரண விலைக்கு வழங்கப்படும். கடந்த அரசாங்கத்தின் போது உயர்நீதிமன்றத்துக்கு விடுத்த அழுத்தங்களை, இந்த அரசாங்கம் செய்யாது. அக்காலத்தில், நீதிமன்றங்களின் தீர்ப்புகள் அலரிமாளிகையிலேயே எடுக்கப்பட்டன. எனினும், நல்லாட்சி அரசாங்கம், நீதிமன்றங்களின் சுயாதீனத்தின் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தின் சுயாதீனத்தை பாதுகாக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். அதிகரிக்கப்பட்ட வரியான வற் குறைக்கப்படும். கடந்த அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் காரணமாகவே, இந்த வரியை அதிகரிக்கவேண்டிய நிலைமை நல்லாட்சிக்கு ஏற்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# நல்லிணக்கப்பங்காளராக இலங்கையுடன் அமெரிக்கா

## அமெ.உதவி இராஜாங்கச் செயலர் தெரிவிப்பு



(கொழும்பு)

போருக்குப் பிந்திய நல்லிணக்க செயல்முறைகளை இலங்கை முன்னோக்கி நகர்த்துவதற்கு, அதன் பங்காளராக இணைந்திருப்பதில் அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலர் நிஷா பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் இன்னும் அதிகமான பணிகள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. இதற்கு இலங்கைக்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான உறவுகளை அமெரிக்கா வரவேற்கிறது. அமெரிக்காவும் இலங்கையும் பொதுவான இலக்குகளை கொண்டுள்ளன. பங்காளர்களான எமக்கிடையில், எல்லாக் காலத்திலும் உயர்ந்த மட்டத்திலான உறவு இருந்து வருகிறது.

ஜனநாயக ஆட்சி, மனித உரிமைகளுக்கு கூடுதல் மதிப்பளித்தல், நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறல் போன்ற தமது மக்களின் கரிசனைகளுக்குப் பதிலளிக்க இலங்கை மேற்கொள்ளும் அர்த்தமுள்ள, உறுதியான நகர்வுகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு அளிக்கும்.

இலங்கையில் நாம் பல்வேறு துறைகளில் குறிப்பாக, விவசாயம் தொடக்கம், தொழிற்றுறை வரை முதலீடுகளை மேற்கொள்வதுடன், கல்வி, சுகாதாரம், மின்சாரம், இயற்கை வளங்கள், மனிதாபிமானச் செயற்பாடுகளிலும் தொடர்ந்து ஈடுபடுவோம்.

எல்லா இலங்கையர்களையும் முன்னேற்றுவதற்கு பொருளாதார அபிவிருத்தியை விரைவு படுத்தவும், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கவும் இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்கா. பங்காளராக இணைந்து செயற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், இரண்டு நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அனைத்துலக மற்றும் பிராந்திய விவகாரங்கள் மற்றும் நிகழ்வுகள்; இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீடு, கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் வோஷிங்டனில வரும் செப்டெம்பர் மாதம் நடக்கவுள்ள, சமுத்திரங்களின் பாதுகாப்புத் தொடர்பான, "எமது சமுத்திரங்கள்" என்ற தொனிப் பொருளிலான கருத்தரங்கில், இலங்கையின் பங்களிப்புத் தொடர்பாகவும், இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படவுள்ளது. (இ-10)

# இன்று ஒரு தகவல்

## நாம் யாருக்காக வாழ்கிறோம்?

விபரமறியாத வயதுவரை நாம் நமக்காக வாழ்கிறோம் .இதில் தவறேதும் இல்லை. ஆனால் பக்குவப்பட்ட பிறகு இது முறை ஆகாது.

ஒருவன் மணமானதும் தன் மனைவிக்காக வாழ்ந்தாக வேண்டும்.அதேபோல் மனைவி தன் கணவனின் நலத்திற்காக வாழ்ந்தாக வேண்டும். பிள்ளைகள் பிறந்ததும் அவர்கள் பிள்ளைகளுக்காகவே வாழ வேண்டும். அவன் தன் மனைவியை இழந்தாலும் அவள் தன் கணவனை இழந்தாலும் பிள்ளைகளுக்காக வாழ்ந்தே ஆகவேண்டும்.

வயதான பெற்றோர்களை உடையவர்கள், அவர்களை நல்லபடியாக வைத்துக் காப்பாற்றும் நோக்கத்துடன் வாழவேண்டும்.

பொறுப்பற்றவர்களை மூத்தவர்களாகக் கொண்ட இளைஞர்கள் அவர்களுடைய பொறுப்புகளையும் சேர்த்துச் சுமந்து வாழ வேண்டும்.பொறுப்புள்ள மூத்தவர்கள் தங்கள் இணையவர்கள் வளர்த்து ஆளாக்கவும் அவர்களுக்குரிய திருமணம்,வேலை போன்ற சமூகக் கடமைகளுக்காகவும் பின்னர் தொடர்ந்து அவர்கள் நலனுக்காகவும் வாழ வேண்டும்.

யாருமே இல்லாதவர்கள் தங்களுக்கென்று ஒரு வட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு அவர்களது நலன் கருதி வாழ வேண்டும்.

இந்த இருபதாம் நூற்றாண்டிற்குப் பொருந்தாத கருத்தை நான் விபரிப்பதாக யாரும் எண்ணிவிடப் போகிறீர்கள். இல்லையில்லை! நடைமுறைக்குச் சாத்தியமானதையே பேசுகிறேன்.எப்படி என்கிறீர்களா?

நாம் நமக்காக வாழும்போது அல்லது சுயநலத்தையே பெரிதாக எண்ணும் போது நம்மைவிட்டு எல்லோரும் விலகிப் போகிறார்கள்.நம்மைப் பார்த்தாலே வெறுக்க ஆரம்பிக்கிறார்கள்.இது நாளடைவில் மற்ற நம்முடைய சுயநல இன்பங்களுக்கெல்லாம் தூசு என்பதை உணர்த்த ஆரம்பிக்கும்.அப்போது வருந்திப் பயனில்லை.

நம் சுயநலங்களை மறந்து நம்மவர்களுக்காகப் பாடுபடும்போது நீ(ங்கள்) எனக்காகப் பாடுபட்டது போதும் உன்(உங்களு)க்கு மிஞ்சியது போகத்தான் எனக்கு என்று சொல்லவும் உணரவும் ஆரம்பிக்கும் தருணம் வரை நாம் பாடுபடத்தான் வேண்டும்.

நான்தான் உழைத்து ஓடாகப் போகிறேனாக்கும்! நான் என்ன சுகத்தைக் கண்டேன்? என்றெல்லாம் புலம்புவதை நிறுத்திவிட்டு இவற்றையெல்லாம் சம்பந்தப்பட்டவர்களே சொல்லும் வகையில் காத்திருக்க வேண்டும்.

நாம் நம்மவர்களுக்காக வாழும் போது அவர்கள் பதிலுக்கு நமக்காக வாழ ஆரம்பிக்கிறார்கள்.

வாழ்க்கை இனிமையாக இருக்கவும் வாழ்வில் சுவை கூடவும் இதை விடச் சிறந்த வழி இருப்பதாகத் தெரியவில்லை.

**லேனா தமிழ்வாணன்**

# சிவத்தமிழ் செல்வி அம்மையாரும் சைவத்தமிழ் ஆய்வு நூலகமும்

சிவத்தமிழ் செல்வி அம்மையார் சைவத்தமிழ் உலகில் 83ஆண்டுகள் நாங்கள் பயன் பெற வாழ்ந்து நற் பெருந் தெய்வமாக விளங்கியவர். அம்மையார் இவ்வுலகை நீத்து 8 ஆண்டுகள் கடந்தோடி விட்டன. இவரின் மறைவினால் ஏற்பட்ட மன உடைவுகளும் மன உளைவுகளும் ஒருபுறம் இருக்கலாம். அம்மையார் துன்பம் வந்துற்ற போதும் சோர்ந்து விடாது இருவினையொப்பு என்ற நிலையில் நின்று இன்பத்தையும் துன்பத்தையும் சரிவர நோக்கி வாழ்ந்து வழிகாட்டியவர். இவர் எமக்கெல்லாம் நல்வழி காட்டியாக விளங்கியவர்.

ஒருகாலத்தில் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் பண்டிதர் வகுப்பு நடத்தும் கலாசாலையாக இருந்தது. இங்கு தான் அம்மையார் தமது ஆரம்பக் கல்வியைக் கற்ற பெருமையுடையது இப் பாடசாலை. இவ் வித்தியாலயத்தில் இடம் பெற்ற பண்டிதர் வகுப்பில் பண்டிதையாகிய அம்மையார் பண்டிதர் வகுப்பு மாணவர்களுக்கு பாடம் கற்பித்தார். அம்மையார் கற்பித்த பண்டித மாணவர் பரம்பரை ஒன்று இன்றும் உண்டு. இன்று கனிஷ்ட வித்தியாலயம் யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் பெற்றது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாகும்.

அம்மையார் தேடிய நூல்கள் அனைத்தையும் திருமறை மடத்தில் ஒரு அலுமாரியில் வைத்து பாதுகாத்தார். 1985 ஆம் ஆண்டு மணிவிழா ஞாபகமாக மகளிர் இல்ல மாடிக் கட்டடத்தில் மணிவிழா ஞாபகார்த்த படிப்பகத்தில் சேர்த்து மகளிர் இல்லப் பிள்ளைகளின் பயன்பாட்டுக்கு பயன் படுத்தப்பட்டது. 1988 ஆம் ஆண்டு *ஸ்ரீ துர்க்கா நூலகம்* என்னும் பெயரில் புதிய கட்டடம் கட்டி நூலகம் இயங்கியது. அக்காலத்தில் 1000க்கு மேற்பட்ட நூல்களைக் கொண்ட நூலகமாக காட்சியளித் தது. இதன் பயன்பாடு மகளிர் இல்லப் பிள்ளைகளுக்காகவே இருந்தது.



நம் யாழ்ப்பாணம் கல்வி வளம் பெற்ற நாடு. கல்வியால் உயர்ந்த நாடு பிறந்தகத்திலும் பார்க்க புக்தகமாகக் கொண்ட கந்தபுராணப் படனத்தினால் பெருமையுடையது. நாவலர் பெருமான் தொடக்கி வைத்த கந்தபுராண கலாசாரத்தை பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையால் பிரகாசிக்கச் செய்து சிறப்புக் கொண்டது யாழ்ப்பாணம்.

சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் பவள விழாவை முன்னிட்டு 07.01.2002ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. சிவத்தமிழ்ச்செல்வி சைவத்தமிழ் ஆய்வு நூலகத்தை இந்நாட்டின் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பெற்ற தனிப்பெரும் சிறப்பைக் கொண்டதாகும். இப் பெருமகனார் நம் வட மாகாணத்தின் முதல் அமைச்சராகப் பதவி வகித்து நம் இனத்தின் மனித சமுதாய நீதிக்கும் சைவநீதிக்குமாக பாடுபட்டு பரிணாம வளர்ச்சி பெற்றுள்ளார் என்பதில் பெருமை கொள்கின்றோம்.

சைவசித்தாந்த துறை விளங்கவும் தமிழ் மொழியின் சிறப்புக்காகவும் ஆய்வு செய்ய சிறந்த இடவசதி குறையை நீக்கும் முகமாக அமைக்கப் பட்டதே இந்நூலகம். இங்கு சங்ககால தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள், சைவ சித்தாந்த ஆய்வு நூல்கள், திருமுறைகளும் உரைச்சிறப்பு பெற்ற நூல்களும் திருக்கோவில்களின் மகா கும்பாபிஷேக மலர்களும் கல்லூரிகள் பாடசாலைகளின் வரலாற்று சிறப்புகு மலர்களும் சைவ சித்தாந்தம், ஞானசம்பந்தம் போன்ற தமிழ்நாட்டு நூல்களும் பருவகால சஞ்சிகைகளும் பெரியோர்களின் வரலாற்று நூல்களுமாக 8000க்கு மேற்பட்ட நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ், சைவம், சைவ சித்தாந்த ஆய்வுகளை மேற்கொள்ள இருக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. இந்நூலகம் திருக்கேதீஸ்வர சிவாலயத்தை நாவலர் பெருமான் தேன் பொந்து என வர்ணித்தார். இதே போன்று இந் நூலகத்திலும் தேட முடியாத, அறிய முடியாத நூல்களைக் கொண்டு அமைந்தது சிவத்தமிழ் செல்வி அம்மையாரின் நினைவை கொள்ளும் இன்றைய நாளில் சிவத்தமிழ் செல்வியாரின் வியத்தகு பணிகளை சிந்திப்போமாக.

**க.சிவபாலன்**

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜியின் 125ஆவது படம் 'உயர்ந்த மனிதன்'

206



தில்லானாமோகனாம்பாள் படத்தில் சிவாஜியும் பத்மினியும்

நாதசுர வித்வான் சிக்கல் சண்முகசுந்தரமாக சிவாஜியும் நடன மங்கை மோகனாம்பாளாக பத்மினியும் வாழ்ந்து காட்டினர். வைத்தி என்ற நகைச்சுவை கதாபாத்திரத்தில் நாகேஷ் சிறப்பாக நடித்தார்.

மற்றும் ஏவி.எம் ராஜன், பாலாஜி, டி.எஸ் .பாலையா, டி. ஆர்.ராமச்சந்திரன், எம்.என்.நம்பியார் ஆகியோரும் நன்கு நடித்தனர்.

கே.வி.மகாதேவன் இசை அமைப்பில் நலம் தானா?, மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன? ஆகியவை உட்பட அனைத்துப் பாடல்களும் இனிமையாக அமைந்தன. இன்னொரு விசேஷம் இந்த மாபெரும் இசைச் சித்திரத்தில் ஆண் குரலே ஒலிக்கவில்லை. அதாவது சிவாஜிக்குப் பாடலே கிடையாது! சாதாரண டைரக்டராக இருந்திருந்தால் ஒரு கனவுக் காட்சியை புகுத்தி சிவாஜியைப் பாட வைத்திருப்பார். ஏ.பி.நாகராஜன் அந்தத் தவறை செய்யவில்லை.

### 125 வது படம்

சிவாஜியின் 125 ஆவது படம் என்ற சிறப்பைப் பெற்றது. ஏவி.எம். தயாரிப்பான உயர்ந்த மனி தன்.

அந்த சிறப்புக்கு ஏற்ற முறையில் படம் அமைந்திருந்தது. காதலி (வாணிஸ்ரீ) தீயிற்கு இரையானதால் நெஞ்சில் ஏற்பட்ட ஆறாத காயத்துடன் சவுகார் ஜானகியை மணந்து தாமரை இலைத் தண்ணீர் போல வாழும் உயர்ந்த மனிதனை கண் முன் கொண்டு வந்து நிறுத்தினார் சிவாஜி.

தனக்கு கார் டிரைவராக இருக்கும் பால்ய நண்பர் மேஜர் சுந்தரராஜனுடன் அந்த நாள் ஞாபகம் வந்ததே நண்பனே என்ற பாடல் காட்சியில் சிவாஜியின் நடிப்பு கற்பனைக்கும் எட்டாத அற்புதம்.

சிவகுமாரும் பாரதியும் இளம் ஜோடியாக நன்கு நடித்தனர். டாக்டர் வேடத்தில் அசோகன் நெஞ்சைத் தொடும்படி நடித்தார்.

ஜாவர் சீதாராமனின் வசனமும் கிருஷ்ணன்-பஞ்சு டைரக்ஷனும் எம்.எஸ்.விஸ்வநாதனின் இசையும் படத்தின் சிறப்பை மேலும் உயர்த்தின.

உயர்ந்த மனிதன் வெற்றி விழாவில் அறிஞர் அண்ணா கலந்து கொண்டு சிவாஜி கணேசனைப் பாராட்டிப் பேசினார். திருப்பதி சென்றதைத் தொடர்ந்து திராவிட இயக்கத்தொடர்புகளில் இருந்து சிவாஜி கணேசன் விடுபட்டு வெளியே வந்த போதிலும் பெரியாரிடமும் அண்ணாவிடமும் தொடர்ந்து மதிப்பும் மரியாதையும் நட்புறவும் வைத்திருந்தார்.

இதுகுறித்து, சிவாஜிகணேசன் கூறியிருப்பதாவது,

### பிரியவில்லை

நான்ஒரு இலட்சியத்துக்காக அண்ணாவை விட்டு வெளியே வந்தேனே தவிர, அண்ணா எப்போதும் என் அண்ணா தான். நான் இருந்த இடத்தை விட்டு வெளியே வந்தேனே தவிர அண்ணாவை விட்டுப் பிரியவில்லை.

அண்ணா தனது கட்சியை அரசியலால் நடத்தவில்லை,ல அன்பால் நடத்தினார். அதனால் அதை ஒரு மாபெரும் கட்சியாக வளர்த்தார். 1967 தேர்தலில் அண்ணா வெற்றி பெற்று முதல் அமைச்சர் ஆனார். நான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

சில காலத்திற்குப் பின் அண்ணாவின் உடல் நலம் குறைந்து லண்டனுக்கு உடல் பரிசோதனைக்காகச் சென்றிருந்தார். அப்போது என் மகள் சாந்திக்கு திருமணம்.

என் நண்பர் வேலுச்சாமி என்ற டாக்டருக்கு விமான டிக்கெட் வாங்கிக்கொடுத்து லண்டனுக்கு அனுப்பி அண்ணாவுக்குத் திருமண அழைப்பிதழ் கொடுக்கச் செய்தேன்.

திருமணம் நன்றாக நடக்கட்டும் இன்னும் பத்து நாட்களில் நானும் சென்னை வந்து விடுவேன் என்று அண்ணா செய்தி அனுப்பினார்.

சாந்தியின் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தது. அதற்கு அடுத்த வாரம் அண்ணா சென்னை திரும்பினார். விமான நிலையத்தில் வைத்தே மகளையும் மருமகனையும் அழைத்துக்கொண்டு நம் வீட்டுக்கு வருமாறு கணேசனுக்கு தகவல் கொடுங்கள் என்று கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்.

### அண்ணாவின் ஆசி

நான் என்னுடைய மகள் சாந்தியையும் மருமகன் நாராயண சாமியையும் அழைத்துக்கொண்டு அறிஞர் அண்ணா வீட்டுக்குச் சென்றேன். அண்ணாவை நமஸ்காரம் செய்தவுடன் அவர் ஒருபுடைவையும் வேட்டியும் மணமக்களுக்குப் பரிசாகக் கொடுத்து ஆசிவழங்கினார்.

ஏ.வி.எம்.மின் உயர்ந்த மனிதன் என்னுடைய 125வது படமாக வெளியாகியிருந்தது. அதையொட்டி ஏவி.எம் அவர்களும் என்னுடைய நண்பர் கோபால் அவர்களும் ஏவு.எம் ராஜேசுவரி கல்யாண மண்டபத்தில் ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள். வடநாட்டில் இருந்து பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். வை.பி.சவான் வந்திருந்தார்.

(தொடரும்)

# இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் வந்தால்

# ஜனாதிபதியை வடக்கிற்குள்வர நாம் அனுமதியளிக்கமாட்டோம்

## மீனவர்கள் கடும் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

**இந்திய மீனவர்களை இலங்கை கடலுக்குள் மத்திய அரசு அனுமதித்தால் ஜனாதிபதி உட்பட மத்திய அரசை சேர்ந்த எவரையும் நாங்கள் வடக்கு மாகாணத்திற்குள் அனுமதிக்கமாட்டோம் என வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபைக்கு முன்பாக நடைபெற்ற போராட்டத்தின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களை இலங்கை கடற்பரப்பிற்குள் வாரத்தில் இரண்டு நாட்கள் அனுமதிக்குமாறு இந்திய அரசு இலங்கை அரசிடம் கோரியுள்ள நிலையில் இந்தக் கோரிக்கையை தாம் பரிசீலனை செய்வதாக பாதுகாப்பு அமைச்சர் மற்றும் மீன்பிடி அமைச்சர் ஆகியோர் கூறியுள்ள நிலையில், மேற்படி கோரிக்கையை உடனடியாக மறுதலிக்க கோரியும்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட சட்ட மூலம் தொடர்பில் வடக்கு மாகாண சபை வழங்கிய ஆலோசனையை மீளப் பெறுமாறும் கோரியே மேற்படி போராட்டம் நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபைக்கு முன்பாக முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மீனவர்கள், கடந்த பல தசாப்தங்களாக இந்திய மற்றும் தென்னிலங்கை மீனவர்கள் வடக்கு பகுதிக்குள் அத்துமீறிய மீன்பிடித்தொழிலை சட்டவிரோதமாக மேற்கொண்டு வருகின்றனர்.

இதனால் எமது கடல் வளங்கள் அழிவடைந்து வருவதோடு மீன்பிடித்தொழிலை தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாத நிலையும் உள்ளது.

இது தொடர்பில் பல நூற்றுக்கணக்கான போராட்டங்களையும் பல ஆயிரக் கணக்கான கோரிக்கைகளையும் மத்திய, மாகாண, மற்றும் இந்திய அரசுகளிடம் கோரிக்கைகளையும் விடுத்திருந்தோம். ஆனாலும் எந்தப் பிரயோசனமும் இல்லை. மாறாக இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ந்த வண்ணமே உள்ளது. இந்த நிலை இப்போது வரை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இந்த நிலையில் எமது மீன்பிடித்தொழிலை நாம் கைவிடும் அவல நிலையில் இருக்க, தற்போது வாரத்தில் இரண்டு நாட்கள் இந்திய மீனவர்களை இலங்கை கடற்பரப்பிற்குள் மீன்பிடிக்க அனுமதிக்குமாறு இந்திய அரசு இலங்கையிடம் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கையை தாம் பரிசீலனை செய்வதாகவும் இலங்கை அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு என்பது எம்மை மேலும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளது.

இதற்கு முன்னர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனால் எல்லை தாண்டும் மீனவர்களுக்கும், தடை செய்யப்பட்ட மீன்பிடி தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் சட்டத்தின் மூலமாக குற்றவியல் தண்டனை வழங்கப்பட வேண்டும். எல்லை தாண்டும் மீனவர்களது வள்ளங்கள் பறிமுதல் செய்யப்படல் வேண்டும். தடை செய்யப்பட்ட உள்ளூர் மீன்பிடித்தொழில்களும் நிறுத்தப்பட வேண்டும் என பல விடயங்கள் உள்ளடங்கலாக சட்ட மூலம் ஒன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

இந்தச் சட்ட மூலம் தொடர்பில் மாகாண சபைகள் அனைவற்றிடமும் மத்திய அரசு கேட்டிருந்தது. இதற்கு வடக்கு மாகாண சபை தவிர்ந்த ஏனைய மாகாண சபைகள் எந்தவித மாற்றமும் இன்றி ஒப்புதல் அளித்திருந்தன. ஆனால் வடக்கு மாகாண சபை, வடக்கில் மேற்கொண்டு வரும் ரோலர் படகு தொழிலாளர்களை இந்த சட்ட மூலம் பாதிக்கும் எனவும் ஆகையால் இவர்களுக்கு மாற்று ஏற்பாடு வழங்கிவிட்டு சட்ட மூலத்தை நிறைவேற்றுமாறு என்ற திருத்தத்துடன் ஒப்புதல் அளித்திருந்தது.

இந்த திருத்தத்தை உடனடியாக வடக்கு மாகாண சபை மீளப்பெற்று தடை செய்யப்பட மீன்பிடித்தொழில் முறைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றே நாங்கள் கோரிக்கை முன்வைத்துள்ளோம். பின்னரும் நடவடிக்கை எடுக்கப்படா விட்டால், எமது போராட்டம் வேறு விதமாக இருக்கும் எனவும் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.(இ-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 778

Search for people, places and things Nagendram Home

லிங்கா ரூபன்




ராதை




பிரசன்னா




உஷாந்தன் நெய்மார்

அபராதம் Vs வரி

அபராதம்:
அபராதம் என்பது ஒருவன் தவறாக நடந்து கொண்டதற்கான " வரி "

வரி:
வரி என்பது ஒருவன் சரியாக நடந்து கொண்டதற்கான " அபராதம் "

சர்மி சர்மிளா




புகழ்

ரோட்ல நீ போறப்ப உங்கள பார்த்து ஒரு பொண்ணு அண்ணான்னு கூப்பிட்டுச்சினா கவலைப்படாதீங்க. ஜஸ்ட் அவள ஒரு அறை விட்டுட்டு செல்லுங்க என்ன ரோட்ல சுத்திகிட்டு இருக்க ஒழுங்காவீட்டுக்கு போன்னு...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மகிந்தவும் நாமலும் ஒரே சிறையில் தான்



விளக்கமறியலில் வைக்கபட்டுள்ள நாமல் ராஜபக்ஷவுக்கு ஏனைய சந்தேகநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளே வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. புதிய மெகசின் சிறைச்சாலையில் ஈ.பிரிவில் நாமல் ராஜபக்ஷ தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு துணி மட்டும் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இன்றைக்கு 30 வருடங்களுக்கு முன்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்ட போது, இதே சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தாக சிறைச்சாலை" வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் பகல் முதல் தனக்கான உணவை தனது வீட்டிலிருந்து பெற்றுக் கொள்ள அனுமதி வழங்குமாறு நாமல் ராஜபக்ஷ, சிறைச்சாலை அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கான அனுமதி பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-14.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.25 | 147.89 |
| பிரிட்டன் | பவுண்ட் | 190.98 | 197.43 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 158.58 | 164.62 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 144.97 | 150.79 |
| கனடா | டொலர் | 109.64 | 114.01 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 108.62 | 113.48 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.58 | 110.52 |
| இந்தியா | ரூபா | 2.1663 | ------- |
| சீனா | யுவான் | 21.7344 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 384.9212 |
| குவைத் | டினார் | 481.2790 |
| ஓமான் | ரியால் | 377.2237 |
| கட்டார் | ரியால் | 39.8891 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7127 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5464 |

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 150 | 100 | 140 | 120 | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 110 | 100 | 85 | 110 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 700 | 1000 | 600 | 700 | 600 | 800 | 500 |
| தக்காளி | 200 | 200 | 180 | 220 | 20 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| கோவா | 180 | 200 | 100 | 160 | 140 | 160 | 150 |
| கரட் | 200 | 400 | 150 | 240 | 240 | 240 | 200 |
| பூசணி | 140 | 200 | 150 | 160 | 140 | 200 | 100 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 120 | 140 | 90 | 80 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 140 | 160 | 120 | 120 | 120 | 150 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 400 | 160 | 120 | 200 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 160 | 100 | 80 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 150 | 200 | 100 | 140 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 90 | 100 | 80 | 120 | 120 | 100 | 140 |
| லீக்ஸ் | 140 | 200 | 120 | 160 | 160 | 160 | 140 |
| பீற்றூட் | 150 | 200 | 100 | 120 | 120 | 160 | 150 |
| கறிமிளகாய் | 90 | 600 | 300 | 300 | 240 | 320 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 350 | 400 | 400 | 300 | 500 |
| போஞ்சி | 200 | 400 | 150 | 180 | 180 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 | 100 | — | 120 | 120 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 160 | 150 | 150 | 160 | 180 | 200 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-25 | 40 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 150 | 400 | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 200 | 240 | — | 240 | 250 |
| முள்ளங்கி | 60 | 100 | 60 | 80 | 80 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 15 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 100 | 40 | 60 | 60 | 60 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பலாலி இராணுவத்தளம் மீது விடுதலைப்புலிகள் விமானத்தாக்குதல் 227

### ஏவுகணைத்தாக்குதல்

அதைத் தொடர்ந்து 12-08-2006 அன்று விடுதலைப்புலிகளும் இராணுவத்துக்கு எதிராக பதிலடி தாக்குதல் தொடுத்தனர். இதனால் நாட்டில் மீண்டும் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே முழு அளவில் போர் மூண்டது.

அதிகாலையில் திருகோணமலை இராணுவக் கடற்படை தளத்தின் மீது விடுதலைப்புலிகள் ஏவுகணை தாக்குதல் நடத்தினார்கள். இதில் 2 பேர் பலியானார்கள். மாலுமிகள் உட்பட 5 பேர் காயம் அடைந்தனர்.

### யாழ்ப்பாணத்தை கைப்பற்ற

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியைக் கைப்பற்றுவதற்காக விடுதலைப்புலிகளின் பெரிய அளவிலான தாக்குதலை தொடங்கினார்கள். 400 முதல் 500 விடுதலைப்புலிகள் போர் நிறுத்த எல்லை கோட்டைத் தாண்டி தாக்கினார்கள்.

இதுபற்றி விடுதலைப் புலிகளின் ரேடியோவில் நாங்கள் முகமாலையில் உள்ள அனைத்து இராணுவ முகாம்களையும் அழித்து விட்டோம். இப்போது யாழ்ப்பாணம் நகரை நோக்கி முன்னேறி வருகிறோம் என்ற அறிவிப்பை வெளியிட்டனர்.


### விமானத்தாக்குதல்

அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பலாலி இராணுவத் தளத்தின் மீது முதல் முறையாக 12-08-2006 அன்று விமானத் தாக்குதல் நடத்தினார்கள். இதில் 2 ஹெலிகொப்டர்கள் சேதம் அடைந்தன. ஆனால் விடுதலைப்புலிகளின் இராணுவத்தாக்குதலை இராணுவத்தினர் மறுத்தனர். தென்மராட்சி பகுதியில் ஏவுகணைத் தாக்குதலை தொடங்கினார்கள்.

தென்மராட்சி பகுதியில் கிளாலி, முகமாலை, வடமராட்சி கிழக்கு பகுதியில் நாகர் கோவில் மற்றும் மண்டைதீவு பகுதியில் இரு தரப்பினருக்கும் இடையே போர் நடந்தது. தென்மராட்சியில் விடுதலைப்புலிகள் சிங்கள படைகளின் நிலைகளை தவிர்த்து முகமாலை உட்பட பல பகுதிகளை மீட்டனர்.

### 200பேர்பலி

இந்தப் போரில் இரு தரப்பிலும் 200க்கு மேற்பட்டவர்கள் பலியானார்கள். விடுதலைப்புலிகள் தரப்பில் 100 முதல் 150 பேர் வரை பலியானதாகவும் 250பேர் வரை காயம் அடைந்ததாகவும் அப்போதைய இராணுவச் செய்தித் தொடர்பாளர் அதுல ஜெயவர்த்தன தெரிவித்தார்.



இராணுவத் தரப்பில் 3 அதிகாரிகள் உட்பட 27 பேர் பலியானதாகவும் 8 அதிகாரிகள் உட்பட 50 வீரர்கள் காயம் அடைந்ததாகவும் அவர் கூறினார்.

விடுதலைப்புலிகள் தரப்பில் சேத விபரம் பற்றிய தகவல் ஏதும் வெளியிடப் படவில்லை. பேட்டியின் போது இராணுவச் செய்தி தொடர்பாளர் மேலும் கூறியதாவது,

### 10 மணி நேர பீரங்கிச் சண்டை

பலாலி விமான நிலையத்தின் மீது விடுதலைப்புலிகள் நடத்திய பீரங்கி தாக்குதலில் ஒரு ஹெலிகொப்டர் சேதம் அடைந்தது. கட்டுப்பாடு கோபுரம் அருகில் உள்ள சில கருவிகள் சேதம் அடைந்தன. ஆனால் விமானத்தளம் தொடர்ந்து நல்ல நிலையில் செயற்பட்டு வருகிறது. அங்கு 10 மணி நேரம் நடந்த பீரங்கிச் சண்டையை தொடர்ந்து அதிரடி கொமாண்டோ படைப்பிரிவினர் தாக்குதலில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் அருகில் உள்ள ஊர்காவற்துறை தீவை கைப்பற்ற கடற்புலிகள் நடத்திய தாக்குதல் கடற்படையினரால் தடுக்கப்பட்டது. திருகோணமலை கடற்படைத் தளம் மற்றும் விமானப் படைத்தளத்திலும் ஒரே நேரத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதல் தொடுத்தனர். 45 மணி நிமிட நேரம் மட்டுமே தாக்குதல் நீடித்தது யாழ்ப்பாணத்துக்கு தெற்கே பூநகரியில் விடுதலைப்புலிகளின் பீரங்கித் தளம் விமான குண்டு வீச்சில் அழிக்கப்பட்டது.

இவ்வாறு அப்போதைய இராணுவ செய்தி தொடர்பாளர் அதுல ஜெயவர்த்தன கூறினார். நாட்டில் தமிழர் பகுதியில் விமானப் படை நடத்திய தாக்குதலில் 61 மாணவிகள் பலியானார்கள்.

யாழ்ப்பாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களைக் கைப்பற்ற விடுதலைப்புலிகள் உக்கிரமான தாக்குதலில் ஈடுபட்டனர். முதன்முறையாக பலாலி இராணுவத் தளத்தில் விமானத்தாக்குதலையும் நடத்தினார்கள். அரசின் சமரசப் பேச்சுவார்த்தை அழைப்பையும் விடுதலைப்புலிகள் நிராகரித்து விட்டனர்.

### சிறுவர் இல்லத்தில் குண்டு வீச்சு

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அநாதைச் சிறுவர்கள் இல்லத்தில் சிங்கள இராணுவ விமானங்கள் சரமாரியாக குண்டு வீசித் தாக்குதல் நடத்தின. புதுக்குடியிருப்பு செஞ்சோலைப் பகுதியில் உள்ள அந்த சிறுவர்கள் காப்பகத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து ஏராளமான மாணவிகள் முதல் உதவிச் சிகிச்சைக்கான பயிற்சியில் ஈடுபட்டனர்.

இராணுவத்துக்கு எதிரான போரில் தங்கள் பெற்றோரை இழந்த சிறுமிகளுக்காக இந்த அநாதை இல்லம் 15 ஆண்டுகளாக நடத்தப்பட்டு வந்தது.

### 61 மாணவிகள் பலி

இராணுவத்தின் ஜெட் விமானங்கள் 14-08-2006 அன்று காலை 7 மணி அளவில் திடீர் என அந்தக் காப்பகம் மீது பல தடவை சரமாரியாக குண்டுகள் வீசித் தாக்குதல் நடத்தியது. இதில் அங்கு பயிற்சி பெற்ற 61 மாணவிகள் பலியானார்கள். 150 இற்கு மேற்பட்ட மாணவிகள் படுகாயம் அடைந்தனர். அவர்கள் முல்லைத்தீவு, தர்மபுரம், புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் இணையத் தளத்தில் இந்த தகவல் வெளியிடப்பட்டது.

விடுதலைப்புலிகளின் வேண்டுகோளை ஏற்று ஐ.நா சபையின் யுனிசெப் அமைப்பினரும் போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினரும் தாக்குதல் நடந்த சிறுவர் இல்லத்தைப் பார்த்து சென்றதாகவும் அந்த இணையத்தளத்தில் கூறப்பட்டிருந்தது.

### அரசு மறுப்பு

ஆனால் விடுதலைப்புலிகளின் இந்தக் குற்றச்சாட்டை அரசாங்கம் மறுத்தது. ஆதரவற்ற மாணவிகள் இல்லத்தின் மீது எங்களது விமானங்கள் குண்டுகள் வீசி தாக்கவில்லை. வன்னியில் உள்ள விடுதலை புலிகளின் முகாம்களின் மீதுதான் விமானங்கள் குண்டு வீசின என்று அரசு அறிவித்தது.

### விடுதலைப்புலிகள் முகாம் அல்ல


அதேபோல் முல்லைத்தீவு குண்டு வீச்சில் பலியானவர்கள் 61 மாணவிகள் அல்ல என்றும் சிங்கள இராணுவம் மறுத்தது. சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட நோர்வே போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினர் 17 முதல் 20 வயதுக்குட்பட்டவர்களின் உடல்களைத் தாங்கள் பார்த்ததாக தெரிவித்தனர். அதே நேரத்தில் குண்டு வீசப்பட்ட இடம் இராணுவம் கூறுவது போல் போராளிகளின் முகாம் அல்ல என்பதையும் அவர்கள் உறுதி செய்தனர்.

(தொடரும்)

# மத்திய வங்கி ஆளுநர் நியமனத்தை முதன்முதலில் அரசியலாக்கியவர் மகிந்த

நிதி திருத்தச் சட்டத்தின் மூலம் (1949 ஆம் இலக்கம்) இலங்கை மத்திய வங்கி ஸ்தாபிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கி இலங்கைப் பொருளாதாரத்தை வழி நடத்தும் சுயமான அதிகாரம் கொண்ட முக்கிய அரச நிறுவனமாகக் கருதப்படுகின்றது. நாட்டின் அரச மற்றும் தனியார் பிரிவுகளின் வங்கி மற்றும் நிதி நிறுவனங்கள் அனைத்தையும் வழி நடத்தும் பூரண அதிகாரமுள்ள ஒரே நிறுவனமாக இலங்கை மத்திய வங்கியைக் குறிப்பிடலாம்.

**அஜித் கப்ரால் காலத்தில் மத்திய வங்கி நாட்டுக்கு ஏற்படுத்திய நட்டத்தை எவரும் பேசியதில்லை. அன்று ஊழியர் சேமலாப நிதியை பங்குச் சந்தையில் இட்டதால் அடைந்த நட்டம் 700 கோடி ரூபா . ஹெஜின் கொடுக்கல் வாங்கலால் அடைந்த நட்டம் 70000 கோடி ரூபா**







அத்தோடு அரசுக்காக கடன் பெற்றுக் கொள்ளல் மற்றும் கடன் முகாமைத்துவம் செய்யும் பொறுப்பும் இலங்கை மத்திய வங்கிக்கு உரியதாகும். நாட்டின் பொருளாதாரத்தை வழிநடத்தும் இயந்திரமாகவே மத்திய வங்கி நோக்கப்படுகின்றது. ஆகவே மத்திய வங்கியின் ஆளுநர் பதவி மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

இப்பதவியை வகித்து தனது பதவிக்காலத்தில் பிரச்சினையுடன் சென்ற மனிதர் அர்ஜுன் மகேந்திரன் மட்டுமல்ல முதலாவது மத்திய வங்கி ஆளுநர் ஜோன் எக்ஸ்டர் மற்றும் பேராசிரியர் என்.யூ. ஜயவர்தன ஆகியோரின் நிர்வாகத்தின் கீழும் பல பிரச்சினைகள் ஏற்பட்டன.

இலங்கையின் முதலாவது பிரதமரான டி.எஸ் .சேனநாயக்கவின் மறைவுக்குப் பின்னர் நடைபெற்ற தேர்தலில் டட்லி சேனநாயக்கவின் வெற்றிக்கு அப்போதிருந்த வங்கி ஆளுநர் ஜோன் எக்ஸ்டர் கேயின் ஆலோசனைப் படி நடத்தப்பட்ட பொதுத் தேர்தலே காரணமெனக் கூறப்படுகின்றது. அதேபோல் 1953 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்க பிரதமர் பதவியில் இருந்து விலகக் காரணமாக விருந்த பொருளாதாரக்காரணங்களுக்கு மத்திய வங்கி ஆளுநரே பொறுப்பு எனக் குற்றஞ்சாட்டியவர்களும் உள்ளனர்.

அதனால் அவர் பதவியை விட்டு விலகவும் நேர்ந்தது. முன்னாள் ஆளுநராகவிருந்த என்.யூ.ஜயவர்தன மீது வேறுவிதமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. அவர் இராஜினாமா செய்து விசாரணையின் பின்னர் குற்றமற்றவர் எனக் கூறப்பட்டார். இதிலிருந்து விளங்குவது என்னவென்றால், மத்திய வங்கி ஆளுநர் பதவி அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் உணர்வுபூர்வமான ஒன்றாகும்.

2005 ஆம் ஆண்டு வரை இப்பதவிக்கு நேரடியாக அரசியலில் தொடர்புடையவர்கள் நியமிக்கப்படவில்லை. கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி உள்ளூராட்சி உறுப்பினராக பதவி வகித்த அரசியல்வாதியொருவர் மத்திய வங்கி ஆளுநராக பதவி வகித்தது மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் தான் அது முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் நிவாட் கப்ரா லின் நியமனமே ஆகும்.

2015 ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நிவாட் கப்ரால் விலகிய பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு அர்ஜுன் மகேந்திரன் நியமிக்கப்பட்டார். 6 வருட கால கப்ராலின் பதவிக் காலத்தில் எஞ்சியிருந்த ஒன்றரை வருட காலத்திற்கே அர்ஜுன் மகேந்திரன் நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் அவர் தொடர்ந்து நியமிக்கப்படாவிட்டால் அவரின் பதவிக்காலம் தானாகவே முடிந்து விடும்.

அர்ஜுன் மகேந்திரன் தத்துவம், அரசியல் மற்றும் பொருளாதாரம் போன்ற துறைகளில் இங்கிலாந்து ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்.

பதினொரு வருடங்கள் மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் குழு அதிகாரியாகக் கடமையாற்றியவர். பங்குச் சந்தை தொடர்பான தரகு நிறு வனமொன்றையும் பின்னர் நடத்திச் சென்றார்.

2001 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க அரசில் இலங்கை முதலீட்டுச் சபையின் தலைவராக அர்ஜுன் மகேந்திரன் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். வெளிநாட்டு வங்கிகள் இரண்டின் பொருளாதார ஆலோசகராகவும் கடமையாற்றியுள்ளார்.


அதன்படி பார்த்தால் கடந்த அரசாங்கம் நியமித்த ஆளுநரை விட விடயங்கள் தொடர்பாகவும் மத்திய வங்கி மற்றும் தனியார் பிரிவுகளில் கடமை ஆற்றும் அனுபவம் மிக்கவர் அர்ஜூன் மகேந்திரன். கடந்த காலங்களில் மகேந்திரன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பாரதூரமானவை. அந்தக் குற்றச்சாட்டுக்களை விட நாடுபூராகவும் அதற்குச் செய்யப்பட்ட பிரசாரம் பல மிக்கதாயிருந்தது. அதற்குக் காரணம் மக்களுக்குக் காரணங்களைத் தெளிவுபடுத்தும் பிரசார நடவடிக்கை அரசிடம் இல்லாமையாகும். அர்ஜூன் மகேந்திரன் மீதுள்ள குற்றச்சாட்டு என்னவென்றால் மத்திய வங்கியின் முறிகளை தமது மைத்துனரின் நிறுவனமொன்று அதிக இலாபம் ஈட்டும் வகையில் விற்பனை செய்ததாகும்.

இக்குற்றச்சாட்டு பல தரப்பிடமிருந்து எழுந்தாலும் ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி கூறிய குற்றச்சாட்டு மிகவும் நகைப்பிற்கிடமானது.

அர்ஜூன் மகேந்திரன் காலத்தில் மட்டுமல்ல மகிந்த அரசாங்கக் காலத்தில் அஜித் கப்ரால் யுகத்திலும் அரசுக்கு நிதி தேவைப்படும் பொழுது மத்திய வங்கி முறிகளை வெளியிட்டது. அர்ஜூன் மகேந்திரன் காலத்தில்தான் டெண்டர் மூலம் வெளியிடப்பட்டது. அன்று கப்ரால் (குறிப்பிட்ட) சிலருக்கு அடிப்படையாகக் கொண்டு முறிகள் ஏலம் நடைபெற்றது. 2014 ஆம் ஆண்டு சாதாரண வட்டி விகிதத்தில் (11.75) கேள்வி மனு முன்வைத்தது கொள்வனவாளர்கள் இருவரே. (தொடரும்)

# செய்தித்துளிகள்

## தேசிய ரீதியில் முதலிடம்



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் க.பொ.த. உயர் தர கலைப்பிரிவில் கல்வி கற்று வரும் பருத்தித் துறை புற்றளையைச் சேர்ந்த கலாமோகன் பிரகான் எனும் மாண வன் கடந்த 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பத்தர முல்லயில் நடைபெற்ற தேசியமட்ட பேச்சுப் போட்டியில் முதலிடத்தைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார். (செ)

## ஊடகவியலாளர் மீது தாக்குதல்

காலி-நெலுவ பிரதேசத்தின் குறுக்காக அமைக்கப்பட்டு வரும் நீர்மின் உற்பத்தி நிலையம் தொடர்பில், ஏற்படும் விளைவுகள் தொடர்பில் செய்திகளை வெளியிட்டு வந்த சிங்கள ஊடகமொன்றின் ஊடகவியலாளர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

தயா சேனசிங்க என்ற குறித்த ஊடகவியலாளர் மீதே இனந்தெரியாதோர் நேற்று தாக்குதலை நடத்தியுள்ளனர். தாக்குதலுக்கு இலக்கானவர் தற்போது காலி-நெலுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

## 2016 இல் 6 மாதங்களில் 37 யானைகள் உயிரிழப்பு

வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் வட மாகாணம் மற்றும் அநுராதபுர வனவிலங்கு வலயத்தில் மாத்திரம் 37 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

இவற்றில் 15 காட்டு யானைகள் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகியுள்ளதாக வலயத்தின் பிராந்திய கால்நடை மருத்துவர் சன்தன ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக மின்சார தாக்குதல் விசம் மற்றும் பொறியில் சிக்குதல் போன்ற காரணங்களினால் உயிரிழப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

## குடும்ப தகராறு;இரத்தினபுரியில் தாயும் மகளும் படுகொலை!

இரத்தினபுரி மாவட்டத்தில் தாயும் மகளும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.இரத்தினபுரி மாவட்டத்தின் வேவல் வத்த குருபேவிலா என்னும் இடத்தில் இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

37 வயதான தாயும் 13 வயதான மகளும் கொலை செய்யப்பட்டுள்ளனர். லட்சுமணன் சசிகலா மற்றும் சுவேந்திரன் சஞ்சீவனி ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-5)

## காட்டுக்கு தீ வைத்தவர் விளக்கமறியலில் வைப்பு

பசறை- கனவரெல்ல பகுதியில் தோட்டத்திலுள்ள காடொன்றுக்கு தீவைத்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட தோட்ட தொழிலாளர் ஒருவரை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு. பதுளை நீதவான் நீதிமன்ற நீதவான் ராத் ரவுன்னிகா மாரசிங்ஹ நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

குறித்த நபர் தனது தோட்டத்துக்கு அருகிலுள்ள காடொன்றுக்கு தீவைத்த குற்றச்சாட்டின் பேரில் பசறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-10)

## பண்பாட்டு மலர்ச்சிக்கூடம் தொடக்க விழா நாளை

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதியில் இல.7 எனும் முகவரியில் அமைக்கப்பட்டுள்ள பண்பாட்டு மலர்ச்சிக் கூடத்தின் தொடக்க விழா நாளை முற்பகல் 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி.க. சிதம்பர நாதன் தலைமையில் நடைபெறும்.

தமிழ்ச் சமூகத்தில் நிலவும் பண்பாட்டுச் சீரழிவை தடுத்து நிறுத்தி பண்பாட்டு மலர்ச்சியை ஏற்படுத்தவும், ஆளுமை மிக்க தமிழ் சமூகத்தை தோற்றுவிக்கவும் அமைக்கப்பட்டுள்ளது. (இ-5)




# கல்லாத குதிரை

மன்னன் மகிபாலனுக்கு பல சிற்றரசர்கள் திறை கொடுக்க வேண்டும். அவர்களிடம் நல்ல நட்புறவு கொண்டதால் திறையை வாங்காமல் நண்பனைப் போல் பழகினான். அச்சிற்றரசர்கள் நமக்கு உற்ற துணையெனக் கருதி முழுமையாக நம்பியிருந்தான்.

பல சிற்றரசர்களின் துணை இருக்கும்போது, நாம் வெற்றி கொள்வதில் ஐயமில்லை என்னும் எண்ணத்தால், அம் மன்னன் வேற்றரசன் ஒருவனோடு பகை கொண்டு போர் தொடங்கினான்.

அவ்வேற்றரசன் மிகவும் வலிமை மிக்கவனாக இருந்தான். அவனுடைய படை எதிர்க்கும் ஆற்றல் உடையதாக இருந்தது.

இரு பக்கத்துப் படைகளும் கைகலந்து கடும்போர் தொடங்கின. வேற்றரசன் படை, ஆற்றல் மிகக் கொண்டு தாக்கியது. சிற்றரசர்களின் படை அஞ்சி நடுங்கியது. சிற்றரசர்கள் பலரும் பேந்தப் பேந்த விழித்தனர் தம் உயிரை எப்படியேனும் காப்பாற்றிக் கொண்டால் போதுமென்று முடிவு செய்தனர் உடனே தத்தம் படையோடு மூலைக்கொருவராக அஞ்சியோடி விட்டனர்.

சிற்றரசர்கள் அனைவரும் ஓடி விடவே, அவர்களை முழுமையாக நம்பியிருந்த மன்னன் தனித்தவனானான். அவனுடைய படையும் சிறியதுதான். ஆகையால் அம் மன்னனால் நீண்ட நேரம் எதிர்த்து நிற்க முடியவில்லை. வேற்றரசன் மிக விரைவில் அம்மன்னனைச் சிறைபிடித்து விட்டான்.

பகைவர்கள் கையில் சிக்கிய மன்னன் மிகவும் வருந்தினான். "ஐயோ! சமயத்தில் தக்கவாறு உதவி செய்யாதவர்களை நம்பிக் கெட்டோமே! நாம் மட்டும் தனித்திருந்தாலும், இந்தப் போர் ஏற்படாமல் முதலிலேயே தடுத்திருக்கலாமே!' என்று பலவாறு வருந்தினான்.



அவ்வாறு வருந்திய மன்னன், வேற்றரசனோடு ஓர் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டு விடுதலையடைந்தான்.

மன்னன் விடுதலையடைந்த பின், அச்சிற்றரசர்கள் மன்னனைக் காண்பதற்காக வந்தனர்.

மன்னன் அச்சிற்றரசர்களைக் கண்டதும், "உங்களை நம்பியதால் நான் துன்பத்திற்கும், இழிவுக்கும் ஆளானேன். போர்க்களத்தில் உதவி செய்யாமல் தலைவனை விட்டு விட்டு ஓடிப்போகும், கல்வியற்ற குதிரையைப் போன்றவர்கள் நீங்கள். உங்கள் உறவு எனக்கு வேண்டாம். வழக்கம் போல் நீங்கள் திறைப்பொருளை முறைப்படி செலுத்திக் கொண்டு தொலைவிலேயே இருங்கள்" என்று இடித்துரைத்தான்.

களத்தில் கைவிட்டோடிய அச்சிற்றரசர்கள் நாணம் அடைந்து திரும்பிச் சென்றனர்.

(முற்றும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1223 - எட்டாம் லூயி பிரான்சின் மன்னனாக முடி சூடினான்.
- 1789 பிரெஞ்சுப் புரட்சி: பாரிஸ் மக்கள் பாஸ்டில் சிறையைத் தகர்த்து சிறைக் கைதிகளை விடுவித்து இராணுவத் தளபாடங்களைக் கைப்பற்றினர்.
- 1865 - எட்வர்ட் வைம்ப்பர் தனது உதவியாட்களுடன் ஆல்ப்ஸ் மலைத்தொடரின் மாட்டர்ஹோர்ன் மலையின் உச்சியை முதற்தடவையாக எட்டினார். இவர்கள் திரும்பி வருகையில் இவருடன் வந்த 4 பேர் உயிரிழந்தனர்.
- 1889 - பாரிசில் கூடிய சோசலிசத் தொழிலாளர்களின் "சர்வதேச தொழிலாளர் பாராளுமன்ற" நிகழ்வுகளில் பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்பட 18 நாடுகளில் இருந்து 400 பிரதிநிதிகள் பங்கேற்றனர். கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி வேலை-நேரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வது என முடிவாகியது.
- 1933 - ஜேர்மனியில் நாசிக் கட்சி தவிர்த்து அனைத்து அரசியற் கட்சிகளும் தடை செய்யப பட்டன.
- 1948 - இத்தாலியின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பல்மீரோ டொக்ளியாட்டி பாராளுமன்றத்துக்கு முன்னர் சுடப்பட்டார்.
- 1958 - ஈராக்கியப் புரட்சி: ஈராக்கில் மன்னராட்சி முடிவுக்கு வந்தது. அப்துல் கரீம் காசிம் நாட்டின் புதிய தலவரானார்.
- 1965 - மரைனர் 4 செவ்வாய்க் கோளுக்குக் கிடடவாகச் சென்று முதற்தடவையாக வேறொரு கோளின் மிக அண்மையான படங்களைப் பூமிக்கு அனுப்பியது.
- 1966 - குவாத்தமாலா நகரில் மனநோய் வைத்தியசாலையில் இடம்பெற்ற தீவிபத்தில் 225 பேர் கொல்லப்பட்டனர்.
- 1967 - நாசாவின் சேர்வெயர் 4 ஆளில்லா விண்கலம் ஏவப்பட்டது.
- 1976 - கனடாவில் மரணதண்டனை முறை ஒழிக்கப்பட்டது..
- 1989 - பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவை பிரான்ஸ் கொண்டாடியது.
- 1995 - 3 பெயரிடப்பட்டது.
- 1995 - இலங்கை இராணுவத்தினரின் முன்னேறிப்பாய்தல் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் புக்காரா ரக விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1997 - சே குவேராவினதும் தோழர்களதும் உடல் எச்சங்கள் கியூபா வந்தடைந்தன.
- 2002 - பாஸ்டில் நாள் நிகழ்வுகளில் கலந்து கொண்ட பிரெஞ்சு அதிபர் ஜாக் சிராக் கொலை முயற்சி ஒன்றில் இருந்து உயிர் தப்பினார்.
- 2007 - ஐரோப்பாவில் மரபுவழி இராணுவப் படைகள் குறித்த உடன்பாட்டில் இருந்து ரஷ்யா விலகியது.

### பிறப்புகள்

- 1929 - வா. செ. குழந்தைசாமி, இந்தியப் பொறியியல் அறிஞர்.
- 1943 - ரோகண விஜயவீர, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், புரட்சியாளர் (இ. 1989)

### இறப்புகள்

- 1827 - அகஸ்டீன்-ஜீன் ஃபிரெனெல், பிரெஞ்சு இயற்பியலாளர் . (பி. 1788)
- 1998 - டிக் மக்டொனால்ட், மக்டொனால்ட் நிறுவன தாபகர. (பி. 1909)
- 2008 - சுசுமு ஓனோ, ஜப்பானியத் தமிழறிஞர். (பி. 1919)

### சிறப்பு நாள்

- பிரான்ஸ் - பாஸ்டில் நாள். (1789)

# ரோகண விஜயவீர



இலங்கையின் தென் மாகாணத்தில் கோட்டேகொட என்னும் மீன்பிடிக் கிராமத்தில் பிரெஞ்சுப் புரட்சி நினைவு நாள் ஒன்றில் (ஜூலை 14) பிறந்தவர் ரோகண. இவரது தந்தை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கத்தவராக இருந்தவர். கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்கவுடன் நெருங்கிய தோழராக இருந்தவர்.பட்டபெந்தி தொன் நந்தசிறி விஜேவீர ஒரு மார்க்சியப் புரட்சியாளர். ஜே.வி.பி என அழைக்கப்படும் மக்கள் விடுதலை முன்னணியை அமைத்து அதன் தலைவராக இருந்தவர். பொலிவியாவின் புரட்சியாளரான சேகுவேராவின் வழிமுறைகளைத் தீவிரமாகப் பின்பற்றியவர். இவரது கம்யூனிசக் கொள்கைகள் இலங்கையின் வறிய மக்களிடையேயும் இளைஞர்களிடையேயும் பெரும் வரவேற்பைப் பெற்றன. இவர் தலைமையில் மக்கள் விடுதலை முன்னணி இலங்கையில் இருமுறை (1971 புரட்சி, 1987-1989 புரட்சி) புரட்சிகளில் இறங்கி தோல்வி அடைந்தது. இவர் உலப்பனை என்ற இடத்தில் வைத்து இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அடுத்த நாள் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கலியுகத்தின் கொடுமைதனை
காணச் சகிக்க முடியவில்லை
–நீர்வை மணி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலங்கை அரசுக்கு ஆதரவான தமிழ் அரசியல் தலைமையே இங்குண்டு

இந்த உலகில் மிகக் கொடியது அன்பிலார் உறவு என்பது ஔவையாரின் முடிவு. அன்பிலாரிடம் கெடுதிக் குரியவை அனைத்தும் இருக்கும். இதனாலேயே அன்பிலார் உறவு ஆபத்தானது என்றாயிற்று.

இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை இந்திரா காந்தி தன் அலுவலகத்தில் இருந்து வெளியே வருகின்றார். அவரைப் பின்தொடர்ந்து அவரின் மெய்ப்பாதுகாவலர்கள்.

எந்தத் தீங்கும் அன்னை இந்திரா காந்தியை அணுகிவிடக் கூடாது என்பதற்காகவே மெய்ப்பாது காவலர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அந்தோ பரிதாபம். அன்னை இந்திரா காந்தியை நோக்கி கொடிய மெய்ப்பாதுகாவலன் ஒருவன் துப்பாக்கியால் சுடுகின்றான்.

துப்பாக்கி ரவைகள் அன்னையின் இதயத்தைத் துளைக்கின்றன. அந்தப் பேரவலத்திலும் தன்னைச் சுடுபவனை நோக்கி நீ என்ன செய்கிறாய்? என்று அன்னை இந்திரா காந்தி கேட்கிறார்.

அந்தக் கேள்விக்குள் நிறைந்த பொருள் உண்டு. என்னைப் பாதுகாக்க வேண்டிய நீ! செய்வது சரியா? என்பது ஒரு பொருள்.

என்ன செய்வது! எத்தனை கேள்விகளைக் கேட்டாலும் அவை எத்தனை பொருள் தந்தாலும் கூட இருந்தவன் குழி பறித்துவிட்டான். அன்னை இந்திரா காந்தியின் உயிர் ஒரு கணப்பொழுதில் பிரிந்து போகின்றது.

பாரத பூமி அழுகண்ணீரில் மிதக்கிறது. இப்போது இது ஒரு சம்பவமாகிப் போயுள்ளது.

. ஆனால் இந்தச் சம்பவம் இந்த உலகத்திற்கு ஒரு செய்தியை சொல்கிறது.

அதாவது அன்பிலாதவன், நேர்மையற்றவன், போக்கிரித்தனமானவன் அருகில் இருப்பான் ஆயின் ஆபத்தானது எப்போதும் மடியில் இருக்கும் என்பது தான்.

இது இந்திரா காந்தியின் கொலையுடன் நின்றுவிடப் போவதில்லை. இந்த உலகம் இருக்கும் வரை அநீதியானவர்களின் இருப்பும் இருக்கவே செய்கிறது.

இதற்கு மேலாக விசுவாசமற்றவர்கள், உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசுபவர்கள் இனப்பற்றில்லாத போதிலும் இனப்பற்றுள்ளவர்கள் போல நடிப்பவர்கள் ஓர் இன்த்தின் அரசியல் தலைமையில் இருப்பார்களாயின் அந்த இனம் தீராத் துன்பத்தை என்றும் அனுபவிக்கும்.

சேர்ந்திருந்து உன்னுடைய ஆள் நான் என்று கூறிக் கொண்டு எதிரியின் திட்டத்தை அமுலாக்குவதே தன் கடமை என்று செயற்படுவோரை யார்தான் என்ன செய்ய முடியும்?

உண்மையில் இத்தகையதொரு அரசியல் தலைமை எந்த இனத்திற்கு கிடைத்தாலும் அது இந்த இனம்செய்த பாவம் என்று சொல்வதைத் தவிர வேறு எந்த வழியும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

எது எப்படியாயினும் மக்கள் என்று விழிப்புணர்வு அடைகிறார்களோ அன்றுதான் பாவப்பட்ட இனம் விடுதலைபெறும். அந்த விடுதலை கிடைப்பதற்கு மேய்ப்பன் அவதரிக்க வேண்டும்.

இருந்தும் அந்த அவதரிப்பு நம் மண்ணில் இப்போதைக்கு சாத்தியமில்லை என்பதால் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய ஒரேவழி அரசியல் விழிப்புணர்வு அமைவதுதான்.

அரசியல் விழிப்புணர்வு ஏற்படும்போது எல்லாமும் சரியாகிவிடும் என்பதோடு பல உண்மைகள் வெளிப்படவும் வாய்ப்பாகும் என்பதால் தமிழ் மக்களின் அரசியல் விழிப்புணர்வு மீள் எழுச்சிக்கு மிகவும் கட்டாயமானதாகும்.

### தீர்ப்பை மேன்முறையீடு செய்துள்ள

# கொலைக்குற்ற வழக்கில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிக்கு பிணை வழங்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கொலைக்குற்றம் ஒன்றிற் காகப் பத்து வருடம் கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி ஒருவர் அந்தத் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்துள்ள நிலையில், அவருக்கு பிணை வழங்க யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் மறுத்துள்ளது. அந்தப் பிணை மனுவைத் தள்ளுபடி செய்து மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் கடந்த செவ்வாயன்று தீர்ப்பளித்துள்ளார்.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில், கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி இரத்தினம் மணிவணணன் என்பவரை கொலை செய்த குற்றச்சாட்டில் கிருஸ்ணபிள்ளை பிரேமன் என்பவருக்கு 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனையை யாழ் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக அத்தீர்ப்புக்கு எதிராக குற்றவாளி மேன் முறையீடு செய்துள்ளார்.

இந்த மேன்முறையீட்டு வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளியாகிய கிருஸ்ணபிள்ளை பிரேமனை பிணையில் செல்ல அனுதிக்குமாறு பிணை மனுவொன்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவைப் பரிசீலனை செய்த நீதிபதி இளஞ்செழியன், கொலைக் குற்ற வழக்கில் பத்து வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி ஒருவருக்கு மேன் முறையீட்டு வழக்கு நிலுவையில் உள்ள போது பிணை வழங்க முடியாது என மறுத்துள்ளார்.

அத்துடன், அந்தப் பிணை மனுவையும் நீதிபதி தள்ளுபடி செய்துள்ளார்.

இது தொடர்பில் நீதிபதி இளஞ்செழியன் வழங்கியுள்ள தீர்ப்பில் தெரிவிக்கப் பட் டுள்ளதாவது:

இந்த பிணை மனுவில் சம்பந்தப்பட்ட கிருஸ்ணபிள்ளை பிரேமன், இரத்தினம மணிவண்ணன் என்பவரைக் கொலை செய்த குற்றத்திற்காக கடூழிய சிறைத் தண்டனை விதித்து தண்டிக்கப்பட்ட குற்றவாளியாவார்.

பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்ற குற்றவாளியாகிய அவர், தன்னை பிணையில் விடுமாறு கோருவதற்கு அவருக்கு உரிமை இல்லை.

விதிவிலக்கான சந்தர்ப்பங்களை முன்வைத்தால் மாத்திரமே பிணை வழங்க முடியும்.

இந்த பிணை மனுவில் எதுவிதமான விதிவிலக்கான சந்தர்ப்பங்களும் முன் வைக்கப்படவில்லை.

இலங்கை உச்ச நீதி மன்றத்தின் முற் தீர்ப்புக்களில் ஒன்றாகிய தாமோதரம் பிள்ளை என்பவருடைய வழக்கில் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பில், குற்றவாளியாகக் காணப்பட்டு 7 ஆண்டுகளுக்கு மேல் ஒருவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப் பட்டிருந்தால், மேன் முறையட்டின்போது அவருக்கு பிணை வழங்குவதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிருஸ்ணபிள்ளை பிரேமனுடைய வழக்கில் கொலைக்குற்றத்திற்காக பத்து ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்க பட்டுள்ளது. இதன் மூலம் அவர் ஒரு குற்றவாளி என மேல்நீதிமன்றம் ஏற்கெனவே பிரகடனப்படுத்தியுள்ளது.

எனவே, சாதாரண வழக்கைப் போன்று, குற்றம் நிரூபிக்கப்படும் வரை, சம்பந்தப்பட்ட சந்தேக நபர் நிரபராதி என கூறி, இந்த வழக்கில் வழக்காட முடியாது.

எனவே, கொழும்பு மேன முறையீட்டு நீதிமன் றத்தில் கிருஸ்ணபிள்ளை பிரேமன் தொடர்பாக தாக்கல் செய் யப்பட்டுள்ள மேன் முறை யீட்டு மனு மீதான விசாரணை நடைபெற்று ஒரு தீர்ப்பளிக்கப்படும் வரையில் அவருக்குப் பிணை வழங்க முடியாது.

அத்துடன் அவருடைய பிணை மனுவை இந்த நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கின்றது என நீதிபதி இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (செ-11)

## சத்திய தரிசனம்



### கண் இரண்டும் வாய் ஒன்றும் ஏன்?

❖ பலாப்பழம் இருக்க, பலாக்காயை ருசிப்போமா? இனிமையான சொற்கள் இருக்க கடுமையான சொற்களைப் பிரயோகிக்கலாமா?

அடுத்தவரை மகிழ்விப்பது அறம். அதற்காக நாம் பணம் தேடி ஓடவேண்டாம். நல்ல சொற்களே போதுமானது.

கண்டவற்றுள், கேட்டவற்றுள் பாதியையே பகர வேண்டும் என்பதற்காகவே கண் இரண்டும், வாய் ஒன்றுமாக வார்த்தளித்தான்.

❖ தன்னைக் கல்லால் அடித்தவனுக்கும் இனிய கனியைத் தருகிறது மரம். நம்மைச் சொல்லால் அடிப்பவருக்கு கனிவான சொற்களைத் தரவேண்டும்.

❖ உள்ளத்தில் அன்பு இருந்தால் வார்த்தைகளில் இனிமை, பாலில் ஊறிய பழம்போல இருக்கும்.

❖ வாசிக்கத் தெரிந்தவன் வாசித்தால் புல்லாங்குழலில் கீதம் ஒலிக்கும். தெரியாதவன் ஊதினால் காற்றுதான் வரும். அறிஞர்களின் பேச்சில்தான் பொருள் இருக்கும்.

❖ எந்த ஒரு வார்த்தை இறை சிந்தனையில் ஒருவனை ஈடுபடுத்துமோ அதுதான் அவனுக்கு மந்திரம். மற்றவனுக்கு அந்த வார்த்தை பொருளற்றதாக இருந்தாலும் சரி, மனதை ஒருமுகப்படுத்துவதே மந்திரம்.

❖ ஆன்மிகத்தின் ஆரம்பப் பாடமே பேச்சைக் கட்டுப்படுத்துவது என்பதுதான். பேச்சு மனிதனுக்கு இறைவன் அளித்த படைக்கலன்கள். மற்ற மிருகங்களுக்குத் தன்னைக் காத்துக் கொள்ள விரைந்தோட வசதியான பாதங்களும், கூரான நகங்களும் மற்றும் கொம்புகளும், தந்தங்களும், அலகுகளும் அளித்த கடவுள் மனிதனுக்கு அளித்திருப்பது இனிமையான பேச்சு ஒன்றுதான். இதன்மூலம் எதிரியைப் பலமிழக்கச் செய்து எதிர்ப்புகளைக் களைந்து வெறுப்பின் பல்வகைத் தாக்குதல்களிலிருந்து தப்பி அவற்றை முறியடித்து மனிதனால் செயறபட முடியும்.

## வற் வரி குறித்து 20 திகதி முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதியும் பிரதமரும் கலந்துரையாடல்களை நடத்தி எதிர்வரும் 20ஆம் திகதி வற்வரி தொடர்பில் இறுதி முடிவினை எடுப்பார்கள். இதன்போது அவ் வரியில் திருத்தங்களும் மேற்கொள்ளப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்களுக்கு வற்வரி அறவிடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதற்காக விசேட பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றது. இங்கு உரையாற்றிய நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷமன் யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (செ-11)

## மோ.சைக்கிள்-கார் விபத்து ஒரே குடும்பத்தில் மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்-கார் வாகன விபத்தில் சிக்கிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்ப்பாணம நீதிமன்றம் அருகே இடம் பெற்றுள்ளது.

இதில் இல. 183, சிவன் கோவிலடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகநாதன் சிவதர்சினி (வயது 38), அவரின் பிள்ளைகளான யோகநாதன் எக்சிகா (வயது 12), யோகநாதன் அனோஜா (வயது 11) ஆகியோரே இவ்வாறு படுகாயமடைந்தவர்களாவர்.

பாடசாலை முடிந்து மோட்டார் சைக்கிளில் தனது இரு பிள்ளைகளையும் ஏற்றிக் கொண்டு வீடு நோக்கிச் சென்ற போதே எதிரே வந்த காருடன் மோதி இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றது

படுகாயமடைந்த மூவரும உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர். (செ-5,30)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் ப்ராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ் பிரதேசத்தில இடைக்காட்டிலும வவுனியா பிரதேசத்தில் ஆதிவிநாயகர் கோவில் பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## வாகன விபத்து குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

நடந்து சென்று கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவரை மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 6.45 மணியளவில் யாழ்ப்பாணம் செட்டித்தெரு நல்லூர் சந்தியில் இடம்பெற்றது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த நாகலிங்கம் சர்வானந்தன் (வயது 48) என்ற குடும்பஸ்தரே காயமடைந்தவராவார். (செ-5,60)

# யாழ். பிறிமியர் லீக் வெற்றிக்கிண்ணம்

## யாழ்.சென்றல் முதலாவது வெற்றி



யாழ்.பிறிமியர் வெற்றிக்கிண்ணத்திற்கான யு.ஆர் பவுண்டேசன் 4 ஆவது வருடமாக நடத்தி வரும் 20 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் யாழ். சென்றல் அணி, யூனியன் அணியை 6 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் அணி 19.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 102 ஓட்டங்களைப்பெற்றது.

ஜான்சன்11, தயாளன் 10, ஆகீசன்-12, கிரிதரன்-12 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் யாழ். சென்றல் அணி சார்பாக திருக்குமரன்-02, காலெவ்-02, உல்கக்-03, சலிஸ்ரன்-02, றஜீவ்குமார்-01 இலக்கினை கைப்பற்றினர். 103 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய யாழ். சென்றல் அணி 12.3 ஓவர்களில் 4 இலக்குகளை இழந்து 106 ஓட்டங்களை பெற்றது. றஜீவ்குமார் ஆட்டமிழக்காது 40, கலிஸ்ரன்-22 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் யூனியன் அணி சார்பாக அருண்ராஜ்-02, சுயந்தன், தயாளன் தலா ஒரு இலக்கினை பெற்றனர். இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 7 வருடங்களாக நடத்திவரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்விற்கு யாழ். சென்றல் அணி 4.66புள்ளிகளையும் யூனியன் அணி 1.42 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார் சென்லூசியஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை யங்கென்றிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

➢➢➢➢➢

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7மணிக்கு நடைபெறும் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

➢➢➢➢➢

புத்தூர் வளர்மதி சனசமூக நிலையம் விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறும் போட்டியில் மல்லாகம் நியூவொரியஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கலாநிதி அச்சுவேலி அணியும் இரவு 8மணிக்கு நடைபெறும் போட்டியில் கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நீர்வேலி காமாட்சி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

➢➢➢➢➢

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு யாழின் கில்லாடி யார்? உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் அரையிறுதிப்போட்டி இன்று வியாழக்கிழமை மின்னொளியில் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இறுதிப் போட்டியானது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இரவு 7மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# கோரக்கன்கட்டு விளைபூமி வி.கழகம் நடத்திய காற்பந்தாட்ட சுற்றுப்போட்டி

## உருத்திரபுரம் சம்பியன்





மறைந்த கோரக்கன்கட்டு மக்கள் மற்றும் மறைந்த கழக அங்கத்தவர்களின் ஞாபகார்த்தமாக முரசுமோட்டை கோரக்கன்கட்டு விளைபூமி விளையாட்டுக்கழகம் நடத்திய காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.

கோரக்கன்கட்டு விளைபூமி விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற இறுதிப்போட்டியில், வட்டக்கச்சி இளந்தளிர் விளையாட்டுக்கழகமும் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகமும் மோதின.

இதில், உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வெற்றியீட்டிய அணிக்கும் சிறந்த வீரர்களுக்கான பரிசில்களையும், வெற்றிக் கேடயங்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வழங்கினார். (கு-281)





## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

நெல்லை சலஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் முதல் முறையாக யாழ்.மாவட்ட அணிகளுக்கு இடையிலான மாபெரும் விலகல் அடிப்படையிலான அணிக்கு 6 ஓவர் 8 பேர் கொண்ட மென்பந்தாட்ட தொடரினை வருகின்ற சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் (18,19 ஆம் திகதிகளில்) பருத்தித்துறையின் பிரபல்யமான வீனஸ் மைதானத்தில் நடத்தவுள்ளது.

பதிவு செய்யும் அணிகள் வருகின்ற புதன்கிழமைக்கு முன்னர் (15 ஆம் திகதி) பதிவுகளை மேற்கொள்ளவும்.

வெற்றி பெறும் அணிக்கு பெறுமதியான வெற்றிக்கேடயம் வழங்கப்படும். நடுவரின் தீர்ப்பே இறுதியானது. அனுமதிக்கட்டணம் 1200 ரூபா ஆகும். தொடர்புகளுக்கு 076 643 0250, 077 526 9694. (கு)

## ஜெகன், தவரூபன் அசத்தல்; ஞானமுருகன் அணி வெற்றி

அரியாலை சனசமூக நிலையத்தின் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தி வருகின்ற அரியாலை சரஸ்வதியின் யாழின் கில்லாடி உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் (07.07.2016) நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் அணியுடன் நடைபெற்ற போட்டியில் 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது ஞானமுருகன் அணி. நட்சத்திர வீரர் ஜெகன் இரு கோலினையும் தவரூபன் ஒரு கோலினையும் போட்டு அசத்தினார். (கு)












வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற எல்லேயில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி வெள்ளி பதக்கத்தையும் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி வெண்கல பதக்கத்தையும் பெற்றுக்கொண்டது. அவ் அணியினரை படங்களில் காணலாம்.

### பொருளாதார மத்திய நிலையம்

# ஓமந்தையில் அமைக்கப்படுவதை எதிர்த்து பெரும்பான்மை இன வியாபாரிகள் போராட்டம்

பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைக்கும் ஆலோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்து பெரும்பான்மையினத்தை சேர்ந்த வியாபாரிகள் வவுனியா நகரில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா உள்ளூர் விளைபொருள் விற்பனைச் சந்தைக்கு எதிரில் இருந்து வவுனியா அரச செயலகத்துக்கு பேரணியாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், வவுனியா அரசாங்க அதிபரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக்குளத்திலா அல்லது ஓமந்தையிலா அமைப்பது என்பது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் நிலவிய கருத்து வேற்றுமை வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் பெரும்பான்மையோரின் தெரிவுக்கமைவாக ஓமந்தையில் அமைக்கப்படும் என வட மாகாண முதலமைச்சர் இந்த வாக்கெடுப்பின் முடிவில் அறிவித்திருந்தார்.

இதன் பின்னணியில் இந்த ஆர்ப்பாட்டம் பெரும்பான்மை இன வியாபாரிகளின் ஏற்பாட்டில் ஒருசில சிறுபான்மை வியாபாரிகளையும் இணைத்து நடைபெற்றுள்ளது.

இந்த பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தையில் அமைக்கப்படுமேயானால் வவுனியா, கெப்பிட்டிகொல்லாவ, மதவாச்சி, வெலிஓயா போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மகஜரை ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட வவுனியா அரச அதிபர் எம்.பி.ஆர். புஸ்பகுமார, எந்தவொரு அபிவிருத்தி திட்டம் தொடர்பிலும் பொதுமக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்கப்பட வேண்டும் என்றும், அதன் அடிப்படையிலேயே நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், இந்த பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் ஓர் உடன்பாட்டுக்கு வரும் வரையில் அதனை நடைமுறைப்படுத்த முடியாது என தெரிவித்தார்.

இந்த விடயத்தில் இறுதித் தீர்மானம் எடுப்பதற்குத் தாமதிக்கும் பட்சத்தில் இதற்கென அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட 200 மில்லியன் ரூபாய் நிதி அரச திறைசேரிக்குத் திரும்பிச் செல்லும் ஆபத்து உண்டு என்றும் வவுனியா அரசாங்க அதிபர் கூறினார். (செ-11)

## முழு உலகும்...

உன்னிப்பாக அவதானித்து வருகின்றது என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் ஜனநாயகம், மனிதவுரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரொம் மாலினோவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் ரொம் மாலினோவ்ஸ்கி குறிப்பிடுகையில்,

"நல்லிணக்க மற்றும் மறுசீரமைப்பு செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கம் உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. குறிப்பாக, காணாமற்போனோர் தொடர்பான பணியகம், இலங்கைப் படையினர் வசமிருந்த காணிகளின் ஒரு பகுதி விடுவிக்கப்பட்டமை உள்ளிட்டவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க முனைப்புகளுக்கு ஆதரவு வழங்கும் வகையில் அமெரிக்கா பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான ஆதரவை வழங்கும்.

நல்லிணக்க செயற்பாட்டில் அணிகளாக பிரிந்து செயற்படாது ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அரசியல் ஊடாக இலங்கைக்கு அதிக அனுபவங்கள் கிடைத்துள்ள நிலையில், அதனைக் கொண்டு நாட்டை கட்டியெழுப்பாமல் சமய மற்றும் இனங்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் சிலர் தமது அரசியல் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர்.

இவ்வாறான கொள்கைகளை உடையவர்கள் பிரச்சினைகளை ஏனையோர் மீது சுமத்திவிட்டு, பொறுப்புக்களை புறந்தள்ளிவிட்டுச் செயற்படுகின்றனர். நல்லிணக்கத்தை இலக்காக கொண்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதும், அதற்கேற்ற கொள்கையை உருவாக்குவதும் அவசியம்.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அமெரிக்கா ஆதரவாக இருக்கும்" என்று அவர் தனதுரையில் தெரிவித்துள்ளார். (செ-11)

## ஆற்றில் நீராடச்...

ஐயன்குளம் ஆற்றில் இடம்பெற்றது.

இதில் சேத்துக்கண்டி முரசுமோட்டையைச் சேர்ந்த மகாலிங்கம் சுமன் (வயது 33) என்ற இளம் குடும்பஸ்தரே நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இதுதொடர்பில்தெரியவருவதாவது,

பிரஸ்தாப நபர் தனது நண்பர்களுடன் சேர்ந்து மேற்படி குளத்தில் நீராடச் சென்றுள்ளார்.

நீராடலின்போது அவர் தனித்து நின்றுள்ளார். பின்னர் நண்பர்கள் நீராடிவிட்டு கரைசேர்ந்தவேளை பிரஸ்தாப நபரைக் காணவில்லை.

இதனையடுத்து பிரஸ்தாப நபர் நீராடிக் கொண்டிருந்த இடத்தை சென்று பார்த்தவேளை அவர் நீரில் மூழ்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் உறவினர்களால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில்,

சம்பவஇடத்துக்குவிரைந்தபொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். (செ-2,15, 283, 312)

## 12 சந்தேக...

மூலங்களை வழங்கினால் விசாரணைகளை துரிதகதியில் முன்னெடுக்க முடியும் என நம்பிக்கை வெளியிட்டார்.

அத்துடன் கடந்த காலங்களில் நீதிமன்றத்துக்கு குற்றப்புலனாய்வு பிரிவினரால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பெரும்பாலான அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளதாகவும் ஒரு சில அறிக்கைகள் மிகவிரைவில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (செ-4)

## சர்வதேச நீதிபதி...

ஜெனிவா பரிந்துரைகளுக்கேற்ப சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்றல் தொடர்பில் நாட்டில் எல்லா தரப்பினருடனும் கலந்துரையாடி அரசாங்கமே முடிவெடுக்க வேண்டுமெனவும், ஆனால் அவ்வாறு சர்வதேச நீதிபதிகள் பங்குபற்ற வேண்டுமென கூட்டமைப்பு அரசை வலியுறுத்தாது எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளதாக மேற்படி ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் செய்தி தொடர்பில் ரிவிர ஊடகத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இன்று இந்நாட்டில் பலமானதொரு நீதித்துறை நிலவுவதாகவும், தொலைபேசி மூலம் தீர்ப்பு வழங்கும் நீதிப்பொறிமுறை இன்று காணப்படவில்லை என்றும், இந்த நீதித்துறையினூடாக யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சுயாதீன விசாரணையொன்றினை மேற்கொள்ள முடியும் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் நிறுவவிருக்கும் பொறிமுறையில் எந்த விதத்திலும் (மட்டத்திலும்) வெளிநாட்டு நீதிபதிகள் சம்பந்தப்படமாட்டர்கள் என்று அரசாங்கம் உறுதியளிக்கிறது என்று கூறப்பட்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கூற்று தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாட்டை பற்றி வினவியபோதே சம்பந்தன் இக்கருத்துக்களை தெரிவித்திருந்தார்.

ஜெனிவா பரிந்துரைகளை நிறைவேற்றும் விதத்தில் இந்த உள்நாட்டுப் பொறிமுறை அமைய வேண்டும். இதுவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடும் ஆகும். இந்த பொறிமுறையில் ஜெனிவா பரிந்துரைகளுக்கேற்ப சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்றல் தொடர்பில் நாட்டில் எல்லா தரப்பினருடனும் கலந்துரையாடி அரசே முடிவெடுக்க வேண்டும். ஆனால் அவ்வாறு வெளிநாட்டு நீதிபதிகள் பங்குபற்ற வேண்டுமென கூட்டமைப்பு அரசை வலியுறுத்தாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் இந்நாட்டின் நீதித்துறை மீது தாம் நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தாலும் அரசியல் ரீதியாக பார்த்தால் இவ்விசாரணை நீதியான முறையில் நடைபெறும் என்று தான் நம்பவில்லை எனவும் சம்பந்தன் தெரிவித்துள்ளதாக மேலும் இச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவா பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இதற்கான உத்தேச பொறிமுறைகளில் வெளிநாட்டு நீதித்துறை ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் தாம் அரசாங்கத்தை வலியுறுத்தவுள்ளதாக தமிழ் மக்கள் மத்தியில் பேசி வந்த கூட்டமைப்பின் தலைமை தமது முன்னைய நிலைப்பாட்டுக்கு மாறாக தென்பகுதி ஊடகமொன்றுக்கு இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பது இங்கு முக்கியமாக கவனிக்கத்தக்கது ஆகும். (செ-9,11)

# அரசாங்கத்தின் பொறுப்புக்கூறல் பொறிமுறை நம்பிக்கை அளிப்பதாக இருக்க வேண்டும்

## த.தே.கூட்டமைப்பிடம் அமெரிக்கா தெரிவிப்பு

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள பொறுப்புக்கூறல் பொறிமுறை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்க வேண்டியது அவசியம் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் மற்றும் ஜனநாயகம், மனிதவுரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் ரொம் மாலினோவ்ஸ்கி ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த நிஷா தேசாய் பிஸ்வால் மற்றும் ரொம் மாலினோவ்ஸ்கி ஆகியோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பின் பிரதிநிதிகளை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரின் வதிவிடத்தில் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இச்சந்திப்பின்போதே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர்களான நிஷா தேசாய் பிஸ்வால் மற்றும் ரொம் மாலினோவ்ஸ்கி ஆகியோர் மேற்கண்டவாறு தம்மிடம் தெரிவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்புத் தொடர்பில் சுமந்திரன் ஊடகங்களுக்கு தகவல் வெளியிடுகையில்,

இலங்கையில் கடந்த ஆண்டு இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னரான நிலைமைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக புதிய அரசியலமைப்பு விவகாரம், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பில் விரிவான பேச்சு நடத்தினோம்.

பொறுப்புக்கூறல் பொறிமுறையில் சர்வதேசத்தின் பங்களிப்புத் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் தரப்புக்குள் மாறுபட்ட கருத்துக்கள் வெளியாவதை அவதானித்துள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர்கள் தெரிவித்தனர்.

பொறுப்புக்கூறல் பொறிமுறை உருவாக்கப்படும் போது இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் பேசவுள்ளதாகவும், இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்படவுள்ள பொறுப்புக்கூறல் பொறிமுறை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாக இருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

பொறுப்புக்கூறல் பொறிமுறை தொடர்பில் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் வெற்றி பெறுவதற்கு சர்வதேசத்தின் பங்களிப்பு தொடரும் என்று அவர்கள் எம்மிடம் உறுதியளித்துள்ளனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணிகள் விடுவிப்பு தொடர்பிலும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச் செயலாளர்களுடன் நாங்கள் விரிவாக பேசியுள்ளோம்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்ட பல விடயங்கள் தொடர்பில் நம்பிக்கை தரக்கூடிய முன்னேற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை என்பதை நாங்கள் அவர்களுக்கு சுட்டிக் காட்டினோம். இது தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் தாங்கள் ஏற்கெனவே கலந்துரையாடியதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் சிக்கல்களை எதிர்கொண்டால், அது தொடர்பில் உதவுவதற்கு அமெரிக்கா தயாராக இருப்பதாக இலங்கை அரசாங்கத்துக்கு உறுதியளித்துள்ளோம் என எம்மிடம் அவர்கள் தெரிவித்தனர்" என்று ஊடகங்களுக்கு சுமந்திரன் மேலும் கூறியுள்ளார். (செ-11)

## தமிழர்கள் சமஷ்டி...

மையினை எதிர்பார்த்து செயற்பட்டு வருகின்றது. எனினும் இலங்கையில் ஒருபோதும் சமஷ்டி என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆகவே சமஷ்டியை உடனடியாக கைவிட்டு ஒன்றிணைந்து எதிர்கால ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்ப முன்வர வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அதிகார பகிர்வு தொடர்பில் தமிழர் தரப்பு சர்வதேச பிரதிநிதிகளிடம் வலியுறுத்திவரும் நிலையில் இது தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் நிலைப்பாட்டை ஊடகங்கள் வினவியபோதே கட்சியின் பொதுச் செயலாளர்சம்பிக்க ரணவக்க மேறகண்டவாறு குறிப்பிட்டார்.(செ-11)

## காலநிலை...

மாற்றங்களை எதிர்பார்க்க முடியும்.

குறிப்பாக மத்திய மலைநாட்டில் மழையுடன் கூடிய காலநிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், வடமேல் மாகாணம் மற்றும் காலி, மாத்தறை மாவட்டங்களிலும் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என தெரிவித்துள்ளது.

மேலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பிற்பகல் வேளைகளில் மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (செ-11)

## மேற்குலகம்...

ள்ள அவரது காரியாலயத்தில் வைத்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனது ஆட்சியில், மேற்குலகத்தின் அழுத்தத்தினை எதிர்கொண்டு அவர்களின் எதிர்ப்பார்ப்புக்களை சிதைத்து, அவர்களின் கோரிக்கைக்கு அடிபணியாமல் செயற்பட்டமைக்காகவே தான் பழிவாங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# 12 சந்தேக நபர்களுக்கு...

உத்தரவிட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது கடந்த வழக்கு தவணையின்போது குறித்த மாணவி வசித்த இடத்திற்கு பொறுப்பாக இருக்கும் கிராம சேவகர் அங்குள்ள மக்கள் தொகை, கொலை நடைபெற்ற போது இருந்த மக்களின் எண்ணிக்கை, விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என நீதவான் உத்தரவிட்டிருந்தார்.

அதற்கு அமைய நேற்று வழக்கு தவணைக்கு பிரசன்னமாகிய ஜே-24 பகுதிக்கு பொறுப்பான செல்லத்துரை சிவா என அழைக்கப்படும் கிராமசேவகர் மன்றில் தோன்றி புங்குடுதீவு தென்கிழக்கு பகுதி தொடர்பிலான விபரங்களையும், மாணவி வித்தியா படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் இருந்த 30 குடும்பங்களின் விபரங்களையும் படுகொலை நடை பெற்ற பின்னர் தற்போது உள்ள 31 குடும்ப விபரங்களையும் ,பின்னர் அப்பகுதியை விட்டு வெளியேறிய இரு குடும்பங்களின் விபரங்களையும் நீதிவான் முன் சமர்ப்பித்து விளக்கமளித்தார்.

பின்னர் மன்றில் ஆஜரான குற்றப்புலனாய்வு அதிகாரி நீதவானிடம் குறித்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் வழங்கியுள்ள வாக்கு மூலங்கள்ள விசாரணை செய்வதற்கு சமர்ப்பிக்க ஏற்பாடு செய்து தருமாறு கேட்டார்.

இதன் போது நீதவான் சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் இது தொடர்பில் ஆராய முடியும். அதுவரை மன்றில் உள்ள சந்தேக நபர்களின் வாக்கு மூலங்களை வழங்க முடியாது என மறுத்தார்.

இதன்போது தனது கருத்தை தொடர்ந்த அவ் வதிகாரி குறித்த வாக்கு

23ஆம் பக்கம் பார்க்க....


Architectural CAD Center
Prsonal and Group Classes
Jaffna - Vavuniya - Colombo
Auto CAD
2D-drawing & 3D Modeling
Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD [Software (2D &3D)]
University of Peratheniya
Cert. in Auto CAD [Advance 3D - Modeling]
University of Moratuwa
Cert. in Auto CAD [2D-Drawing & 3D-Modeling]
Open University of Sri Lanka
Cert. in Auto CAD(1st Class)[2D&3D]
University of Colombo
Link:0775116320-0718617972
(C-5185)

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials. (BOOK 11
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
(C-5187)
IELTS Life Skills
திருமணம் செய்து நிரந்தர வீசாவில் UK செல்பவர்களுக்கானது, 2016 புதிய நடைமுறை-க்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
உடனுக்கு உடன் பரீட்சைகள், பதிவுகள்
(சான்றிதழ் 7 நாட்களில்)
இம்மாத இறுதியிலும் பரீட்சை செய்யமுடியும்
British Council'S
IELTS Registration Centre
Spoken English
(Veta Fluency Diploma)
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 021 222 4403 Hot Line :0777173517
நெல்லியடி 021 226 2470 | சாவகச்சேரி 021 227 0775 | சுன்னாகம் 021 224 1970 | கிளிநொச்சி 021 228 5655

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
FRENCH பிரெஞ்சு மொழி
உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!
(5202)
☎ 021 222 8093
61, கச்சேரி - நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.

CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

(C-5183)
CNR World wide Express
No.401 Clock tower road, Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)
அழையுங்கள் - 077 29 31 062

Sunjeya உணவகம்
மீண்டும் கூழ் சண்ஜெயா உணவகத்தில்!
ஒவ்வொரு புதன் (இன்று) மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 11.00 மணி தொடக்கம் ஒடியல் கூழ் சுவைத்து மகிழுங்கள்.
சகலவித சைவ, அசைவ உணவு வகைகளும் உண்டு
Sunjeya Foodland
No,713, Hospital Road, Jaffna.
Contact No :- 021 221 70 70 / 077 222 13 79
(C-5173)


# நல்லிணக்கம் நிலை...

விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த செவ்வாய் கிழமை மாலை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் நிஷா தேசாய் பிஸ்வால் குறிப்பிடுகையில், இலங்கையில் இடம் பெற்ற போருக்குப் பின்னரான நல்லிணக்க செயல்முறைகளை முன்நோக்கி நகர்த்துவதற்கு இலங்கை அரசாங்கத்தின் பங்காளராக இணைந்திருப்பதற்கு அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது.

ஆயினும், பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் அர சாங்கம் இன்னும் அதிகமான பணி களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அரசாங்கம் இப்பணிகளை நிறைவேற்ற அமெரிக்கா உதவத் தயாராகவுள்ளது.

அமெரிக்காவும், இலங்கையும் பொதுவான இலக்குகளை கொண்டுள்ளன. எமக்கிடையில் எல்லாக் காலத்திலும் வலுவான உறவுகள் இருந்து வருகின்றன. இவ்விரண்டு நாடுகளுக்கும் இடையிலான இந்த ஆழமான உறவுகளை அமெரிக்கா வரவேற்கிறது.

ஜனநாயக ஆட்சி, மனிதவுரிமைகளுக்கு கூடுதல் மதிப்பளித்தல், நல்லிணக்கம், நீதி, பொறுப்புக்கூறல் போன்ற தமது மக்களின் கரிசனைகளுக்குப் பதிலளிக்க இலங்கை மேற்கொள்ளும் உறுதியான நகர்வுகளுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு அளிக்கும்.

இலங்கையில் நாம் பல்வேறு துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வோம். கல்வி, சுகாதாரம், மின்சாரம், இயற்கை வளங்கள், மனிதாபிமானச் செயற்பாடுகளிலும் தொடர்ந்து ஈடுபடுவோம்.

தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை முக்கிய பங்கு வகிக்கும் நிலையில் இந்து சமுத்திரத்தின் பாதுகாப்பு மற்றும் சாசனத்தினை பாதுகாப்பதற்குரிய எதிர்காலம் ஒன்றை பெற்றுக்கொள்வதன் மூலம், இரு நாடுகளுக்கும் இடையில் பரஸ்பர நன்மைகள் கிடைக்கும்.

இலங்கையர்களை முன்னேற்றுவதற்குத் தேவையான பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும், வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கவும் இலங்கை அரசாங்கத்துடன் அமெரிக்கா இணைந்து செயற்படும் என்று அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார். (செ-11)

# கேரள கஞ்சாவுடன்...



கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 4 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சாவகச்சேரி கச்சாய் வீதியை சேர்ந்த 34 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பகுதியில் இருந்து யாழ் நகர் நோக்கி கஞ்சா கொண்டு வரவுள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்தே மேற்படி நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# இலங்கை உள் விவகார...

போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், இலங்கையின் தற்போதைய அரசாங்கம் தாமாக முன்வந்து சர்வதேச சமூகத்துக்கு பல வாக்குறுதிகளை வழங்கியுள்ளது.

இது இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிட சர்வதேச சமூகத்துக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதனால் பொறுப்புக்கூறல் உள்ளிட்ட விடயங்களில் சர்வதேச சமூகம் அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது மேறகொள்ளப்பட்டதாக கூறப்படும் போர்க குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பிலான பொறுப்புக் கூறல் பொறிமுறையில் சர்வதேசத்தின் பங்களிப்பு அவசியம் என பிரித் தானியாவின் வெளிவிவகார மற்றும் பொதுநலவாய பணியகத்தின் இணை அமைச்சர் ஹியூ கோஸ்வயர் கடந்த வாரம் வலியுறுத்தியுள்ளார்.

இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோருக்கு ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் மூலமாக தாங்கள் வலியுறுத்தி வருகிறோம் எனவும், இந்தச் செய்தி இலங்கை அரசாங்கத்தால் மதிக்கப்படும் என்று தாங்கள் நம்புவதாகவும் அவர் தனதுரையில் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் கடந்த ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத் தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலேயே, அமெரிக்காவின் மேலதிக நிதி உதவிகள், வர்த்தக மற்றும் இராணுவ சலுகைகள் தங்கியுள்ளது என்பதை இலங்கை அரசாங்கத்துக்கு தெளிவான எடுத்துரைக்க வேண்டும் என அமெ ரிக்க காங்கிரஸின் 24 உறுப்பினர் கள் அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

அதேபோன்று, பொறுப்புக்கூறல் பொறிமுறையின்சுயாதீனமானதும், நம்பிகையானதுமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு சர்வதேச பங்களிப்பு அவசியம் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு இலங்கையின் உள்ளக விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையிடுவதற்கு தற்போதைய அரசாங்கம் கதவுகளைத் திறந்து கொடுத்துள்ளது என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (செ-11)


பண்பாட்டு மலர்ச்சிக்கூடம் தொடக்கவிழா

தமிழ்ச் சமூகத்தில் நிலவும் பண்பாட்டுச் சீரழிவை தடுத்து நிறுத்தவும், ஆளுமை மிக்க தமிழ்ச் சமூகத்தை தோற்றுவிக்கவும் பண்பாட்டு மலர்ச்சிகூடம் ஆரம்பிக்கப்படுகின்றது.

இத்திட்டம் யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன் தலைமையில்
அரங்க செயற்பாட்டுக் குழுவால் நடாத்தப்படுகிறது.

இடம் :- 7, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (பிள்ளையார் கோவில் அருகாமை)
காலம் :- 19.07.2016 செவ்வாய்க்கிழமை

நிகழ்ச்சி நிரல்
9.30 - 12.30 - அரங்கின் சமூகப்பயன்கள் பற்றிய கருத்தாடல் அரங்கு
4.00 - 7.00 - ஆற்றுகை நிகழ்வுகள்

1. சிறுவர்களின் வில்லுப்பாட்டு
2. மட்டக்களப்புக் கூத்து - செயல் விளக்கம் பேராசிரியர் சி.மௌனகுருவும குழுவினரும்
3. உயிர்ப்பைத் தேடி சக்தியை பகிரும் ஆற்றுகை நிகழ்ச்சி

பிரவேசம் இலவசம் எனினும் அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.


# தகவல் உரிமைச் சட்...

சபாநாயகர் திலங்க சுமதிபால, அவை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல, அமைச்சர்கள் விஜேதாச ராஜபக்ஷ, சுசில் பிரேம் ஜெயந்த, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்காவின் ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச்செயலர் ரொம் மாலினோவ்ஸ்கியும் கலந்து கொண்டார்.

தகவல் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றுமாறு இலங்கை அரசாங்கத்திடம் அமெரிக்கா நீண்டகாலமாக வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-20

பகுதி-II **தமிழ்க் கல்விக் கழகம்** நேரம்:- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

01) பின்வரும் கவிதையை வாசித்து வினாக்களுக்கு கவிதையில் இருந்து விடை தருக.

1.
செக்கச் சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான்- ஒளி
மக்கள் கண் விழித்திட
வானில் உதித்து விட்டான்

2.
கொக்கரக் கோவெனக் கோழியுங் கூவுது
கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது

1.இக்கவிதையில் வர்ணிக்கப்படும் காட்சியை எழுதுக.

........................................................................

2.கங்குல் என்பதன் ஒத்த கருத்து யாது?

........................................................................

3.இங்குள்ள ஓர் உவமானத்தை எழுதுக?

........................................................................

4.மேற்கு எனும் சொல்லுக்கு எதிர்க்கருத்து யாது?

........................................................................

5.பெயரடை மொழி ஒன்றினை எழுதுக?

........................................................................

........................................................................

6.இப்பாடலில் குறிப்பிடப்படும் இரு பறவைகள் எவை?

........................................................................

7.தொக்கி நின்றது எது?

........................................................................

02) பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.

1.காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு

........................................................................

2.பாம்புக்கு பால் வார்த்தால் போல்

........................................................................

03) கீழே தரப்பட்டுள்ள இரு வாக்கியங்களை ஒரு வாக்கியமாக எழுதுக

1.கவிதா சந்தைக்குச் சென்றாள்

2.பாத்திமா சந்தைக்குச் சென்றாள்

........................................................................

04) எழுத்துப் பிழையற்ற சொல்லின் கீழ்க் கீறிடுக

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஒலிக்கீற்று | ஒளிக்கீற்று | ஒளிக்கீட்று | ஒழிக்கீற்று |
| 2. | கள்ளுரி | கல்லூரி | கழ்லூரி | கள்ளூரி |

05) தொடர் மொழிக்கு ஒரு மொழி தருக

1.யானையைக் கட்டுமிடம்........................................................................

2.இருபொருள் அமையத் தொடுப்பது........................................................................

06) ஒருமை வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக எழுதுக.

1.சேவல் அதிகாலையில் கூவியது

........................................................................

பன்மை வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக எழுதுக.

2. தம்பிமார் நேரத்தோடு பாடசாலைக்குச் சென்றார்கள்

........................................................................................................

07) விடுகதையின் கருத்தினை எழுதுக.

1.உனக்குச் சொந்தமானது. ஆனால் உன்னை விட அதிகமாக மற்றவர்களே உபயோகிப்பர் அது என்ன?

........................................................................................................

2.அழைக்கும் போது உரக்கக் குரல் கொடுப்பான். பேசும் போது காதுக்குள் கிசுகிசுப்பான். அவன் யார்?

........................................................................................................

08) பின்வரும் தமிழ்ச்சொற்களுக்கான ஆங்கிலக் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1.முயல்.................................................. 2.காலை..................................................

09) பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

1.தயவுசெய்து நுழைவாயிலை மூடவும்..................................................

10) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் தருக.

1.Please stop there..................................................

2.I am going out..................................................

3.I will work slowly..................................................

11) வெள்ளை நிறம் என்பது சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக

........................................................................................................

பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

1.ஒபகே கம கொஹேத..................................................

2.சீயா வத்துர பொன்ன..................................................

**பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க்கோடிடுக**

12) வித்துக்கள் நீக்கியபின் சமைக்கும் காய்கறி

1.பாகற்காய் 2.வெண்டி 3.வாழை 4.போஞ்சி

13) அதிக சளி, சுரம் உள்ள ஒருவருக்கு எந்த இலையினை பயன்படுத்தினால் சளி,சுரம் குறையும்

1.தூதுவளை 2.வட்டுக்கத்தரி 3.எலுமிச்சை 4.நாயுருவி

14) மரங்களில் காணப்படும் மரப்பொந்துகளில் தமது வாழிடத்தை அமைக்கும் பிராணி

1.அணில் 2.குரங்கு 3.ஆந்தை 4.கழுகு

15) வேருடன் பயிர்களை பிடுங்கி உண்ணும் பிராணி

1.ஆடு 2.மாடு 3.குரங்கு 4.யானை

16) மூங்கிலைப் பயன்படுத்தி செய்யும் உபகரணம்

1.கிற்றார் 2.வயலின் 3.வீணை 4.புல்லாங்குழல்

17)



இவ்விலச்சினை குறிப்பது

1.ஸ்ரீலங்கா ரெலிக்கொம் 2.இலங்கை மின்சார சபை

3.இலங்கை போக்குவரத்துச் சபை 4.இலங்கை வர்த்தகம்

18) அழகிய ஒளிவட்டம் கொண்ட கோள் எது?

1.சனி 2.சுக்ரன் 3.வியாழன் 4.புவி

19) வர்த்தகப் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்தும் இலங்கையின் இலட்சினை

1.SLZ 2.ISO 3.SLS 4.SLDA

20)  இச்சிங்கள அலங்காரத்தின் பெயர் என்ன?

1.அரசிலை 2.அரும்பு 3.தனியிலை 4.கல்பிந்து

21.) திண்மம், திரவம்,வாயு ஆகிய மூன்று நிலைகளிலும் காணப்படும் ஒரு பொருள்

1.மண் 2.நீர் 3.கல் 4.பசளை


22) நத்தார் இடம்பெறும் மாதம் எது?

1.ஜனவரி 2.ஏப்ரல் 3.நவம்பர் 4.டிசெம்பர்

23) கந்தளாய்க்குளத்தை கட்டிய மன்னன் யார்?

1) 2ம் அக்போ 2) முகலன் 3) தாதுசேனன் 4) வசபன்

24) மின்குமிழின் D குறிக்கும் பெயர் யாது?




1.கண்ணாடி 2.தங்குதன் இழை 3.ஈயமுடிவிடம் 4.பித்தளை மூடி

25) நெல் வயலில் நிலத்தை மட்டப்படுத்த பயன்படுத்தும் உபகரணம் எது?

1.பட்டடை 2.பரப்பும்பலகை 3.மட்டப்பலகை 4.மணியாசு

26) புடைவையில் தார்க் கறைபட்டால் எதனால் நீக்கிக்கொள்ளவேண்டும்?

1.தேங்காயெண்ணெய் 2.சவர்க்காரம் 3.பெற்றோல் 4.மண்ணெண்ணெய்

27) கண்நோய் வருவதற்கு காரணமாக அமையும் பிராணி எது?

1.ஈ 2.அசுத்த நீர் 3.நுளம்பு 4.கரப்பான்பூச்சி

28) சிங்கராஜவனம் அமைந்துள்ள மாவட்டம் எது?

1.கொழும்பு 2.அம்பாறை 3.இரத்தினபுரி 4.காலி

29) சுண்ணாம்பு சாந்தை சுவரில் பூசுவதற்கு உதவும் கருவி யாது?

1.நீர்மட்டம் 2.மணியாசு 3.மட்டக்கம்பு 4.தூக்குக்குண்டு

30) ஒரு மனிதனின் அடிப்படைத் தேவையாக அமைவது

1.உணவு 2.உடை 3.உறையுள் 4.மேற்கூறிய மூன்றும் சரி

31) சைக்கிள் வண்டிக்கான அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ள செல்ல வேண்டிய இடம்

1.பிரதேச செயலகம் 2. பிரதேசசபை 3.நகரசபை 4.கிராம சேவகர் அலுவலகம்

32) நீரில் வித்தை காட்டும் பிராணி எது?

1.டொல்பின் 2.சுறா 3.திமிங்கிலம் 4.திருக்கை

**பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


33) 2212 2112 2012 2312


இவ்வெண்களை ஏறுவரிசையில் மீண்டும் எழுதுக.

........................................ ........................................

........................................ ........................................


34) A வகுப்பில் 32 பிள்ளைகள் உள்ளனர். ஒரு பிள்ளைக்கு 4 கொப்பிகள் வீதமும் B வகுப்பில் 30 பிள்ளைகள் உள்ளனர். ஒரு பிள்ளைக்கு 5 கொப்பிகள் வீதமும் வழங்கப்பட்டது. மொத்தமாக வழங்கப்பட்ட கொப்பிகள் எத்தனை?........................................................................................................

35)  நிழற்றப்படாத பகுதி முழு உருவின் என்ன பின்னமாகும்?

36)  இதனைக் கொண்டு உருவாக்கக்கூடிய திண்மம் யாது?

37) ஒரு பாத்திரத்தில் 21 500 ml வர்ணப்பூச்சு உள்ளது. அதிலிருந்து 750 ml சுவரில் பூசப்பட்டது. மீதியாக உள்ள வர்ணப்பூச்சு எவ்வளவு?..................................................................................

**பின்வரும் படத்தை அவதானித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.**




38) நுழைவாயிலில் இருந்து அலுவலகத்தின் ஊடாக வகுப்பறைக்கான தூரம் யாது?...........................


39) தேயிலை 1kg ரூபா 400.00 ஆகும். எனின் 750g தேயிலையின் விலை யாது?...........................

40) ஒரு வருடத்தில் எத்தனை 30 நாட்களைக் கொண்ட மாதங்கள் உள்ளன?...........................

41) 8006, 2489, 8874, 5068 இவ்வெண்களை இறங்கு வரிசையில் எழுதுக?...........................

42) 425 நாவற்பழங்களைக் கொண்ட ஒரு குவியல் 5 பேரிடையே சமமாகப் பகிரப்பட்டது. ஒருவருக்கு கிடைத்த நாவற்பழங்கள் எத்தனை?...........................

43) 0.3 தசம எண்ணை பின்னத்தில் தருக?...........................

44) 

இச்செவ்வகத்தின் சுற்றளவு 34 cm எனின் இச் செவ்வகத்தின் நீளம் எத்தனை சென்ரிமீற்றர்?

45) குமார் பாடசாலைக்குச் செல்லும்போது புற்று ஒன்றில் இருந்து ஒரு பாம்பைக் கண்டான்............... நீர்தான் குமார் எனக்கருதி மூன்று வாக்கியம் எழுதுக.

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வெள்ளிக்கிழமை (15.07.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆

**தமிழ்க் கல்விக் கழகத்தின் ஆசிரியர் குழாம்**

★யோகராசா - துஷ்யந்தன் (இயக்குநர்)

★அ.நிமலகாந்தன் (யா/இணுவில் மத்திய கல்லூரி)

★றோ.சிவபுத்திரன் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

★G.மோகன்ராஜ் (ISA வலயக்கல்விப் பணிமனை, நுவரெலியா)

★K.L.M.நபீல் (ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை, ஹம்பாந்தோட்டை)

★M.S.குகன் (யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம்)